










# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 369 • 19 மே 2017 வெள்ளிக்கிழமை • ஷஃபான் 1438 • விலை 40.00



RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் 0777 777 761
0777 674 941


# வீடு திரும்பும் தோப்பூர் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை


தோப்பூர் செல்வநகர் மீனாக்கேணி பிரதேசத்தில் நிலவிய பதற்ற நிலை தணிந்ததைத் தொடர்ந்து பிரதேச மக்கள் வீடு திரும்பத் தொடங்கியுள்ளனர். சேருவிலைக்கும் தோப்பூருக்கும் இடையில் உள்ள செல்வநகரில் முஸ்லிம்கள் பூர்வீகமாகப் பயிர் செய்து வந்த காணிகளை அபகரிப்பதற்காக பௌத்த பிக்குவின் தலைமையில் வந்த குழுவினர் நிகழ்த்திய அடாவடித்தனத்தின் விளைவாக செல்வநகர் முஸ்லிம்கள் பாதுகாப்புக் கருதி தோப்பூருக்கு இடம்பெயர்ந்திருந்தனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலை காரணமாக இவர்கள் தற்போது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். இந்தச் சம்பவங்களின் போது மூவர் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட தோப்பூர் பகுதி யைச் சேர்ந்த கிராமங்களில் செல்வநகர் கிராமம் மாத்திரமே சேருவில பிரதேச சபையின் கீழ் வருகிறது. செல்வநகர் கிராமத்தில் முஸ்லிம்களே பெரும்பான்மையாக வசித்து வருகின்றனர்.

1932 ஆம் ஆண்டிலிருந்து வரையப்பட்ட காணி உறுதிகள் இம்மக்களிடம் காணப்படுகின்றன. இவர்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கில் பௌத்த இனவாதிகளால் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை தொடர்ந்து அவரவர்களது உறுதிக் காணிகளுக்கு வேலி அடித்து பிரித்துக் கொள்வது (பக்.14)



## நல்லிணக்கச் செயற்பாடுகள் பாதிக்கப்பட மாட்டாது



தனது அமைச்சில் குழப்பம் விளைவித்த ஞானசார தேரர் குழுவினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக தேசிய நல்லிணக்கத்துக்கான உரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தற்பொழுது இந்த அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு இதன்போது அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட போதும் நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தனது அமைச்சின் முயற்சிகளில் எந்த விதப் பாதிப்பும் ஏற்படுத்த தான் இடமளிக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் மீள்பார்வைக்குத் தெரிவித்தார்.

## வென்னப்புவ கடைத்தொகுதி தீக்கிரை: 9 கோடி இழப்பு

(அனஸ் அப்பாஸ்)

நேற்று அதிகாலை வென்னப்புவையில் தீப்பிடித்து எரிந்த லாஸ்ட் சான்ஸ் அலங்கார விளக்குகள் கடைத்தொகுதி சம்பவம் மின்னொழுக்கு காரணமாக ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை என்றும் திட்டமிட்ட நாசகாரச் செயற்பாடே இதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும் தெரிய வருகிறது.

வென்னப்புவ பிரதேசத்தில் நாளிர் ஹாஜியாருக்குச் சொந்தமான இந்த அலங்கார விளக்குக் கடையுடன் ஒரு சில முஸ்லிம் கடைகளே இருக்கின்றன. இந்தக் கடைக்கு அடுத்தபடியாக சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான மற்றுமொரு இலத்திரனியல் பொருட்கள் விற்பனை செய்யும் கடையும் இங்கு இருக்கிறது. இலத்திரனியல் கோளாறு என்று காரணம் காட்டவே பலரும் முற்படுகின்றனர். (பக்.14)

## எட்காவுக்கான முன்னோடியே மலையகத்துக்கு இந்திய ஆசிரியர்கள்

கிழக்கு மாகாணத்தில் 4,000 க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்றிருக்கும் பொழுது மலையகத்தில் கணித, விஞ்ஞானப் பாடங்களுக்கு இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்படவிருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையை இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எதிர்த்துள்ளது. (பக்.14)



## சுயாதீன ஆணைக்குழுக்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில்

19வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இந்த ஆணைக்குழுக்களுக்கான புதிய முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. (பக்.14)



## முஸ்லிம் தனியார் சட்டம் திருத்தப்படவில்லை

### GSP+ வரிச்சலுகை இன்று முதல் அமுல்

ஐரோப்பிய யூனியனால் இலங்கைக்கு வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்ட ஜீஎஸ்பீ வரிச்சலுகை இன்று முதல் அமுலாகும் என ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது. ஐரோப்பிய யூனியனின் அதிகாரி களால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இது அறிவிக்கப்பட்டது. கடந்த அரசாங்க காலத்தில் தடைப்பட்டிருந்த ஜீஎஸ்பி வரிச் சலுகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை பல நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டியிருந்ததாக முன்னதாக கூறப்பட்டது. இலங்கைக்கு இந்த வரிச் சலுகை கிடைக்கப் பெறுவதற்கு முஸ்லிம் தனியார் சட்டம் திருத்தப்பட வேண்டும் என சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க ஊடகவிய லாளர் மாநாடொன்றில் தெரிவித்திருந்தார். (பக்.14)


Rusan Trade Centre

211-213 Second Cross Street, Colombo - 11.
Tel : +94 11 2389399 Fax : +94 11 2438596
E-mail : ilhamrtc@gmail.com

NCH New City Hardware
உங்களுக்குத் தேவையான தரமான உபகரணங்களுக்கு நாடுங்கள்

58, Messeger Street, Colombo - 12
Tel: 011-4377931, 011-5830188, 011-4377934
Fax: 011-2334671 Email: newcity@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடி ஏன் வந்தார்?

- ஜுனைத் எம். ஹாரிஸ்

இம்முறை இலங்கையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் வெசாக் தின விழாவில் பௌத்த நாடுகளான சீனா அல்லது ஜப்பானின் அரச தலைவர்கள் பங்கேற்றிருக்கலாம்தானே...ஏன் மோடி வந்தார்..? என்ன காரணம்..?

மோடி வடக்கிற்கும் போகவில்லை, தமிழர்கள் சம்பந்தப்பட்ட அல்லது இலங்கை-இந்திய உறவுகளில் சிக்கலாக இருக்கும் விடயங்கள் சம்பந்தமான விடயங்களில் அந்தளவுக்கு கவனம் செலுத்தவும் இல்லை.




## சிலாவத்துறை கடற்படை முன்பாக முசலி மக்கள் ஆர்ப்பாட்டம்



சிலாவத்துறையில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் பூர்வீகக் காணிகளை நில அளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யும் பணி இன்று காலை ஆரம்பிக்கப்படவிருந்ததை எதிர்த்து முசலிப் பிரதேச மக்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அப்பணி தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.


சிலாவத்துறையின் மக்கள் குடியிருப்புப் பகுதியிலுள்ள சுமார் 34 ஏக்கர் பரப்பளவுள்ள காணியில் சுமார் 6 ஏக்கர் பரப்பளவுள்ள காணியை விடுவித்து மிகுதிக் காணியை கடற்படையினர் சுவீகரிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இன்று மக்கள் வீதியில் இறங்கிப் போராடினர்.

காணி அளவீடு செய்ய வந்த நில அளவைத் திணைக்கள அதிகாரிகளின் வாகனத்தை கடற்படை முகாமுக்குள் செல்ல விடாமல் மக்கள் வாகனத்தின் முன் வீதியில் படுத்துக் கொண்டனர். சிலாவத்துறை பொலிசாரும் கடற்படை அதிகாரிகளும் சில நிமிட நேரங்கள் மக்களுடன் சமரசத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் போராட்டத்தையடுத்து சிலாவத்துறை பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் சிலாவத்துறை கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் மூலம் எழுத்து மூல எதிர்ப்பு ஆவணத்தைப் பெற்றுக் கொண்ட நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் காணி அளவீடு செய்வதை இடைநிறுத்தி திரும்பிச் சென்றனர்.

இதன் பின்னரே மக்கள் கலைந்து சென்றனர். இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த சிலாவத்துறை வர்த்தக சங்கம், சிலாவத்துறை ஆட்டோச் சங்கம், சிலாவத்துறை கிராம அபிவிருத்திச் சங்கம், சிலாவத்துறை பள்ளிவாசல் பரிபாலன சபை, முசலி பிரஜைகள் ஒன்றியம் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து சங்கங்களுக்கும் தனியாட்களுக்கும் சிலாவத்துறை மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

### அமைச்சர் பௌசி அவர்களே!



## சாத்தியமானால் உங்கள் மரணம் சரித்திரமாகும்!

- ஜெம்ஸித் அஸீஸ்

கடந்த வியாழன் (11). எல்லோரும் ''நிலாம் நானா'' என அன்பாக அழைக்கும் மூத்த ஊடகவியலாளர் எம்.ஏ.எம். நிலாம் அவர்களின் மூத்த புதல்வர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணித்த செய்தி கேள்விப்பட்டு வைத்தியசாலை சென்றேன்.

ஜனாஸாவை பிரேத அறைக்கு (Mortuary) அனுப்பி விட்டார்கள். பிரேத அறைக்கு வெளியே பலர் நின்றிருந்தனர்.

வைத்தியசாலை செயலொழுங்குகளை முடித்து இரண்டு மணித்தியாலங்களுக்குள் ஜனாஸா குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏற்கனவே வைத்தியருடன் தொடர்பு கொண்டு பேசியிருந்த சிரேஷ்ட அமைச்சர் பௌசியும் அவ்விடத்திற்கு வருகை தந்தார்.

அதிகாரிகளின் அனுமதி பெற்று அமைதியாக பிரேத அறைக்குச் சென்று ஜனாஸாவைப் பார்வையிட்டார்... பிரார்த்தித்தார்... ஆறுதல் சொன்னார்...

கௌரவ அமைச்சர் அவர்களே!

மரண வீடுகளுக்குச் செல்வது, ஆறுதல் சொல்வது உங்களது வழக்கம். நல்ல பழக்கம்.

''குருவி இறந்து போனாலும் அமைச்சர் பௌசி அங்கு நிற்பார்'' என்று பொது மக்கள் ஹாஷ்யமாக அளவளாவிக் கொள்ளும் அளவுக்கு நீங்கள் ஜனாஸாவுக்குரிய இறுதிக் கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறீர்கள்.

வாக்குகளை இலக்கு வைத்து நீங்கள் மரண வீடுகளுக்குச் செல்வதில்லை.

உங்கள் தேர்தல் தொகுதி அல்லாதவர் மரணித்தாலும் வீடு தேடிச் செல்வதை சகலரும் அறிவர்.

அது நீங்கள் உங்களுக்குள் வகுத்துக் கொண்ட பொலிஸியாக (கொள்கையாக) இருக்க வேண்டும். சகோதரத்துவம், மனிதநேயத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும்.

உள்ளங்களை அறிந்த அல்லாஹ் உங்கள் எண்ணத்துக்கு நிறைவான கூலியை தரப் போதுமானவன்.

கௌரவ அமைச்சர் அவர்களே! இந்த சந்தர்ப்பத்தில் உங்கள் மேலான கவனத்திற்கு இன்னும் சில விடயங்களை கொண்டு வர விரும்புகின்றேன்.

மரணித்தவரின் இறுதிக் கடமைகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் போலவே இன்னும் சிலவற்றுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

தற்போது பாராளுமன்றத்தில் முஸ்லிம்களில் நீங்கள்தான் பழுத்த அனுபவமுள்ள ஓர் அரசியல்வாதி.

இலங்கை அரசியல் வரலாற்றில் உங்களுக்கென்று தனியானதோர் அத்தியாயம் இருக்கிறது.

பிரிந்து நின்று பகைமை பாராட்டும் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களை ஒன்றிணைக்கும் பாலமாக நீங்கள் இருப்பது பற்றி சிந்திக்கலாம்!

முஸ்லிம்களின் உரிமை விடயத்தில் முஸ்லிம் பா. உறுப்பினர்களில் பெரும்பாலானோரை ஓர் உடன்பாட்டுக்கு கொண்டு வருவதில் முன்னின்று உழைக்கலாம்!

முஸ்லிம் பா. உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து பொது விவகாரத்தில் தீர்மானம் நிறைவேற்றும் முயற்சிகளுக்கு நீங்கள் தலைமைத்துவம் வழங்கலாம்!

பாராளுமன்ற வளாகத்தில் தேவையேற்படின் உங்கள் தலைமையில் கூடிக் கதைக்கலாம்!

முஸ்லிம் தேசிய கூட்டணியமைப்பது குறித்தும் யோசிக்கலாம்!

எல்லோரையும் விட மூத்தவர் நீங்கள். உங்கள் தலைமைத்துவத்தை மற்றவர்கள் ஏற்பதற்கு வாய்ப்புகள் அதிகம்!

இப்படி... இப்படி... சிந்திக்கலாம்! செயற்படலாம்!

மனித வாழ்க்கை குறுகியது. தற்காலிகமானது. மரணம் எப்போது யார் வீட்டுக் கதவைத் தட்டும் என்பதை யார்தான் அறிவார்?!

நீங்கள் ஓர் அரசியல்வாதி என்ற வகையில் உங்களுக்குப் பின் அடுத்த அரசியல் வாரிசை உருவாக்குவது பற்றிய கரிசனையோடு இருப்பது தெரிகிறது.

அது மலையில் மாடேற்றும் பணி. தயவுகூர்ந்து அதனை ஒருபுறம் வையுங்கள்.

மரண வீடுகளுக்கு... மரணித்தவர்களின் இறுதிக் கிரியைகளுக்கு... கொடுக்கும் முக்கியத்துவம் போலவே கொஞ்சம் கொஞ்சமாக மரணத்தின் விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக தூக்கி நிறுத்துவதற்கு நேரம் ஒதுக்குங்கள்!

மரணித்தவரின் இறுதிக் கிரியையில் பற்கேற்பது பர்ளு கிபாயா!

மரணத்தின் விளிம்பை நோக்கி நகரும் முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக தூக்கி நிறுத்துவது பர்ளு ஐன் என்றே எனக்குத் தோன்றுகிறது.

சாத்தியமானால் உங்கள் மரணம் சரித்திரமாகும்!

## திட்டமிட்டு கொச்சைப்படுத்தப்பட்ட முசலி மக்கள் போராட்டம்

- சுஹைல் ஷாம்

வனப் பிரகடனத்தினால் பாதிக்கப்பட்ட முசலி மக்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்படுகின்றது. அம்மக்கள் மார்ச் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பித்த பூர்வீகத்தை மீட்டெடுப்பதற்கான தூய போராட்டம் பின்நாட்களில் அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கிக் கொண்டது. பின்னர் ரிஷாதின் அ.இ.ம.கா. இதனை வைத்து பிழைப்பு நடத்தினர்.

மு.கா.வினர் அங்கு சென்றபோது அடாவடியில் ஈடுபட்டனர். (அதற்காக ஹக்கீம் தரப்பு மக்களுக்காக பாடுபட்டு தீர்வை பெற்றுக் கொடுக்க முயற்சிக்கிறது என அப்பட்டமாக பொய் கூற முடியாது. நடந்ததை ஒப்புவித்தேன்) நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு எதிராகவும் அறிக்கை விட்டனர்.

இவ்விடயத்தில் இன்றைய தினம் வரை அமைச்சர் ரிஷாட் ஜனாதிபதியையோ பிரதமரையோ நேரில் சந்தித்து நியாயம் கேட்கவில்லை. போலியாக மக்கள் மன்றில் கண்ணீர் வடித்து நாடகமாடித் திரிகின்றார். அவருடன் இணைந்து ஜனாதிபதியின் பகல் கொள்ளையை மூடி மறைக்க அரசியல் முகவரி தேடித் திரியும் அஸாத் சாலி முயற்சித்து வருகிறார். அத்துடன் பைஸர் முஸ்தபாவும் ஜனாதிபதிக்கு கூஜா தூக்கிக்கொண்டு அன்றொருநாள் முசலியை வலம் வந்தார்.



அந்தவகையில் கடந்த 7 ஆம் திகதி ஜனாதிபதியுடன் முஸ்லிம் கவுன்ஸில் உள்ளிட்ட சிவில் அமைப்புகள் ஜனாதிபதியை சந்தித்து விபரத்தை தெளிவுபடுத்தியதாகக் கூறப்பட்டது. இதனடிப்படையில் 10 ஆம் திகதி 25 இலட்சம் ரூபா செலவளித்து ஹெலிகொப்டர் மூலமாக அமைச்சர் பைசர் முஸ்தபா, அசாத் சாலி மற்றும் முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம். அமீன் உள்ளிட்டோர் மறிச்சிக்கட்டிக்கு சென்றனர். அங்கு அமைச்சர் ரிஷாட், மஸ்தான் எம்.பி. ஆகியோரும் இருந்தனர்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய இவ்விவகாரம் குறித்து 13 ஆம் திகதி உயர்மட்ட கலந்துரையாடலின் பின்னர் மக்களுக்கு நியாயமான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதியளித்ததன் பின்னர் போராட்டம் 44 நாட்களுக்குப் பின்னர் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. மறுநாள் இலங்கையின் இரு பிரதான நாளாந்த பத்திரிகைகளில் குறித்த விவகாரம் பிரதான தலைப்புச் செய்தியாக பிரசுரமானது.

எனினும் உறுதியளிக்கப்பட்டது போல் 13 ஆம் திகதி ஜனாதிபதி செயலாளர் அடங்கிய உயர் மட்டக் குழுவுடன் பேச்சுவார்த்தை ஏதும் நடைபெறவில்லை. ஏற்கனவே தூய போராட்டம் திசைதிருப்பப்பட்டு பின்னர் மக்கள் தெட்டத் தெளிவாக ஏமாற்றப்பட்டு விட்டனர். இச்சந்திப்பு இடம்பெறாமைக்கு காரணமாக கூறப்பட்ட விடயம் தான் அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் வெளிநாட்டுப் பயணம்.

உண்மையில் அமைச்சர் பைஸர் எதற்காக வெளிநாடு சென்றார் தெரியுமா? புத்தகயாவில் இடம்பெறும் வெசக் நிகழ்வை சிறப்பிக்க சென்றிருந்தார். அதுவும் ஜனாதிபதியின் பிரதிநிதியாக. முஸ்லிம்களுக்கு வாக்குறுதியளித்துவிட்டு இந்தப் பயணம் பைஸருக்கு தேவைதானா? அரசாங்கத்தில் எத்தனையோ பௌத்த அமைச்சர்கள் இருக்கும்போது பைஸர் தானா புத்தகயா வெசக் நிகழ்வுக்கு செல்ல வேண்டும்? இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதியாகும். மக்களை திட்டமிட்டு ஏமாற்றியிருக்கின்றனர்.

குறித்த உயர்மட்ட சந்திப்பு செவ்வாய் 16 நடைபெறும் என கூறப்பட்டது. எனினும் குறித்த உயர் மட்டக் குழு கூட்டம் இடம்பெறவில்லை என்றோ அல்லது நாளை கலந்துரையாடல் இடம்பெறும் என்றோ முக்கியத்துவம் அளித்து முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம். அமீனை பிரதம ஆசிரியராகக் கொண்ட நாளாந்த பத்திரிகையில் செய்தி பிரசுரிக்கப்படவில்லை. என்.எம். அமீன் நானாவின் மீது மிக்க மரியாதை இருக்கின்றது. அவர் நமக்கு அளிக்கும் உதவிகளும் எங்கள் மீதுள்ள கரிசனையும் அளவில்லாதவை. வெறுமனே வார்த்தைகளால் கூறிவிட முடியாதவை. ஆனால் இவ்வாறு மக்களின் நியாயபூர்வமான போராட்ட விடயத்தில் நடந்துகொள்கின்றமையிட்டு எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. நான் அந்த பத்திரிகையை தாக்குவதாக நினைத்துவிட வேண்டாம். உள்ளக் குமுறலை பதிவிட்டேன். அவ்வளவுதான்.

எது எப்படியோ, அரசியல்வாதிகளும் முஸ்லிம் சிவில் அமைப்புகளும் இணைந்து மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்திவிட்டனர். மக்களை ஏமாற்றிவிட்டனர். நான் மன்னார் பகுதியையோ வடக்கையோ சேர்ந்தவன் அல்ல. ஆயினும் அம்மக்களின் நாடித் துடிப்பை அறிந்தவன். மனித நேயத்துடன் அம்மக்களின் உணர்வுகளுக்கு முக்கிய மளித்து இந்த வரிகளை பதிவிடுகிறேன்.



17-05-2017 அன்று மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையில் க.பொ.த உ/த கற்பதற்காக மாணவர்களை உள்ளீர்க்கும் நிகழ்வில் OMSED Srilanka வின் வளவாளர் அஷ்ரக் இஸ்மாயில் கலந்து கொண்டு உயர் தர கல்வி தொடர்பான விடயங்கள், கற்றல் முறைகள் என பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டார். இந்நிகழ்வை மல்வானை EDWA ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



கலாபூஷணம் அப்துல் ஹாதி முஹம்மத் யூசுப் எழுதிய 'மனிதப் புனிதர் முஹம்மது றஸூலுல்லாஹ்' நூல் வெளியீட்டு விழா தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக பொதுச் சேவைகள் [illegible] இல்லாயில் கலந்து கொண்டார். சர்வதேசப் பார்வை சஞ்சிகையின் ஆசிரியர் றவூப் ஸெய்ன் நூலாய்வு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையை ஆக்கிரமிக்கும் மோடியின் வியூகம்

• கருணாகரன்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு வந்து திரும்பி விட்டார். பதவியேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள், மோடியினுடைய இரண்டாவது இலங்கை விஜயம் இது. முதல் பயணம், 2015இல் நடந்தது. அப்போது அவர், வடக்கே - யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தார். இப்பொழுது இரண்டாவது பயணத்தில், மத்திய பகுதியான மலையகத்துக்குச் சென்று திரும்பியிருக்கிறார். இரண்டு பயணங்களும், இந்திய நோக்கு நிலையிலும் வரலாற்றின் நிகழ்ச்சிப் போக்கிலும், முக்கியமானவை.

மோடியின் முதலாவது இலங்கை விஜயத்தின்போது, தமிழ்நாட்டிலும் ஈழத்தமிழர் வட்டாரங்களிலும் புலம் பெயர் தமிழர்களும் தங்களுடைய எச்சரிக்கைகளை விடுத்திருந்தனர். இருந்தபோதும் மோடி, தன்னுடைய தீர்மானத்தின்படி இலங்கைக்கு விஜயம் செய்து, அநுராதபுரத்துக்கும் வடக்கே யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்கும் சென்றிருந்தார்.

யாழ்ப்பாணத்தில், வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் தமிழ்த் தலைவர்களையும் சந்தித்திருந்தார். இதன் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு, மோடியினால் ஒரு செய்தி உணர்த்தப்பட்டது. ''இந்தியா, தமிழ் மக்களுடைய அரசியல் விவகாரங்களில் அக்கறையோடிருக்கிறது. பாதிக்கப்பட்ட தமிழர்களை அது கைவிடவில்லை. அவர்களுக்கான உதவிகளைச் செய்வதற்குத் தயாராக உள்ளது'' என்பது தான் அச்செய்தி.

இந்தியாவின் உதவிகளின் அடிப்படையில், விக்னேஸ்வரனிடம் புதிய திட்டங்கள் குறித்த கோரிக்கைகளையும் அவர் கேட்டிருந்தார். முதலீடுகளை வடக்கில் ஆரம்பிப்பதற்கு இந்தியா ஆர்வமாக உள்ளது எனவும் இதன் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கு உதவ முடியும் என்றும், விக்னேஸ்வரனிடம் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் திட்டங்கள் குறித்து பரிசீலிக்கும்படி, மோடி கூறியிருந்தார். கூடவே, வடக்கில் கல்வி, கலாசார மேம்பாட்டை உருவாக்குவதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் திட்டங்களையும் அறிவித்திருந்தார். ஏற்கெனவே நடைமுறையில் இருந்த 50,000 வீடுகளை நிர்மாணிக்கும் இந்திய உதவி வீட்டுத்திட்டத்தைப் பற்றியும் பேசப்பட்டது. அப்போது அவர், மலையகத்துக்குச் செல்லவில்லை. ஆனால், மலையகவாழ் இந்திய வம்சாவளி மக்கள் குறித்து, மோடியின் விஜயத்தில் கவனமெடுக்கப் படும் என்ற எதிர்ப்பார்ப்பு இருந்தது. இது குறித்து, மலையகத் தலைவர்கள் எதிர்வுகளைக் கூறியிருந்தனர். இருந்தும் மோடி அதுகுறித்து அப்போது எதையும் கூறவில்லை.

மலையகத்துக்கான பயணத்தையும் செய்யவில்லை. இது, மலையக மக்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தியது. ''எதற்காக நாம், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறோம்? கைவிடப்பட்டவர்களாக இருக்கிறோம்?'' என்றவிதமாக அவர்கள் தங்கள் கவலைகளை வெளிப்படுத்தியிருந்தனர். இந்தக் குறைகளையெல்லாம் தீர்த்து வைக்கும் விதமாக இப்போது நடந்திருக்கின்ற இரண்டாவது விஜயத்தில் மோடி, மலையகத்துக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்டிருக்கிறார். இரண்டுநாள் பயணமாக இலங்கை வந்திருந்த மோடி முதல் நிகழ்வாக கொழும்பில் சர்வதேச பௌத்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இதைத்தொடர்ந்து மலையகத்துக்குச் சென்றார். அங்கே இந்திய உதவித் திட்டத்தின் கீழ், மிகப் பிரமாண்டமான அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையைத் திறந்து வைத்தார். மேலும் பல உதவித்திட்டங்களைப் பற்றி, அங்கே கூடியிருந்த மக்களுக்கு அறிவித்தார். குறிப்பாக, ஏற்கனவே இந்திய உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்களுடன், மேலதிகமாக 10,000 வீடுகளை இந்தியா நிர்மாணிக்க உதவும் என்று அறிவித்திருக்கிறார்.

மோடியின் இந்த அறிவிப்புகளையிட்டு, மலையக மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்திருக்கின்றனர். மலையகத் தலைவர்களுக்கும், இது பெரிய உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மோடிக்கு, மலையக மக்களும் மிகப் பெரிய வரவேற்பைக் கொடுத்திருக்கின்றனர். இந்த நிகழ்ச்சிகள், இலங்கை அரசியலிலும் மலையகத் தமிழர்களின் வரலாற்றுப் போக்கிலும் இந்திய - தமிழ்நாட்டு அரசியலிலும், பெருங்கவனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, இதிலும் இந்தியா, தன்னுடைய நோக்கு நிலையைத் தெளிவாக, இலங்கைக்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளது.

''மலையக வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளில், இந்தியா கரிசனையோடிருக்கிறது. இந்தியவழி மக்கள் என்ற அடிப்படையில், அவர்களுடைய நலன்கள், பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கான கடப்பாட்டையும் தார்மீகப் பொறுப்பையும், உரித்தையும், இந்தியா கொண்டிருக்கிறது'' என்ற விதமாக, அந்த வெளிப்பாடு அமைந்திருக்கிறது.

மோடியின் இந்த இரண்டு பயணங்களும், இலங்கைக்கு அழுத்தமாகச் சொல்ல முயன்றிருப்பது, இலங்கையின் மீது தன்னுடைய செல்வாக்குக்கும் உரித்துக்குமான அடிப்படைகள் உண்டு என்பதையே. இதற்கான வாய்ப்பைக் கொடுத்தது, இலங்கையும் இலங்கையின் பலவீனமான நடவடிக்கைகளுமே. குறிப்பாக, இலங்கையின் தமிழ்மொழிச் சமூகங்களின் அரசியல் உரிமைகளில், இலங்கை நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்றால், அந்த விவகாரங்களில் இந்தியா கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

ஏனென்றால், இலங்கையின் இனமுரணானது, இந்திய அரசியலில் தாக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அப்படித் தாக்கத்தை உண்டாக்கும் ஒரு விடயம் குறித்து, இந்தியா சிந்திக்காமல் இருக்க முடியாது என்பது ஒன்று. இரண்டாவது, இந்திய வம்சாவளியினரான மலையக மக்களின் உரிமைகளையும் நலன்களையும், இலங்கை சரியாகக் கவனிக்காதவிடத்து, அவர்களின் நலன்கள் குறித்தும் அவர்களுடைய பிரச்சினைகள் குறித்தும் இந்தியா பேச வேண்டியிருக்கிறது என்பதாகும். இது இந்திய வம்சாவழியினர் என்ற உரித்தின்பாற்பட்டது என இந்தியா காட்ட முற்படுகிறது.

ஆகவே, இந்த இரண்டு தரப்பின் நலன்கள் குறித்தும் இந்தத் தரப்புகளின் பிரச்சினைகள் குறித்தும் இலங்கை அரசாங்கம் இனிமேல் பொறுப்பற்றோ, மாறாகவோ நடந்து கொள்ள முடியாது என்ற ஒரு நிலை உருவாகியுள்ளது. இது உண்மையிலேயே இந்த மக்களின் நலன்சார்ந்த அக்கறையின்பாற்பட்ட, இந்திய வெளிப்பாடா என்று கேட்டால், இது குறித்து நாம் சற்று யோசிக்கவே வேண்டும். ஏனென்றால், இந்தியாவுக்கு இந்தத் தரப்புகளின் மீது உண்மையான அக்கறை இருந்திருக்குமானால், இந்தத் தரப்புகளின் பிரச்சினைகளுக்கான தீர்வினை இந்தியா எப்போதோ கண்டிருக்க முடியும். இவ்வளவு காலதாமங்கள் தேவையில்லை.

ஆகவே, இது இந்தியாவின் இன்றைய வளர்ச்சிக்கும் இந்தப் பிராந்தியத்தில் இந்தியச் செல்வாக்கின் உறுதிப்பாட்டுக்குமான ஒரு தொடர் நடவடிக்கையின்பாற்பட்ட வெளிப்பாடுகளே. இதற்கு இந்திய வம்சாவளி மலையக மக்களும் ஈழத்தமிழர்களும் அவர்களுடைய அரசியல் பிணக்குகளும் பயன்படுத்தப்படுகின்றனர். அதாவது இந்தக் கருவிகளை இந்தியா தனக்கு இசைவாகப் பயன்படுத்த விழைந்துள்ளது. அவ்வளவே.

அரசியல் என்பது எப்போதும் இப்படித்தானிருக்கும். வல்லாதிக்கச் சக்திகள் தங்களின் நலனுக்காக ஏனைய சக்திகளை அல்லது தரப்புகளைப் பயன்படுத்த முற்படும். அதற்குள் பொருத்தமான பொறிமுறைகளை உருவாக்கிக் கொள்வதன் மூலமாக ஏனைய சக்திகள் தங்கள் நலன்களையும் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளும். இதுவே வெற்றிகரமான அரசியல் பொறிமுறையாகும்.

இதில் வடக்குத் தலைமை அல்லது ஈழத் தமிழ்த் தலைமை பின்னடைந்திருக்கிறது. வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்தியாவைச் சரியான முறையில் கையாளவில்லை என்று கூறலாம். மோடியின் கைகளை அவர் முறையாகப் பற்றிக்கொள்ளவில்லை. இதனால் வடக்குக்கான வாய்ப்புகள் தவறின.

இதேவேளை மலையகத் தலைமைகள் இதைத் தமக்கான நல்வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்றிருக்கின்றன. குறைபாடுகள் இருந்தாலும் தங்களின் இயலுமை, சக்தி என்பவற்றுக்கு ஏற்ப அவை மோடியையும் இந்தியாவையும் பயன்படுத்த முயன்றுள்ளன. தமிழ் முற்போக்கு கூட்டணி உட்பட ஒவ்வொரு தரப்பும் மோடியிடம் விடுத்துள்ள கோரிக்கையும் கொடுத்துள்ள மனுக்களும் இதற்கான சான்றுகளாகும்.

இதேவேள்ளை, இந்தியாவின் நோக்கு நிலைக்கு மாறாக, ஈழத்தமிழர்களின் பிரச்சினையையும் மலையகத் தமிழர்களின் பிரச்சினையையும் வழமையைப் போல கையாளலாம் என இலங்கை சிந்திக்கலாம். ஏற்கெனவே இந்தியாவின் காதில் பூவைச் சொருகியதைப் போல, இன்னும் செய்யலாம் எனவும் கருதலாம். ஆனால், இன்றைய நிலையில் இந்தியாவின் அணுகுமுறைகள் வேறாக உள்ளன. அதற்கான தேவையும் முன்னெப்போதையும் விட வேறாகவே உள்ளது.

இந்தியா மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டு வருகிறது. இந்த வளர்ச்சியின் வேகத்துக்கு இந்தியா தன்னை விஸ்தரிக்கவும் போட்டியிடவும் வேண்டியுள்ளது. இதனால் அது தன்னைப் புதிய நிலைமைக்கு ஏற்றவாறு தகவமைக்க விரும்புகிறது. இது அதற்குத் தவிர்க்க முடியாத ஒரு விளைவாகும். இந்த அடிப்படையிலேயே அது அயல் நாடுகளுடனான உறவையும் அயற்சக்திகளின் மீதான செல்வாக்கையும் மேற்கொள்ள முயல்கிறது. இப்படிச் செய்யும்போது ஏற்படும் சர்வதேச மற்றும் உள்ளூர் எதிர்ப்புகளைத் தடுக்கும் வகையிலேயே, இந்தியா இலங்கையின் பலவீனங்களைப் பயன்படுத்த விழைகிறது. ஏற்கெனவே கூறப்பட்டிருப்பதைப் போல இலங்கையின் பலவீனங்கள் இந்தியாவின் நோக்கங்களுக்கு உதவுகின்றன.

ஆகவே, இலங்கையின் பலவீனங்கள் அதற்கு நெருக்கடியை உண்டாக்கியுள்ளன. இந்தப் பத்தியாளர் உட்படப் பலரும் அடிக்கடி சுட்டிக்காட்டி வருவதைப்போல, தன்னுடைய சொந்த மக்களிடம் இறங்கி வரமுடியாத ஓர் அரசாங்கம், தன்னுடைய சொந்த மக்களுக்கு விசுவாசமாக நடக்க முற்படாத ஓர் அரசாங்கம், பிறரின் காலடியில் சேவகம் செய்ய நேர்கிறது. இதுவே இலங்கையின் சமகால நிலைமையாகும். இந்தியாவுக்கு மட்டுமல்ல, வெளிச்சக்திகள் பலவுக்கும் சேவகம் செய்தே பிழைக்கும் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்கிறது. இப்படியான அரசியல் சூழலைத்தான் இலங்கையர்கள் இன்று எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை மேலே சொல்லப்பட்டுள்ளவாறு, இலங்கைச் சமூகங்களின் மீதான இந்தியாவின் அக்கறையும் உதவிச் செயற்பாடுகளும், நிச்சயமாக இலங்கையில் மேலும் முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தப் போகின்றன. இது நல்விளைவுகளுக்குச் சமதையான எதிர்விளைவுகளை, நிச்சயமாக உண்டாக்கும். குறிப்பாக இந்திய ஆதரவினாலும் உதவிகளினாலும் வளர்ச்சியடையும் மலையகத் தமிழர்களை சிங்களச் சமூகம் எதிர்கொள்ளச் சிரமப்படும்.

இந்தியத் திட்டத்தின் கீழ் மிகத் துரிதமான ஒரு மத்தியதரவர்க்க வளர்ச்சியை, மலையக தமிழ்ச் சமூகம் எட்டப்போகிறது. இது இந்தியாவுக்குத் தேவையான ஒன்று. எப்போதும் மத்தியதர வர்க்கத்தின் வளர்ச்சியே அரசியலில் முரணியக்கக் கூறுகளைப் பேணுவதற்கு உதவுவதுண்டு. ஆகவே, அதையே இந்தியாவும் ஊக்குவிக்கும். இந்தியாவின் நீண்டகால நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இந்த மத்தியதர வர்க்கம் உதவியாகச் செயற்படும். எனவே இதை இந்தியா துரிதமாகச் செயற்படுத்தப்போகிறது.

இவ்வாறான நிலையில், வளர்ச்சியடையும் மலையக மத்தியதர வர்க்கத்துக்கும் சிங்கள மத்தியதர வர்க்கத்துக்குமிடையிலான மோதல் நிச்சயமாக உருவாகும். இது இந்தப் பிராந்தியத்தில் கலவரங்களுக்கும் வன்முறைக்கும் அடிப்படையாக அமையும். வளர்ச்சிப் போக்கில் இது தவிர்க்க முடியாது என சமூகவியலாளர்கள் எளிதாகக் கூறக்கூடும். ஆனால் இது தனியே எரிந்து தணியும் பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. பதிலாக, இந்தியத் தலையீட்டை அதிகரிக்கும் வகையில் அமையும்.

இப்படி அமையும்போது மலையகத் தமிழர்கள் முன்னரை விடத்தனித்த அடையாளத்தையும் கூர்மையான விலகலையும் கொள்ளும் ஒரு சமூகமாகத்திரள்வர்.

இவ்வாறான ஒரு நிலையில் தமிழ்த்தேசியம், முஸ்லிம் தேசியம், மலைய தமிழ்த்தேசியம் என்ற அடையாளக்கூறுகளோடு சமூகங்கள் திரளக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. ஏற்கெனவே இந்தத் தேசியவாதங்கள் கண்டிருக்கிற நெருக்கடிகளும் வீழ்ச்சிகளும், வரலாற்றின் படிப்பினைகளாக இருக்கும்பொழுது புதியதொரு தேசியவாதமா என்று நீங்கள் கேட்கலாம். தேசியவாதத்தின் ஊற்றுக்கண்களே மேல்நிலைச்சக்திகளின் துண்டலினால் ஏற்படுவதே. இங்கும் அதுவே நிகழ்வதற்கான அடிப்படைகள் காணப்படுகின்றன.

மேம்போக்காகப் பார்க்கும்போது, மோடியின் வருகை இலங்கையின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பலவகையிலும் உதவியாக அமைந்துள்ளது. இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவில் நெருக்கத்தை உண்டாக்கியுள்ளது. நிலவி வரும் பாரம்பரிய உறவை மேலும் நெருக்கமாக்கியுள்ளது என்று தோன்றலாம். ஆனால், இதற்குப் பின்னால் வரலாற்றின் நிகழ்ச்சிப் போக்கையும் இலங்கையின் நிலைவரத்தையும் மாற்றியமைக்கும் பொறிமுறைகளை அது உருவாக்கிச் செயற்படுத்தி விட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

இப்பொழுது மகிழும் தரப்புகள் நாளை இந்த மகிழ்ச்சியை எவ்வாறு தக்க வைப்பது, எப்படி வளர்த்தெடுப்பது, சர்வதேச அரசியல் போட்டிகளுக்குள் சிக்குப்படாமல் எவ்வாறு தம்மைத் தற்காத்துக் கொள்வது என்பது குறித்துச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். ஏனென்றால், மோடி டெல்லிக்கு விமானமேறிய மறுநாள், சீனாவுக்கு விமானமேறினார் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இது சர்வதேச அரசியற் சதுரங்கத்தின் விளையாட்டின்றி வேறென்ன?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## தலை நிமிர்ந்து எப்போது வாழ்வது?

முஸ்லிம் சமூகத்தின் இருப்பும் உரிமைகளும் கேள்விக்குள்ளாக்கப்படும் பொழுதெல்லாம் இனவாத முஸ்லிம் விரோத செயற்பாடுகள் மேலெழுவது வாடிக்கையாகி விட்டது. அநியாயமாக அபகரிக்கப்பட்ட முசலி மக்களின் குடியிருப்புக் காணிகளும் விவசாய நிலங்களும் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக முசலி நில மீட்புப் போராட்டம் நடந்தது.

மாயக்கல்லி மலையில் முஸ்லிம் ஒருவரின் காணி பறிக்கப்பட்டு அதற்கெதிரான போராட்டமும் நடந்து வருகிறது. இந்த நிலையில் முஸ்லிம் தரப்பின் நியாயத்தை சிங்கள மக்கள் உணரக் கூடாது என்பதற்காகவும், முஸ்லிம் தரப்பில் தமது நியாயங்களுக்காக முன்வருபவர்களை ஒருவித போபியாவில் அமிழ்த்துவதற்குமாகவே இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவை ஒன்றும் தற்செயல் நிகழ்வுகளல்ல என்பதை முஸ்லிம் சமூகம் எப்போதோ புரிந்திருக்க வேண்டிய நிலையில், இவற்றை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் எதனையும் கூட முஸ்லிம் தரப்பு இதுவரை வரைந்து செயற்படவில்லை என்பது கவலைக்கிடமானது. இதனால்தான் ஆங்காங்கே தொடங்கப்படுகின்ற சிவில் போராட்டங்களும் தீர்வுகளைப் பெறும் வரை தொடராமல் இடையில் கைவிடப்பட்டு விடுகின்றன.

முசலி நில மீட்புப் போராட்டம் முஸ்லிம் சமூகத்தால் இதுவரை முன்னெடுக்கப்பட்டதில் நீண்ட நாட்கள் தாக்குப் பிடித்த போராட்டம். ஒரு வகையில் சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுப்பதில் முஸ்லிம் சமூகத்தில் ஒரு முன்னேற்றத்தை இது காட்டினாலும் அரசியல்வாதிகளால் இந்தப் போராட்டம் காவு கொள்ளப்படக் கூடாது என்று நாங்கள் வெளியிட்ட அச்சம் இன்று நடந்தேறியிருப்பது வருந்தத்தக்கதாகும். அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து போகும் சோணகிரிகளாக சோனக சமூகம் தொடர்ந்தும் அடையாளப்படுத்தப்படும் அளவுக்கு இன்று முஸ்லிம் சமூகம் இழிவடைந்திருப்பது வெட்கிக்க வேண்டிய விடயமாகும்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் சமூகத்தை விற்றுப் பிழைப்பு நடத்துவதே அன்றி முஸ்லிம் சமூகத்துக்காக வென்று எதனையும் சாதிக்கப் போவதில்லை. ஆட்சியாளர்களுடன் தங்களுக்கு இருக்கின்ற உறவைப் பாதிக்கின்ற எதனையும் எமது அரசியல்வாதிகள் முன்னெடுக்கப் போவதில்லை. இலங்கையில் இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை ஆரம்பிப்பதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்த போது, உங்களுக்கு விருப்பமில்லா விட்டால் இராஜினாமா செய்யுங்கள் என்று அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு தைரியமாகச் சொல்ல முடியுமாக இருந்தது இதனால்தான்.

இது எதேச்சையாக நடந்ததல்ல. வரலாறு நெடுகிலும் பல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்ட விதத்தின் எதிரொலியே இது. இன்று வரை இந்த நிலைமைதான் முஸ்லிம் சமூகத்தில் தொடர்கிறது. பதவி கிடைப்பதென்றால் மார்க்கத்தையே விட்டு விட்டு வர ஹக்கீம் தயார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டதும் இந்த நிலை இன்னும் மாறவில்லை என்பதற்குப் போதுமான சான்றாகும்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் பற்றி நாடே அறிந்து வைத்துள்ள இந்த நிலையில் தமது பிரச்சினைகளுக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் தீர்வு பெற்றுத் தருவார்கள் என்று நம்பி தமது சாத்வீகப் போராட்டத்தை அரசியல்வாதிகளிடம் காவு கொடுத்தமை எத்தனை முறை அடி வாங்கினாலும் முஸ்லிம் சிவில் சமூகம் இன்னும் பாடம் படிக்கவில்லை என்ற வங்குரோத்துத் தனத்தையே எடுத்துக் காட்டுகிறது.

வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும் பின்னர் வாக்குறுதியை மீறுவதும் அரசியல்வாதிகளுக்கே உரித்தான கைவந்த கலை என்பதை சமூகம் என்று நிதர்சனமாக உணரப் போகிறதோ தெரியவில்லை. பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் நோக்கம் முஸ்லிம் சமூகத்துக்கு சாக்குச் சொல்வதற்கு ஏதாவது வேண்டுமே என்பதேயன்றி தலைமைகளிடமிருந்து உரிமைகளை வென்றுவருவதல்ல என்பதனை முசலி நில மீட்புப் போராட்டத்தின் தீர்வு முயற்சிகள் சமூகத்துக்கு வெளிப்படுத்தியிருக்கின்றன.

அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளைத் தான் நாங்கள் மக்களுக்கு வழங்கினோம் என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் பசப்பு வார்த்தைள் கூறி மழுப்ப முனைவார்கள். முஸ்லிம் சமூகம் ஏராளமான வாக்குறுதிகளை கண்டுள்ளது. மீண்டும் கொட்டமடிக்கும் ஞானசார தேரரின் கைது தொடர்பாகவும் பல வாக்குறுதிகள் இதற்கு முன் பல தடவைகள் வழங்கப் பட்டன. எங்களுக்குத் தேவை தீர்வுகளேயன்றி அரசியல்வாதிகளின் வாக்குறுதிகள் அல்ல என்பதை சிவில் சமூகம் மீண்டும் களத்துக்குத் திரும்பி வந்து உரத்துச் சொல்லுமானால் அதுதான் உரிமைக்கான உண்மையான போராட்டமாக அமையும்.

# தென்கிழக்கு அலகு கற்பனாவாதமா?

• மொஹமட் பாதுஷா

அரசியலில் மட்டுமல்ல எல்லா விடயங்களிலும் கருத்து வேற்றுமைகள் இருப்பது சர்வ சாதாரணமானது. மாறுபட்ட கருத்துகள், எண்ணங்களில் இருந்து புதுவிதமான கருத்துருவாக்கங்கள் பிறக்கின்றன. ஆனால், ஒவ்வொருவரும் கொண்டுள்ள கருத்துகள் ஒரு பொதுத் தளத்தில் அமர்ந்து பேசப்படாதவிடத்து, அவை கருத்து முரண்பாடுகளாக ஆகிவிடுவதைக் காண்கின்றோம்.

உலக மரபில் தோற்றம் பெற்ற அனைத்து விதமான இன முரண்பாடுகளும் முரண்பட்ட கருத்துகளை ஒரு மேசையில் அமர்ந்து, மனம் விட்டுப் பேசாமல் விட்டதன் பக்கவிளைவு என்றும் சொல்ல முடியும். வேறுபட்ட இனக் குழுமங்கள், மனித குல வர்க்கங்கள், சமயங்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் ஒவ்வொரு விடயம் பற்றியும் வேறுபட்ட எண்ணங்கள், கருத்து நிலைகள் இருப்பது வழமையே. அதையும் தாண்டி, சில போதுகளில், அடிப்படையில் ஒரே இயல்பையுடைய மக்கள் பிரிவினரிடையேயும் முரணான நிலைப்பாடுகள் தோன்றி விடுவதை அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொருவரினதும் பார்வைக் கோணம் ஒன்றாக இருப்பதில்லை. அது ஒன்றாக இருக்க வேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் இல்லை. சமாதானத்தை நிலைநாட்டுதல் என்ற போர்வையில், மேற்குலக படைகள் மேற்கொள்ளும் போர் நடவடிக்கையை; பலஸ்தீன மக்கள், இஸ்லாமியர்களை அழித்தொழிக்கும் முயற்சியாகவே பார்க்கின்றனர். இலங்கையில் பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டுதல் என்று அரசாங்கத்தால் சொல்லப்பட்ட இறுதிக் கட்ட யுத்தத்தை, தமிழ் மக்கள் இன அழிப்பின் பலிபீடம் என்றே நோக்குகின்றனர்.

மகாத்மா காந்தியை பின்பற்றுபவர்களும் இருக்கின்றார்கள்; கோட்சேக்குப் பரிந்து பேசுபவர்களும் இருக்கின்றார்கள். இலங்கையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தீர்வு கிடைக்க வேண்டுமெனப் போராடும் சிங்கள முற்போக்காளர்களும் உள்ளனர்; மாற்றுச் சமூகத்துக்குத் தீர்வு கிடைப்பதற்கு முட்டுக்கட்டை போடும் சிறுபான்மை சமூகத்தவரும் உள்ளனர். இவற்றையெல்லாம் அவரவரின் நலனும் அதனை அவர்கள் நோக்குகின்ற விதமும் தீர்மானிக்கின்றது.

ஒரு குடும்பத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக இருக்கின்ற ஒரு மரணத்தை, சவப்பெட்டிக் கடைக்காரன் வியாபாரமாகவே பார்ப்பது பெருந் தவறு என்று யாரும் சொல்ல முடியாது. இந்தப் பண்பை அரசியலில் பரவலாகக் காண முடியும். தமது சொந்த இலாபங்கள், கொள்கைகள் சரி எனச் சொல்வதற்கு ஏற்றாற் போல் ஆதாரங்களை முன்வைப்பதிலும், தமது அரசியல் இருப்புக்காக முரண்பட்ட கருத்துகளைக் கூறி, அதை நிரூபிக்க முனைவதிலும் நமது அரசியல்வாதிகள் கைதேர்ந்தவர்கள்.

ஒரு கொள்கையைச் சரியெனக் காட்டுவதற்கு ஆயிரம் காரணங்களை கூறுவார்கள். பின்னொரு நாளில், அதே கொள்கையில் தாமே பிழை காண்பார்கள். அதற்கு ஆயிரத்தெட்டுக் காரணங்களைச் சொல்வார்கள். இலங்கையின் இனப்பிரச்சினையும் அதற்கான தீர்வுத் திட்டமும் கூட இப்படித்தான் பார்க்கப்படுகின்றது. இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையே இல்லை; அவர்கள் தனிநாட்டைக் கைப்பற்றும் நோக்கோடு வேண்டாத காரியங்களில் ஈடுபடுகின்றார்கள் என்றும் அவர்களுக்குத் தீர்வு அவசியமில்லை என்ற கோதாவிலுமே பெருந்தேசிய ஆட்சியாளர்கள் ஆரம்பத்தில் எண்ணினார்கள்.

தமிழர்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது என்பதை நீண்டதொரு யுத்தத்தின் மூலம் பெருந்தேசியமும் பௌத்த மக்களும் உணர்ந்து கொண்டார்கள். அதாவது அவர்களது பார்வைக் கோணமும் கருத்து நிலையும் மாறியது. இப்போது தீர்வு வழங்குவதற்கு கொள்கையளவில் அரசாங்கம் தயாராகி நிற்கின்றது. தீர்வுப் பொதியின் வடிவம்தான் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

தமிழர்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது என்று உணர்ந்த பெருந்தேசியம், இந்நாட்டின் இரண்டாவது சிறுபான்மை இனமான முஸ்லிம்களுக்கும் பிரச்சினையுள்ளது. எனவே, தீர்வில் அவர்களுக்கும் பங்கு வழங்க வேண்டும் என்று உளப்பூர்வமாக எண்ணுகின்றது என்பதை விடவும், அப்படியான ஓர் இக்கட்டான நிலைக்கு ஆட்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

முஸ்லிம்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன என்றும் அதன்படி அவர்களுடைய அபிலாஷைகளை நிவர்த்தி செய்யக் கூடிய உபதீர்வு ஒன்று அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் ஐம்பது வருடங்களுக்கு முன்னரே, தமிழ் அரசியல்வாதிகள் கரிசனை காட்டத் தொடங்கி விட்டனர். அப்போதைய தமிழ் அரசியல்வாதிகளின் முற்போக்கு, தூர சிந்தனையாகவும் இதைக் கருத முடியும். ஆனால், இடைப்பட்ட காலத்தில் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் பாதைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் முஸ்லிம்களின் அபிலாஷைகள் மறக்கடிக்கப்பட்டு விட்டன.




யுத்தம் முடிந்த பிற்பாடு, தீர்வுத் திட்டம் பற்றிப் பேச ஆரம்பித்தபோது, "போராடாத முஸ்லிம் சமூகம், தீர்வில் பங்கு கேட்பது ஏன்?" என்பது போன்ற சிந்தனைகள், தமிழ் அரசியலில் ஆங்காங்கே ஏற்பட்டிருந்தன. ஆனால், அதிர்ஷ்டவசமாக அந்த நிலைமை இப்போது மாறியிருக்கின்றது. தமிழ் மக்களுக்குத் தீர்வுத் திட்டம் வழங்கப்பட வேண்டுமென்ற புரிதல் முஸ்லிம்களிடையே எவ்வாறு ஏற்பட்டிருக்கின்றதோ, அவ்வாறு முஸ்லிம்களினது அபிலாஷைகளும் நிவர்த்திக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் தமிழர் தரப்பில் ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில், வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் உடன்பட்டு விட்டதாக எண்ணுமளவுக்கு நிலைமைகள் இருந்தன. ஆனால், இன்று ஒரு குறிப்பிட்ட முஸ்லிம் கட்சியுடன் பேசுவதன் ஊடாக மட்டும், கிழக்கு முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுவிட முடியாது என்ற யதார்த்தத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து கொண்டுள்ளது எனலாம்.

முஸ்லிம்களுக்கு என்ன தேவை? என்று சொல்லுங்கள் எனவும், முஸ்லிம்களின் அபிலாஷைகள் தீர்த்து வைக்கப்படும் எனவும், முஸ்லிம்களின் சம்மதமின்றி நிலையான தீர்வைப் பெற முடியாது எனவும் கருத்து வேற்றுமைகளில் இருந்து ஒரு கருத்தியல் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

எந்தளவுக்கு என்றால், முஸ்லிம்களின் விடயத்தில் சில முஸ்லிம் அரசியல்வாதிகளை விட, ஓரிரு தமிழ் அரசியல்வாதிகள் தெளிவுடன் இருக்குமளவுக்கு நிலைமைகள் முன்னேறியிருக்கின்றன. வெளிப்படையாகப் பார்க்கின்றபோது, தெரிகின்ற இந்த முன்னேற்றம் உள்ளார்த்தமாகவும் ஏற்பட்டிருக்கின்றது என்றே முஸ்லிம் மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அதில் சிறியதொரு சந்தேகக் கீறல் அண்மையில் விழுந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பில் இடம்பெற்றபோது, வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். அதாவது, "வடக்கும் கிழக்கும் இணைந்தாலும் முஸ்லிம்களுக்கு 'தென்கிழக்கு அலகு' என்ற ஒன்று இருக்கக்கூடாது என்ற விடயத்தில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

"இவ்விரு மாகாணங்களும் இணைந்திருந்தால் அது பலமாக அமையும். முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் இருக்கின்ற செயற்கையான பிரிவினையை இல்லாது செய்ய வேண்டும். தென்கிழக்கு அலகு என்பது வெறும் கற்பனாவாதம். இது முஸ்லிம் சமூகத்தைப் பலவீனப்படுத்துகின்றதும் நடைமுறைச் சாத்தியமற்றதுமான விடயம் ஆகும். அதுபற்றி எவரும் சிந்திக்க வேண்டியதில்லை" என்றும் கூறியுள்ளார்.

மாகாண சபை உறுப்பினர், இவ்வுரையில் நல்ல பல விடயங்களை முன்வைத்துப் பேசினார். என்றாலும், தென்கிழக்கு அலகு என்பது கற்பனாவாதம் என்று அவர் கூறுவதை கிழக்கு முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. முஸ்லிம் அரசியல் களத்தில் மிகவும் எதிர்பார்ப்பு மிக்க அரசியல் சக்தியாக உருவெடுத்து, இன்னும் மக்களிடையே நம்பிக்கையைத் தக்கவைத்திருக்கின்ற 'நல்லாட்சிக்கான மக்கள் முன்னணி'யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக, வடமாகாண சபை உறுப்பினரானவர் அய்யூப் அஸ்மின்.

எனவே, இவர் தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் ஊடாகப் பிரதானமாக, முஸ்லிம்களையும் அடுத்ததாக தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்பவர். அதுமட்டுமன்றி, நல்லாட்சிக்கான மக்கள் முன்னணியின் அரசியல் பிம்பமாக பார்க்கப்படுபவரும் ஆவார்.

அப்பேர்ப்பட்ட மாகாண சபை உறுப்பினரே மேற்குறிப்பிட்ட கருத்தைப் பொது மேடை ஒன்றில் சொல்லியிருக்கின்றார். எனவே, அவர் இக்கருத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகச் சொன்னாரா? நல்லாட்சிக்கான மக்கள் முன்னணியின் நிலைப்பாடாக முன்வைத்தாரா? அல்லது தனது சொந்த அரசியல் கருத்தாகக் கூறினாரா என்ற கேள்விகள் இவ்விடத்தில் எழுந்திருக்கின்றன.

இது, நல்லாட்சிக்கான மக்கள் முன்னணியின் நிலைப்பாடா என்பதை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த முடியவில்லை. என்றாலும் அதனது நிலைப்பாடு இதுவல்ல என்பது பலரும் அறிந்த விடயமாகும். ஆனாலும், முஸ்லிம்களுக்கும் தீர்வு தரப் போவதாகக் கூறி வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் போன்றோர் கலந்துகொண்ட ஒரு மேடையில், அஸ்மின் ஏன் இவ்வாறு உரையாற்றினார் என்ற சந்தேகம் எழவே செய்கின்றது.

ஒருவேளை, தமிழ்க் கூட்டமைப்பின் உள்மனக் கிடக்கையை அஸ்மின் குறிப்பால் உணர்த்தி இருக்கின்றாரா என்று தென்கிழக்கு அலகு பற்றிப் பேசும் முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் எம்மிடம் கேட்டார். அதற்கப்பால், பார்வையாளர்களான மக்களைக் கவர்வதற்கான பேச்சாக இதை எடுத்துக் கொள்ள முடியவில்லை. எது எப்படியாயினும், அஸ்மினின் கருத்து மீள்வாசிப்புக்குரியது.

வரலாற்றில் பல தடவை முஸ்லிம்களுக்கான தீர்வை தமிழர் அரசியல் முன்மொழிந்திருக்கின்றது என்ற அடிப்படையில் இது உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய தமிழர் கட்சிகளினால் வெளிப்படுத்தப்பட்ட நிலைப்பாடுகளுக்கும் முரணானது என்றே கூற வேண்டும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கியும் இலங்கையின் உயர்கல்வித் துறையும்



றவூப் ஸெய்ன்

நல்லாட்சி அரசியல்

நல்லாட்சி அரசாங்கம் இறுதி வரை நீடிக்குமா என்ற சந்தேகம் வலுத்து வருகின்றது. ஐ.தே.க.வுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மீறி சுதந்திரமாக செயல்படுவதற்கு சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதி மைதிரியின் அனுமதியைக் கோரியுள்ளனர். கருத்து வேற்றுமையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் பிரதமர் ரணில் மற்றும் ஜனாதிபதி மைத்திரி ஆகியோருக்கிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையின் போக்குவரத்துத் துறை, கல்வி, சுகாதாரம் ஆகிய மூன்றும் தொடர்ச்சியாக பிரச்சினைகளையே சந்தித்து வருகின்றன. இலங்கையில் அன்றாடம் நிகழும் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் இம்மூன்று துறைகளிலுமே பெருமளவு இடம்பெறுகின்றன.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பான சர்ச்சைகள் இன்னும் ஓயவில்லை. அரச மருத்துவக் கழகம் உள்ளிட்டு, பல்கலைக் கழகங்களோடு இணைந்த இடதுசாரி மாணவர் இயக்கங்கள் சைடம் எவ்வாறேனும் மூடப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளன. அது அரசுடமையாக்கப்படுவதில் கூட அவர் களிடையே கருத்தொற்றுமை இல்லை. அந்தளவுக்கு கல்வித் துறையில் ஆதிக்கம் பெற்று வரும் தனியார் சுரண்டலை அவர்கள் எதிர்க்கின்றனர்.

இன்னொரு புறம் மக்களின் அன்றாட வாழ்வைப் பாதித்து வரும் பொருளாதார நெருக்கடியினால் தடுமாறி நிற்கும் அரசாங்கம் தொடர்ந்தும் வெளிநாட்டுக் கடன்களிலேயே ஓடுகின்றது. நல்லாட்சியின் நிதித்துறை சாதனை பற்றிக் குறிப்பிடும் ரவி கருணாநாயக்க, 2016 இல் அரசு பட்ட கடன் தொகையில் ஒரு சிறியளவு பாவிக்கப்படாமல் உள்ளது என்றும் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது சேமிக்கப்பட்டுள்ள அளவு சற்று அதிகம் எனவும் இதுவே பொருளாதார வளர்ச்சியின் அடையாளம் எனவும் எக்களிக்கிறார்.

ஒட்டுமொத்தமாக வெளிநாட்டுக் கடன்களிலேயே ஓடும் அரசாங்கம், அதில் ஒரு சிறு தொகையை பாவிக்காமல் வைத்திருப்பதை பொருளாதார வளர்ச்சியின் முக்கிய குறிகாட்டியாகக் கொள்வது மிகவும் வேடிக்கையானது. இந்நிலையில், உயர் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும் அரசாங்கம் உலக வங்கியிடமிருந்து கடன் பெறுகின்றது. புதிதாக உலக வங்கி இலங்கையின் உயர்கல்வித் துறையை முன்னேற்றுவதற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையின் பெண்களது எழுத்தறிவு வீதம் 93 ஆகும். சில வளர்ச்சியடைந்த நாடுகளை விட இலங்கை எழுத்தறிவில் முன்னிலை வகிக்கின்றது. ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கான மாணவர் உள்ளீர்ப்பு 92 வீதமாகும். இது அபிவிருத்தி அடைந்த நாடுகளை விட முன்னேற்றகரமானது.

எவ்வாறாயினும், இலங்கையின் உயர்கல்வித் துறை திருப்திகரமாய் இல்லை. சமூக, பொருளாதார, அபிவிருத்திக்கான மூன்றாம் நிலைக் கல்வி இலங்கையில் போதுமானளவு விருத்தி செய்யப்படவில்லை. மூன்றாம் நிலை எனக் கருதப்படும் பல்கலைக்கழக, தொழில் தொழில்நுட்பத் துறைகளுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் தொகை வெறும் 10 வீதமாகும். 15 பல்கலைக்கழகங்களைக் கொண்டுள்ள நாட்டில் 25,000 மாணவர்கள் மட்டுமே அரச பல்கலைக்கழகங்களில் அனைத்துப் பீடங்களுக்கும் உள்வாங்கப்படுவதோடு, சுமார் 175,000 மாணவர்கள் மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புக்களை இழக்கின்றனர்.

பல்கலைக்கழக கல்வி பெற்ற பட்டதாரிகளில் அனேகமானோர் தொழிற் தகமை அற்றவர்கள் என்ற குற்றச்சாட்டும் பரவலாக முன்வைக்கப்படுகின்றது. தொழிற் தகுதி, கல்வி மட்டம் என்பவற்றுக்கான இடைவெளி அதிகரித்துச் செல்கின்றது. பல்கலைக்கழகம் முடித்தவர்கள் தொழிலுக்காக காத்திருக்க வேண்டிய நிலை நீடிக்கின்றது. வேறு வார்த்தையில், இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தொழிற் சந்தைக்கு மாணவர்களைத் தயார்செய்யவில்லை. இதற்கு இரண்டு காரணங்களை கல்வியியலாளர்கள் முன்வைக்கின்றனர்.



உயர்க்ல்வியில் நிலவும் அரசாங்கத்தின் ஏகபோகம் முதற் காரணம். உள்ளூர் மொழிகள் ஊடக மொழியாகக் கொள்ளப்படுவது இரண்டாம் காரணம். ஆங்கில மொழி ஊடான தனியார் துறை பல்கலைக்கழகங்களும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது இத்தகைய கல்வியியலாளர்களின் கருத்தாகும்.

தொழில்நுட்பம், விஞ்ஞானம் சார்ந்த ஆய்வுகளுக்கு பல்கலைக்கழகங்கள் போதிய முக்கியத்துவம் வழங்கவில்லை. இது மூன்றாவது காரணமாக முன்வைக்கப்படுகின்றது.

இன்னொரு புறம் இடதுசாரிச் சிந்தனையாளர்கள் கன்னங்கராவினால் அறிமுகம் செய்யப்பட்ட இலவசக் கல்வியானது படிப்படியாக செலவுமிக்கதாக மாற்றப்படுகிறது என்று குற்றம் சுமத்துகின்றனர். விளைவாக, இலங்கைப் பாடசாலைகளில் இடைவிலகல் வீதம் அதிகரித்துச் செல்கின்றது. தரம் 05 இற்கு முன்னர் 20 வீதமான வறிய மாணவர்கள் பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றனர்.

கல்வியில் இன்று மறைமுக செலவு (Hidden Cost) என்பது ஒரு பெரும் பிரச்சினையே. விளையாட்டு, மேலதிக உணவு, காகிதாதிகள், வகுப்புக் கட்டணங்கள், போக்குவரத்துச் செலவு, சீருடை என்பனவற்றுக்கு மாணவர்கள் மேலதிகமாக பணம் செலுத்த வேண்டியுள்ளது. மற்றொரு புறம் பாடசாலைக் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும் அரசியல் தலையீடுகளால் சீர்குலைந்து போயுள்ளன.

இந்நிலையிலேயே உயர் கல்வித் துறையை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் உலக வங்கியின் பணிப்பாளர் சபை இலங்கைக்கு உதவுவதற்குத் தீர்மானித்துள்ளது. உயர் கல்வித் துறையை விருத்தி செய்ய 100 மில்லியன் டொலர்கள் கடனாக வழங்கப்படவுள்ளது. தொழிற் தகமையை விருத்தி செய்கின்ற புதிய பாடங்க ளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கும் ஆய்வை ஊக்குவிப்பதற்கும் கல்வித் துறையில் புதியவற்றை (Innovation) இணைப்பதற்கும் இவ்வுதவி வழங்கப்படுவதாக உலக வங்கியின் அறிக்கை கூறுகின்றது.

2003 இலிருந்து இல்ங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வரும் உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி (Accelerating Higher Education Expension and Development - AHEAD) செயற் திட்டத்தின் தொடராகவே உலக வங்கி இவ்வுதவியை வழங்குகின்றது. பேண் தகு அபிவிருத்தியை எட்ட இது துணை செய்யும் எனக் கருதப்படுகின்றது. திறன்கள் பெற்ற மக்களைச் சார்ந்திருந்து உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடாக இலங்கையை மாற்றும் அபிலாஷைக்குத் தக்க உலக வங்கி உதவுகின்றது என இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் ஸ்வ்ராய் தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் உயர் கல்வி முறைமையானது உயர் திறன் பெற்ற விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள், உற்பத்தித் துறை சார்ந்தோர், கொள்கை வகுப்பாளர்கள், கல்வித் துறை சார்ந்தோர், ஆசிரியர்கள் போன்றோரை உருவாக்க வேண்டும். அவர்கள் நாட்டின் பேண் தகு பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அதேவேளை, நாட்டின் வளர்ச்சியையும் போட்டித் தன்மையையும் மென்மேலும் உயர்த்துகின்றவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த முயற்சிக்கு ஆதரவளிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் எனவும் அவர் கூறுகின்றார்.

2014 இல் உலகின் தேர்ந்தெடுக்கப்பட்ட 115 நாடுகளில் உயர் கல்வியில் பங்குபற்றுவோர் எனும் சுட்டியில் இலங்கைக்கு 88 ஆவது இடம் வழங்கப்பட்டது. ஏனெனில், உயர் கல்விக்கான மாணவர் பங்குபற்றுதல் இலங்கையில் வெறும் 21 வீதமாகும். குறை மத்திய வருமானம் (Low Middle Income) பெறும் நாடுகளில் இதன் விகிதாசாரம் 23 ஆகும். இலங்கை கனவு காணும் உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் உயர் கல்வித் துறை பங்கேற்பு 44 வீதமாகும்.

எனவே இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் மாணவர்களை மென்மேலும் பங்குபற்றச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். குறிப்பாக, பொருளாதார முன்னேற்றத்தின் மூலங்கள் (STEM) எனக் கருதப்படும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல்; கணிதம் ஆகிய துறைகளுக்கு உயர்கல்வியில் மாணவர்கள் பெருமளவு உள்ளீர்க்கப்பட வேண்டும். தற்போதுள்ள 21 வீதம் 44 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். உயர் நடுத்தர வருமான நாடுகளில் இந்த அளவே மாணவர்கள் உள்ளீர்க்கப்படுகின்றனர்.



உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி (AHEAD) கருத் திட்டத்தின் பிரதான குறிக்கோள், பல்கலைக்கழக மட்டத்தில் நவீன கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பங்களை விரிவாக்கம் செய்வதாகும். மேலும் மாணவர்களின் திறன்களை மதிப்பீடு செய்யும் முறைமைகளிலும் நவீன நுட்பங்களைக் கையாள்வதாகும். இதன் மூலம் பட்டதாரிகளின் கல்வித் துறை தகைமையை அதிகரிப்பதோடு, அவர்களது சமூகப் பொருளாதா பங்களிப்பையும் அதிகரிப்பதாகும். எனவே, உலக வங்கி இதற்கு முன்னர் வழங்கிய அனைத்து வகையான கல்விக்கான நிதி ஆதரவுகளிலிருந்தும் இது வேறுபடுகின்றது. உயர் கல்வி அபிவிருத்தி மூலோபாயத்திற்கு உலக வங்கி வழங்கும் இந்த வகை ஆதரவு இதுவே முதன் முறையாகும் என்கிறார் கல்வித் துறை நிபுணர் ஹர்ஷ அதுருபான்.

இக்கருத்திட்டத்தின் தலைமைப் பொறுப்பையும் அவரே ஏற்றுள்ளார். தொழில்நுட்பம் மற்றும் அறிவை விரிவாக்கம் செய்வதற்கு ஆய்வுகளை வளர்த்தெடுப்பதும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதும் அவசியமானது. இலங்கை உயர் நடுத்தர வருமான நாடாக மாற வேண்டும் என்ற அபிலாஷை நிறைவேற்றப்பட வேண்டுமானால், அதற்குரிய சேவைகளையும் தொழிற் துறைகளையும் கண்டுபிடிப்பதற்கு கல்வியியலாளர்களே பங்களிக்க வேண்டும் என்கிறார் ஹர்ஷ.

நாட்டிலுள்ள பல்வேறு வகையான உயர் கல்வி நிறுவனங்களில் 6 இலட்சம் மாணவர்கள் உள்ள னர். 5000 கல்வியலாளர்கள், முகாமையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இக்கருத்திட்டத் திலிருந்து பயனடைவார்கள். 6 வருட காலத்திற்கு அமுல்படுத்தப்படும் இக்கருத்திட்டம் 2023 இல் நிறைவடையும். அதேபோன்று தொழிற் தகமை வாய்ந்த பல்கலைக்கழகப் பட்டதாரிகளை பணிக்கமர்த்தும் தனியார் மற்றும் அரச துறையினரும் இதன் மூலம் பயன் பெறுவார்கள். இது தவிரவும் பல்கலைக்கழகத்தின் எதிர்கால மாணவர் தலைமுறை விரிவுரையாளர்ளகள், ஆய்வாளர்கள் இக்கருத்திட்டத்தினூடாக பயனடைவார்கள் எனவும் ஹர்ஷ அதுருபான் தெரிவிக்கின்றார்.

இக்கருத்திட்டத்திற்கு உதவியளிக்கும் உலக வங்கி, அபிவிருத்தி மற்றும் மீள்கட்டமைப்புக்கான சர்வதேச வங்கியிடமிருந்து 67 மில்லியன் அமெரிக்க டொலீர்களையும் சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடமிருந்து 33 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் கடனாக வழங்குகின்றது. உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சு, பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு, உயர்தொழில்நுட்பக் கல்விக்கான இலங்கை நிறுவனம் என்பன தேசிய மட்டத்தில் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளர்களாகச் செயற்படுவர். அதேவேளை, 15 பல்கலைக் கழகங்களும் உயர் தொழில் நுட்பக் கல்லூரிகளும் அரச சாரா உயர் கல்வி நிறுவனங்களும் நிறுவன மட்ட அமுல்படுத்துவோராக இருப்பர்.

உலக வங்கியின் இவ்வுதவித் திட்டம் குறித்து இடதுசாரிச் சிந்தனையாளர்கள் மாறுபட்ட அபிப்பிராயங்கள்ளக் கொண்டுள்ளனர். உயர் கல்வித் துறை தொடர்ந்தும் தனியார்மயப்படுத்தப்படுவதற்கு இது உந்துவிசையாக இருக்கலாம் என்று விமர்சிக்கப்படுகின்றது.

இலங்கையில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளும் முதுமானி, முதுகலைமானிகளும் மிகக் குறைந்த தகைமைகளையே கொண்டுள்ளனர். இலங்கையில் உயர் கல்விக்கு உள்வாங்கப்படும் மாணவர்களில் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு உள்வாங்கப்படும் மாணவர்கள் அரைவாசிக்கும் சற்று அதிகமானவர்கள். 58 வீதமான மாணவர்கள் இவ்வாறு அனுமதி பெறுகின்றபோதும், அவர்களுடைய கல்வித் தரம் மிகக் குறைவாகும்.

அவர்களுக்கான பல்கலைக்கழக வழிகாட் டல்களும் போதுமானதாக இல்லை. பல்கலைக் கழக கல்வியை விரிவாக்குவதில் வெளிவாரிப் பட்டப் படிப்பும் முக்கிய இடம்வகிக்கின்றது. ஆனால் அவர்களுடைய கல்வித் தரம் குறித்த எந்த மதிப்பீடுகளும் இல்லை. உதாரணமாக களனி பல்கலைக்கழகத்தில் தற்போது ஒரு இலட்சம் மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு தம்மைப் பதிவுசெய்துள்ளனர். அவர்கள் தனியார் டியூஷன் வகுப்புகளுக்குச் சென்றே தமது கற்கையை பூர்த்தி செய்கின்றனர். இதனால், அவர்களுடைய தரம் மிகக் குறைவாகும்.

முன்னாள் கல்வியமைச்சர் விஷ்வ வர்ண பால இக்குறைபாட்டை அப்போதே சுட்டிக் காட்டியிருந்தார். இவ்வாறு உயர் கல்வித் துறை எதிர்நோக்கும் தரம் சார்ந்த பிரச்சினைகளுக்கு உலக வங்கி நிதி ஆதரவு வழங்கும் இத்திட்டம் தீர்வாக இருக்கும் என பொதுவாகப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கருதுகின்றபோதும், இடதுசாரிச் சிந்தனையாளர்கள் அதனை ஏற்கும் நிலையில் இல்லை.

நிலையான ஒரு கல்விக் கொள்கை இல்லாத நிலையில், வெளிநாட்டுக் கடன்களில் மாத்திரம் தங்கியிருந்து எமது உயர்கல்வியை முன்னேற்ற முடியாது என அவர்கள் தரப்பில் விவாதிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னாள் சபாநாயகரும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகருமாகிய தேசமான்ய பாக்கீர் மாக்கார் அவர்களின் ஜன்ம தினம் அண்மையில் நினைவுகூரப்பட்டது. இதையொட்டி கடந்த இதழில் வெளியான ஆக்கம் தவறுதலாக நாடுவது நலம் பத்தியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. குறித்த தவறினால் பத்தி எழுத்தாளருக்கும் வாசகர்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம். ஆ-ர்**




இத்ரியாஸ் பாக்கிர் மாக்கார்

## வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் சமூகமல்ல நாம்

அன்று நான் குருநாகலுக்கு சென்று வரும் வேளையில் எங்காவது வீட்டிற்கு முன்னால் பழ வகைகள் விற்பதைக் கண்டால் நிறுத்துமாறு சாரதியிடம் கூறினேன். ஏனெனில், அப்பழங்களில் மருந்துகள் பூச்சுகள் ஏதும் செலுத்தப்பட்டிருக்காது. தூய்மையானதாக இருக்கும் என்றேன்.

அதற்கவர், வேண்டாம் சேர். எனது மைத்துனன் பழக்கடை வைத்துள்ளார். அங்கு விற்பனைக்கு வைக்கின்ற பழங்களுக்கு பூச்சுக்களை இடுவதற்கு முன்னர் எனது தாயார் வீட்டிற்கு பழ வகைகளை எடுத்து வருவார். நான் அதிலிருந்து கொண்டு வந்து தருகிறேன் என்பதாகக் கூறினார்.

அதற்கு நான், உங்களுடைய வீட்டிற்கு மருந்தடிக்காத பழங்களை எடுத்துச் செல்கிறீர்கள். அடுத்தவர்களுக்கு மருந்தடித்த பழங்களை விற்பனை செய்கிறீர்கள். என்ன நியாயம் எனக் கேட்டேன்.

அதற்கவர், இல்லை. பழங்கள் தூர இடங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றன. நீண்ட நாட்களுக்கு வைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக வேண்டி பூச்சு மருந்துகளை அடிக்கிறார்கள். அவ்வாறில்லாமல் பிஸ்னஸ் செய்ய முடியாது சேர் என்றார்.

அன்று வெலிகம பிரகடனத்தின் போது ஊடகவியலாளர்களிடம் கதைக்கையில், நான் இவ்விடயத்தைக் கூறினேன். எமது ஊடகங்களின் நடத்தைகளும் அரசியல் நடத்தைகளும் இவ்வாறுதான் உள்ளது என மேற்படி உதாரணத்தை குறிப்பிட்டுக் கூறினேன். தங்களது நிலவுகைக்கும் ஸ்திரப்பாட்டிற்கும் இது போன்ற மோசமான செயற்பாடுகள் ஊடகப் பாவனையிலும் அரசியலிலும் அரங்கேற்றப்படுகின்றன.

இலங்கையில் பல்வேறுபட்ட இடங்களில் முஸ்லிம்களின் பள்ளிவாயல்களுக்கும் வியாபார நிலையங்களுக்கும் கல்லெறியப்பட்டிருப்பதாகவும் குண்டு வீசப்பட்டிருப்பதாகவும் இன்று நான் கேள்விப்பட்டேன். இது போன்ற சம்பவங்களுடன் இந்நாட்டின் பெரும்பான்மையினர் தொடர்புபடுவதில்லை. ஒன்றில் சிறுபான்மைக் குழுக்கள் நாட்டில் தங்களது அரசியல் ஸ்திரப்பாட்டை தக்கவைத்துக் கொள்வதற்கு அல்லது சர்வதேச சக்திகள் நாடுகளில் சண்டைகளை மூட்டுவதற்கான நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதற்கு இது போன்ற விடயங்களை அரங்கேற்றுகிறார்கள்.

அவர்களது நிலவுகைக்கு மக்களின் உயிர் இனிப்புப் பண்டமாய் போயுள்ளது. இவ்வாறான நிலைமைகளுக்கு எதிராக முஸ்லிம் மக்கள் மாத்திரம் குரல் எழுப்பக் கூடாது. இது ஏனைய இனங்களுக்கும் பொருந்தும். தமிழர்களின் பிரச்சினையாக இருந்தாலும் சிங்களவர்களின் பிரச்சினையாக இருந்தாலும் அவற்றுக்கு அம்மக்கள் மாத்திரம் குரல் எழுப்பக் கூடாது. சரியானதை சரியாகக் காணும் மக்களின் இதயத்தைத் தட்டியெழுப்ப வேண்டும்.

உலகில் பெரும்பான்மை தவறான இடத்தில் இல்லை. ஆனால் ஒரு பிழை நடக்கும்போது எதிர்ப்புக் குரல்கள் பெரும்பான்மைச் சனங்களிடமிருந்து மேலெழுவதில்லை. இதுவே எம்மிடம் உள்ள பிரச்சினை. முஸ்லிம்களின் பள்ளிவாயல் தாக்கப்பட்டாலோ அல்லது ஏதாவது பிரச்சினையின் போதோ பள்ளிவாயல்களுக்கு முன்னால் இருந்து ஆர்ப்பாட்டம் செய்வது மாத்திரம் அதற்குத் தீர்வாக அமைந்து விடாது.

முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுகின்ற சிறுபான்மை பெரும்பான்மை அரசியல்வாதிகளிடம் நாம் செல்ல வேண்டும். அவர்களின் கவனத்திற்கு விடயத்தை கொண்டு செல்ல வேண்டும். இது நாட்டின் பிரச்சினை, முஸ்லிம்களின் பிரச்சினையல்ல என்பதை தெளிவுபடுத்த வேண்டும். நாம் ஒரு குடும்பம். இலங்கையர்கள் என்ற அடிப்படையில் வாழ வேண்டும். வெளிநாட்டு சக்திகளின் கூலிப்படைகளை அல்லது அரசியல் இலாபங்களை பெற தூண்டப்படுகின்ற குழுக்களுக்கு எதிராக மத்திய சிந்தனை படைத்தவர்களினதும் மதகுருமார்களினதும் குரலை ஓங்கச் செய்ய வேண்டும்.

ஊடகங்களும் இப்பிரச்சினைகளை ஒரு சமூகத்தின் பிரச்சினையாக நோக்காமல் பொதுப் பிரச்சினையாக ஒரு பொதுத்தளத்தில் நின்று அணுக வேண்டும். இவ்வாறு தாக்கம் விளைவிக்கும் சமூகமாகவே நாம் இருக்க வேண்டும். ஏனையவர்கள் இதைச் செய்யும் வரையில் நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

---

ஜனவரிப் புரட்சிக்குப் பின்னரான நிலவரங்கள் எதிர்காலம் பற்றிய சில முன்னோட்டங்களை கண் முன்னால் விரிக்கின்றன. ஜனவரிப் புரட்சி, அதுவரை நிலவிய ஊழலும் நெருக்கடிகளும் நிறைந்த ஆட்சியை தோல்வியடையச் செய்தது. அதனால் நாட்டுக்கு குறிப்பிடத்தக்களவு நிம்மதி கிடைத்தது. சர்வதேசத் தடைகள் விதிக்கப்படுவதிலிருந்து நாடு தப்பிப் பிழைத்தது.

இது அதுவரை குட்டிச் சுவராயிருந்த நாட்டை உடைந்து விழாமல் காப்பாற்றியது. சிறுபான்மை சம்பந்தமான புதிய அரசின் கொள்கைகள் தாராளமயப்பட்டிருந்தன. இதனால் சிறுபான்மையினர் அச்சமின்றி வாழும் சூழல் உருவானது. ஆனாலும் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியை வெல்வதற்கான மறுசீரமைப்பொன்றுக்கான தேவையோ அதற்கான ஆற்றலோ புதிய அரசிடம் காணக் கூடியதாக இல்லை. விளைவாக, நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை கூர்மையடைந்து, பாரிய நெருக்கடியை நோக்கி நாடு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.




செய்கிறது. இந்தத் தவறுக்கு மஹிந்த தனது ஆட்சி பீடத்தை நஷ்டஈடாகக் கொடுக்க வேண்டி வந்தது போன்ற நிலை நல்லாட்சிக்கும் ஏற்பட முடியும்.

மஹிந்தவைத் தோற்கடித்தல் என்ற குறுகிய இலக்குடன் செயற்பட்ட தலைவர்களுக்கு வரையறுக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தைக் கூட தாம் நாடிய அளவில் எடுத்துச் செல்ல முடியவில்லை. அந்தச் சீர்திருத்தம் கூட, ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழிப்பதற்கு பாராளுமன்றத்

நீதித் துறையில் சிக்கல்கள் இருந்தாலும் சில விசாரணைகளில் இருந்து அவர்கள் தப்ப முடியாத நிலை தோன்ற முடியும். அந்த வகையில் இவர்களது கூட்டு சில அழுத்தங்களைக் கொடுக்க முடியுமாக இருந்தாலும் ஆட்சிக்கு வருகின்ற அளவுக்கு இருக்காது. பிரதான நீரோட்டத்தி லிருந்து விலகிச் செயற்படும் சிறிய சிங்கள, தமிழ் கட்சிகளும் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் வெற்றிடத்தை நிரப்பும் நிலையில் இல்லை.

தற்போதைய அரசியல் நீரோட்டத்திலுள்ள சிறிய பெரிய கட்சிகள் அனைத்தும் வரலாற்றில் தமது இறுதிப் பயணத்தை மேற்கொண்டிருப்பதாகவே தெரிகிறது. கூடுதலாகவோ குறைவாகவோ எல்லாக் கட்சிகளும் நாட்டின் தற்போதைய வீழ்ச்சிக்கு வகை கூற வேண்டியவைகள். இந்தக் கட்சிகள் எல்லாம் மிகவும் பழையவை. ஜே.வி.பி. 52 வருடம் பழமையானது. இந்தக் கட்சிகள் எல்லாம் தாம் பிறந்த

# என்ன நடக்கிறது? நாமென்ன செய்யலாம்?



ஜனவரிப் புரட்சிக்கு உரித்தான இந்த வரை யறைகள் புரட்சியின் ஆரம்பகால அரசியல் சித்தாந்தங்களிலேயே உள்ளடக்கப்பட்டிருந்தது. ராஜபக்ஷ பரிவாரத்தை நீக்குவதே அதன் பிரதான நிகழ்ச்சி நிரல். இதுவன்றி அதுவரை உருவாக்கப்பட்டிருந்த நெருக்கடிகளிலிருந்து நாட்டை மறு சீரமைப்பதற்கான எதுவும் புரட்சியின் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஜனாதிபதி முறை மாற்றப்படுவது தொடர்பில் பேசப்பட்டதும் தெளிவானதொன்றாக இருக்கவில்லை.

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் கூட ராஜபக் ஷாக்களின் ஊழல், சீர்கேடுகள் என்பவற்றோடு அரசியலமைப்பு மாற்றமொன்று தொடர்பில் இலேசாகப் பேசப்படுவதேயன்றி பாரிய மறுசீரமைப்பொன்று தொடர்பில் எதுவுமே கேட்கக் கூடியதாக இல்லை.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும் போது, சட்டத்தை உருவாக்கும் பாராளுமன்றம், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொலிஸ், நீதியை நிலைநாட்டும் நீதிமன்றம் உட்பட அனைத்துமே மோசடிகளால் சூழப்பட்டிருந்தன. இனங்கள், மதங்களுக்கிடையிலான இணைப்பு சீர்குலைந்திருந்தது. இவை அனைத்தையும் புனர்நிர்மாணம் செய்வது ஆரோக்கியமான முன்னகர்வுக்கு வேண்டப்படும் விதியாகவே மாறிப்போயிருந்தது.

இதற்கான ஒரு பலமான தொலைநோக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்களுக்கு இருக்கவில்லை. அதிகாரத்துக்கு வந்த பின்னரும் கூட அவர்கள் இதற்காக முயற்சிக்கவில்லை. பிரதமர் ரணிலுக்கு பொருளாதாரம் தொடர்பில் தொலைநோக்கு இருந்தாலும், அழுகிப் போயிருக்கின்ற அரச நிர்வாகத்தை மாற்றுவதற்கான வழிமுறைகள் எதையும் வகுக்காமல் அந்த பொருளாதார இலக்கை அடைவது அவருக்குச் சாத்தியமாகப் போவதில்லை.

அரசியலமைப்புக் குழுவுடன் செயற்படும் சுயாதீன கொமிஷன்கள் தான் நிர்வாக முறையில் உள்ள அழுகியவைகளை களைவதற்கான ஒரே முறையாக நல்லாட்சித் தலைவர்களுக்கு உள்ளது. ஆனாலும் அழுகிப் போயுள்ள நிர்வாக முறையை மறுசீரமைப்பது அரசியலமைப்புக் குழுவினரின் நோக்கமல்ல.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களை அதிகரித்து, சட்டவாக்கத்துக்கு அவர்களது ஆதரவைப் பெறுவதனைத் தவிர பாராளுமன்றமும் மறுசீரமைப்பொன்றுக்காக முயற்சிக்கவில்லை. உயர் நீதிமன்றத்துக்கு புதிய பிரதம நீதியரசர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அது எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லை.

தனக்கு பக்கச் சார்பாக செயற்படுவதற்கென மஹிந்தவின் காலத்தில் தெரிவு செய்யப்பட்ட சில நீதிபதிகளுக்கு பதுளை மாவட்டத்திலுள்ள கதிர்காம தேவாலயக் காணியில் 15 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நல்லாட்சி எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதுபோல வரி அறவிடும் எல்லா நிறுவனங்களும் மோசடி நிறைந்ததாகவே இன்னும் உள்ளது.

மஹிந்த அரசு பிரபாகரனைத் தோற்கடித்தாலும் முப்பது வருட வன்முறைச் சூழலில் அழுகிப் போயிருந்த சமூக, அரச நிலைமைகளை மறுசீரமைத்து மீட்டெடுப்பதற்கு மஹிந்த அரசு தவறிவிட்டது. இதே தவறைத்தான் அவரைத் தோற்கடித்து ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசும்

தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் என்ற இலகுவான கோட்பாட்டைக் கூட கவனத்தில் எடுத்திருக்கவில்லை. நீதிமன்றத்துக்குச் சென்ற பின்னர் இதனை அறிந்து கொண்ட இவர்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்குச் செல்வதற்கான தைரியமும் இல்லை.

ஜனாதிபதி முறையை ஒழித்தலிலும் பொது உடன்பாடு எட்டப்பட்டதாக இல்லை. ஜனாதிபதியைச் சூழ உள்ளவர்கள் பிரதமருக்கு அதிகாரம் செல்வதை விரும்பவில்லை. இதனால் ஒரு விகாரமடைந்த அரசியலமைப்புதான் எமக்கு உரித்தாகியுள்ளது.

புதிய அரசியலமைப்பை சட்டபூர்வமாக்குவதற்கென முன்வைக்கப்பட்டுள்ள முறைமைகளில் நல்லதொரு அரசியலமைப்பு உருவாவதற்கான இடமில்லை என்பதோடு, அப்படி உருவாக்கப்பட்டாலும் அதனை சட்டபூர்வமாக்குவதும் முடியாத காரியம். ஏனெனில், சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படாமல் அரசியல் யாப்பு சட்டபூர்வமாகாது.

அரசாங்கம் தெளிவில்லாத பல இலக்குகளை குறிவைத்துச் செயற்படுகிறது. ஒன்றுக்கொன்று முரணான பல அரசியல் சாசனங்களை அரசு செயற்படுத்துகிறது. அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளை விட அப்பாவித் தாய்மாருக்கு உரையாற்றுவதையே மிகவும் விரும்புகிறார்கள். முக்கியத்துவமற்ற விடயங்களிலேயே கவனத்தைக் குவிக்கிறார்கள். குறைந்த பட்சம் அரச அதிகாரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவாவது முடியாத நிலையிலேயே அரசாங்கம் இருப்பதாகத் தெரிகிறது.

இந்தச் சூழலில் வளர்ச்சியடையும் ஒரு பொருளாதாரத்தை நாங்கள் எதிர்பார்க்க முடியாது. சாதுவான தாய்மாரது பிரச்சினையை விட மூலோபாய விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுவதற்கும் வழியில்லை. சிறுபான்மையினரின் பிரச்சினைகளில் கூட சலுகைகளுக்கப்பால் எதையும் எதிர்பார்க்க முடிவதில்லை. எதுவுமே சரியாக நடைபெறாமல் செயலிழந்த நிலையில் புற்றுநோய் போல இது நாடு முழுவதும் பரவியுள்ளது. இந்நிலையில் அரசு மீது மக்கள் நம்பிக்கை இழப்பது தவிர்க்க முடியாதது. மக்கள் பலத்தை இழந்து, அரச பலத்தில் மட்டுமே அரசாங்கத்தை நடத்திச் செல்ல வேண்டிய நிலைக்கு அரசு ஆளாகியுள்ளது.

அரசாங்கத்தின் இந்தச் சரிவு மஹிந்தவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரும் என்று நினைக்க முடியாது. மஹிந்தவையும் சூழவுள்ளவர்களையும் நோக்கிய குற்றச்சாட்டுக்கள் பாரியவை. விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்படும் விடயங்கள் அவர்களது மக்கள் அங்கீகாரத்தை தவிர்க்க முடியாமல் மேலும் பலவீனமடையச் செய்துவிடும்.

காலத்திலேயே இன்னமும் ஜீவிக்கின்றன.

இலங்கை சுதந்திரமடையும்போது ஆசியா வில் முன்னேற்றமடைந்த நாடாக இருந்தது. 1000 கிலோ மீட்டர் புகையிரதப் பாதையுடன் செயற் திறன் கூடிய இலாபகரமான புகையிரத சேவை எம்மிடமிருந்தது. கொழும்பில் ட்ரம்ப் காரும் ட்ரொலி பஸ்ஸும் ஓடின. எமது தலா வருமானத்தை ஜப்பானால் மட்டுமே தாண்ட முடிந்தது. கல்வியிலும் பொதுச் சுகாதார வசதி களிலும் ஆசிய நாடுகளிலேயே முன்னேறிய நாடாக இலங்கை விளங்கியது. முன்னேற்றகரமான சிவில் சேவை, கௌரவமான நீதிச் சேவை, சிறந்த பாராளுமன்றம் என்பன இலங்கையின் வசத்தில் இருந்தது.

நவீன உலகுக்கு இலங்கை சிறந்த தலைவர்களை உருவாக்கிக் கொடுக்கவில்லை. அவர்களிடம் தூர திருஷ்டியும் இருக்கவில்லை. சுதந்திரம் கிடைக்கும்போது நாடு இருந்த முன்னேற்ற நிலைமையை தொடராக முன்னெடுத்துச் செல்ல அவர்களால் முடியவில்லை. நாட்டின் பிரஜைகளை பேதங்களின்றி சமஉரிமையுடன் சுயகௌரவத்துடன் வாழ்கின்ற மக்களாக மதிக்கச் செய்வதற்கு இந்தத் தலைவர்களால் முடியவில்லை.

இனவாதம், குலவாதம், மதவாதம் என்பவற்றை இல்லாதொழிப்பதற்குப் பதிலாக அவற்றுக்கு உரமூட்டினார்கள். இதை வைத்து குறுகிய அரசியல் இலாபம் தேடினார்கள். பிரித்தானிய காலனித்துவ வாதிகளால் கிடைக்கப் பெற்ற நவீன தேசிய அரசக் கொள்கையின் நிலைத்தலுக்கு ஒன்றுபட்ட தேசமொன்றைக் கட்டியெழுப்பும் தேவையை இவர்களால் உணர முடியவில்லை. மாறாக உருவாகி வந்த தேசிய ஒற்றுமையை சின்னா பின்னமாக்கி விட்டார்கள்.

நாட்டை வளப்படுத்துவதற்குப் பதிலாக நாட்டின் வளங்களை உறிஞ்சினார்கள். நாட்டின் அரசியலமைப்பை, நீதிமுறையை, நிர்வாகத்தை சீரழித்தார்கள். நாடு இரத்தம் சொட்டும் நிலைக்கு மாற்றப்பட்டது. தெரிந்தோ தெரியாமலோ தம்மால் இழைக்கப்பட்ட பாரிய குற்றத்துக்கு கவலைப்படாமல், பச்சாதாபப்படாமல் அரசியல் சித்தாந்தங்களிலிருந்து அரசியல் பார்வையை தூரமாக்கி வைத்திருக்கின்ற நிலைமை நல்லதாக அமையப் போவதில்லை.

ஆனாலும், இதனால் உண்டான இடைவெளியை நிரப்புவதற்கான மாற்று இயக்கம் ஒன்று இல்லாமலேயே இவையெல்லாம் நடக்கப் போகிறது. இது ஏதோவொரு வகையில் அராஜகநிலையொன்றைத் தோற்றுவிப்பதற்கு காரணமாக அமையும் என்பதோடு, மாற்று இயக்கமொன்று இந்த அராஜக காலப்பிரிவில் தான் தோன்றவும் முடியும்.

அறிவுபடைத்த பிரஜைகளை ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்த முடிந்தால், அராஜகமொன்று உருவாவதால் விளையப் போகும் விபரீதங்களை குறைக்க முடியும். ஊர்மட்டத்தில், நகர மட்டத்தில், வேலைத்தளங்களில் பிரஜைகள் அமைப்பொன்றை உருவாக்க முடிந்தால், பின்னர் அவற்றை ஒருங்கிணைத்து பிரஜைகள் மத்திய நிலையமொன்றை உருவாக்கி மக்களை அறிவூட்டி அவர்களால் இயக்கப்படும் இயக்கமொன்றை நடத்திச் செல்ல முடிந்தால் நாட்டுக்கு ஏற்படவுள்ள அழிவை ஆக்கமாக மாற்ற முடியும். வரவிருக்கின்ற நிலைமாறு காலத்தில் நாட்டுக்கு நல்லதொரு எதிர்காலத்துக்குத் தேவையான பலமான அடிப்படையொன்றை இதனூடாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடிக்காத ஆட்சியாளரை மாற்றுமாறு கோருவது மக்களின் உரிமையாகும்

**கலாநிதி அஹ்மத் றய்ஸூனியுடனான நேர்காணல்**

தமிழில்: ஏ.டபிள்யூ.எம். பாஸிர்



முஸ்லிம் அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின் பிரதித் தலைவரும், ஹரகதுத் தவ்ஹீத் வல் இஸ்லாஹ் இயக்கத்தின் முன்னாள் (1996-2003) தலைவரும், மகாஸித் பேரறிஞரும், மொரோக்கோ சிந்தனையாளருமான கலாநிதி அஹ்மத் றய்ஸூனி அவர்களுடன் 'இழாஆத்' சஞ்சிகை மேற்கொண்ட நேர்காணல் இது.

- **அறபு வசந்தம் உருவாகி ஆறு வருடங்கள் கடந்திருக்கும் தறுவாயில், புரட்சிகள் ஏற்படுத்தியிருக்கும் விளைவுகளை எவ்வாறு நோக்குகிறீர்கள்? இவ்விளைவுகள் முடிவின்றி தொடர்கின்றனவா?**

வரலாற்றில் இறுதியானது என்று எதுவுமில்லை. அங்கு எதிர்ப்பும், போராட்டமும், ஏற்றமும் இறக்கமும், அமுக்கமும் வெடிப்பும் காணப்படுகின்றன. இது பொதுவானதொரு பார்வை.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னர் அறபுலகில் ஆர்ப்பரித்தெழுந்த புரட்சிகர எதிர்ப்பு நடவடிக்கையானது -அது அறபு வசந்தம் என்றழைக்கப்படுகிறது- பல்வேறு ஏற்றத்தாழ்வுகளுடன் தொடர்ந்தும் உயிர்ப்புடன் உள்ளது. சிரியாவிலும், லிபியாவிலும், யெமனிலும் அது பற்றியெரிகின்றது. எகிப்திலே மிகக் கொந்தளிப்பான சூழ்நிலையில் உள்ளது. தூனீசியாவிலும், மொரோக்கோவிலும் ஒருவகை அமைதியுடன் அது காணப்படுகிறது. அல்ஜீரியா, சவூதி அரேபியா போன்ற நாடுகளில் அது மர்மமாக மறைந்திருக்கிறது அல்லது பிற்போடப்பட்டுள்ளது.

ஆயுதப் போராட்டமாக அல்லது உள்நாட்டு யுத்தமாக மாறிய நிகழ்வுகள் ஏற்பட்ட நாடுகளைப் பொறுத்தவரை இருள் போர்த்திய, துயர் நிறைந்த நிலைமையில் உள்ளன. சாத்தியமற்ற நிலை தொடர்ந்தும் காணப்படுகிறது.

இராணுவமும், அரச தரப்பு கூலிப் படைக் கும்பல்களும், பல்வேறு அடக்குமுறைக் குழுக்களும் களத்தில் இறங்கிச் செயற்பட்ட நாடுகளின் சூழ்நிலை மிக மிக மோசமானது. நிராயுதபாணிகளான மக்களின் சாத்வீக நடவடிக்கைகளை அவை ஆயுதம் கொண்டு அழித்து வருகின்றன. சதிப்புரட்சியும், இராணுவமும், ஆயுதப் போராட்டமும் எவ்வித மாற்றமுமின்றி இருந்தது போன்றே இருக்கின்றன.

இவ்வேளையில், ஆட்சியாளர்களும், மன்னர்களும் புரிந்த கீழ்த்தரமான குற்றங்களை எம்மால் மறக்க முடியாது. அவர்கள் எதிர்ப் புரட்சியை உருவாக்குவதற்காக முடியுமானளவு பாடுபட்டிருக்கிறார்கள்; செல்வங்களை வாரியிறைத்திருக்கிறார்கள்; ஆதரவளித்திருக்கிறார்கள்; இப்போதும் அப்படியே செய்து வருகிறார்கள்.

- **சிரியா, ஈராக்கில் இருப்பது போன்ற குறுங்குழுவாத பிரச்சினை பல அறபு நாடுகளிலும் விஷ்வரூபமெடுத்திருக்கிறது. உங்கள் பார்வையில் இணைந்து வாழ்வதற்கான எதிர்கால வழிமுறைகள் எவை?**

தற்போதைய குழுவாத மோதல்களை உயிர்ப்பித்து, எரிய வைத்து, அவற்றின் ஆயுதங்களை வெளியே கொண்டுவரச் செய்தது ஈரான் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. சவூதியும் அதனோடு இணைந்த நாடுகளும் பதிலுக்கு களமிறங்கியுள்ளன. தமது அனைத்து சக்திகளையும், வளங்களையும், ஆயுத தளபாடங்களையும் திரட்டியுள்ளன.

இவற்றுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு மக்களும், இஸ்லாமிய சமூகமும் அதற்குப் பெரும் விலையை செலுத்தி வருகின்றனர். குறிப்பாக ஷீஆ, சுன்னி குழுக்கள் வாழும் பன்மைச் சமூகங்கள் மிக அதிக விலையை செலுத்தி வருகின்றன.

ஐரோப்பிய ஆக்கிரமிப்பினதும் பலஸ்தீன் மீதான காலனித்துவத்தினதும் பின்னர் முஸ்லிம்களை பீடித்திருக்கும் ஒரு சமகாலப் பேரனர்த்தமாக நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இக்குறுங் குழுவாத போராட்டம் மாறியிருக்கிறது.

பிரச்சினை ஆரம்பித்தது என்ற வகையில் தீர்வும் ஆரம்பிக்க முடியும் என்று மட்டும் நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்பு அடிப்படையில் என்னால் சொல்ல முடியும்.

நான் மிக அஞ்சும் ஒரு விடயம், ஈரானின் குரோதமும், அதன் குறுங் குழுவாத லட்சியங்களும் அவர்களுக்கு பேரழிவொன்றைக் கொண்டு வந்து விட்டுத்தான் அடங்கும் என்பதுதான். அவர்களின் குருட்டுத் தனமான கொள்கைகளின் கசப்பான அறுவடைகளை அவர்கள் கண்டு கொள்வார்கள். அதற்கு முன்னர் அவர்கள் தமது கண்களையும், அறிவையும் கொஞ்சம் திறக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

- **அரசாங்கத்திற்கு எதிரான வன்முறையை மறுதலிப்பதிலும், சாத்வீக போக்கை வரவேற்பதிலும் உங்களுக்கென்று தெளிவானதொரு கருத்து இருக்கிறது. அதனை ஷரீஆக் கோணத்தில் தெளிவுபடுத்துவீர்களா? ஜிஹாதிய இயக்கங்கள் ஆற்றிய பணிகள் மற்றும் இஸ்லாமிய உம்மத்தில் அது ஏற்படுத்திய பாதிப்புக்கள் குறித்த உங்களது மதிப்பீடு என்ன?**

ஜிஹாதிய இயக்கங்கள் என்று நாமம் சூட்டப்பட்டவை "அவர்கள் குர்ஆனை வாசிக்கிறார்கள். அது அவர்களின் தொண்டைக் குழியை தாண்டுவதில்லை" என்ற நபிகளாரின் ஹதீஸ் சுட்டி நிற்கும் சமூகத்திற்கு வெளியால் உள்ளவர்களல்ல. அறிவோ, புரிதலோ, புத்தியோ, சிந்திப்போ அற்றவர்கள்தான் அவர்கள். அறபு இஸ்லாமிய உலகில் அரசியல், சமூக, கலாச்சார ரீதியாக நிலவிய நோயுள்ள சூழ்நிலைதான் அவர்களை உருவாக்கியிருக்கிறது.

அரசியல் வன்முறை அல்லது ஸ்திரமான ஆட்சியாளருக்கு எதிராக ஆயுதம் ஏந்துவது குறித்த எனது நிலைப்பாடு முஸ்லிம் புத்திஜீவிகளிடத்தில் காணப்படுகின்ற இஜ்மாவை ஒத்ததான நிலைப்பாடே. அந்நிலைப்பாட்டுக்கு ஷரீஆ ஆதாரங்கள் உள்ளன. அறிவுபூர்வமான, வரலாற்று நியதியிலான ஆதாரங்களும் காணப்படுகின்றன.

அவற்றை சுருக்கமாக சொல்வதென்றால், இவ்வழிமுறை அனைத்து நிலைகளிலும் அழிவையே கொண்டுவரும் எனலாம். ஆமாம். ஆட்சியாளன் அவனது இராணுவத்தையும் ஆயுதங்களையும் பயன்படுத்தி சாத்வீக நடவடிக்கையை எதிர்கொள்ள வெளிக்கிட்டால் நடப்பது அதுதான். அதன் பிறகு அது இன்னுமொரு நிலையாக, இன்னுமொரு விவகாரமாக மாறிவிடுகிறது.

தனக்குப் பிடிக்காத ஆட்சியாளரை மாற்றுமாறு கோருவது மக்களின் உரிமையாகும். நீ ஆட்சியை தந்துவிட்டு போய்த்தொலை எனக் கூறுவதும் மக்களது உரிமைதான். அவ்வேளையில் ஆட்சியிலிருந்து நீங்குவது, சாத்வீக ரீதியிலான ஏற்பாடுகளை செய்ய வேண்டியது ஆட்சியாளனின் கடமையாகும். எனினும் எந்தவொரு வரையறுக்கப்பட்ட குழுவுக்கும் அவ்விடயத்தை தனியே கையாளும் உரிமையோ, பலப்பிரயோகம் செய்து அல்லது மிகைத்து ஆட்சியாளரை கவிழ்க்கும் உரிமையோ கிடையாது.

- **எகிப்தில் நடுநிலை இஸ்லாமிய அணி – ஒடுக்குமுறை காரணமாக– களத்திலிருந்து புறந்தள்ளப்பட்டுள்ள நிலையின் பாதிப்பை சமூக, அழைப்பியல் கோணத்தில் எவ்வாறு நோக்குகிறீர்கள்? இவ்வாறானதொரு சூழலில் இவ்வணியின் புதல்வர்கள் சமூகத்துடன் எவ்வாறு உறவாட முடியும்?**

எகிப்தின் கடினமான நிலைமை எமக்குத் தெரியும். பொதுவாக எகிப்திய மக்களையும், குறிப்பாக இஸ்லாமியவாத தரப்பினரையும் சூழ்ந்திருக்கும் அநியாயத்தின் அளவை நாம் அறிந்திருக்கிறோம்; அளவிட்டிருக்கிறோம். இராணுவ, பொலிஸ் அமைப்பின் இயல்பையும் நாம் அறிந்து வைத்திருக்கிறோம்.

எகிப்து இன்று அரசியல், உரிமை, சமூக ரீதியாக வரண்டு, காய்ந்து போயிருக்கிறது. இந்நிலையில் தஃவா, கலாச்சார, அரசியல் ரீதியில் படிமுறை அடிப்படையிலான சாத்வீக இஸ்லாமிய பணி எவ்வடிவிலேனும், எப்பெயரின் அல்லது பெயர்களின் கீழேனும் முன்னெடுக்கப்பட வேண்டியது மிக அவசியமானது.

அது எப்படி இடம்பெற வேண்டும் என்பது ஒரு உள்விவகாரம். அதற்கு நடைமுறை ரீதியான விடை என்னிடம் இல்லை. எனினும் கொள்கை அடிப்படையில் சூழல் நிலவரத்துடன் நெகிழ்வாகவும், இசைவாக்கமாகவும் நடந்துகொள்வது கண்டிப்பானது.

- **முழுமைத்துவ இயல்பு கொண்ட எகிப்து இஹ்வானுல் முஸ்லிமூன் போன்ற இஸ்லாமிய ஜமாஅத்துகள் காலாவதியாகி விட்டனவா? திறம்பட தொழிற்படும் ஜமாஅத்துக்களாக அவற்றை எவ்வாறு இசைவாக்கமடையச் செய்யலாம்?**

ஆமாம். இது முற்றிலும் சரியானது. "அருமை புதல்வர்களே! ஒரு வாயிலால் நுழையாதீர்கள். பல வாயிலால் நுழையுங்கள்" எனும் வசனத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய காலத்தில் நாங்கள் உள்ளோம். "பூமியில் பல அருவிகளை வெடிக்கச் செய்தோம். ஆகவே நிர்ணயிக்கப்பட்ட ஒரு காரியத்திற்காக தண்ணீர் ஒன்று சேர்ந்தது" என்ற அல்குர்ஆனின் சுட்டிக்காட்டலை நடைமுறைப்படுத்த வேண்டிய காலத்தில் நாம் வாழ்கிறோம். அதனை எப்படி நடைமுறைப்படுத்துவது? என்பதைப் பொறுத்தவரையில் அக்கேள்வி வரையறுக்கப்படுவதுடன், அதற்கான விடை எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும் ஏற்றால் போல் புதிப்பிக்கப்பட வேண்டும்.

- **சிந்தனையை புதிப்பித்தல் எனும் கோணத்தில் இஸ்லாமியவாதத் தரப்பின் சமகால யதார்த்தத்தை எவ்வாறு மதிப்பீடு செய்கிறீர்கள்? அதனை இயக்கவாதிகள் மிகைத்திருப்பதன் விளைவால் அவ்வணி என்ன விலையை செலுத்த வேண்டியேற்படும்?**

இஸ்லாமிய அமைப்புக்களினதும் பொதுவாக கட்சி அரசியல் அமைப்புக்களினதும் மிகச் சிக்கலான அம்சங்களில் ஒன்றுதான் இது. உயர் அந்தஸ்தும், உயர் கருத்துரிமையும் அணியின் உயரதிகாரிகளுக்கே வழங்கப்படுகிறது.

படித்தவர்களும், சிந்தனையாளர்களும், அறிஞர்களும் ஓரமாக்கப்படுகின்றனர் அல்லது இராஜினாமா செய்யவைக்கப்படுகின்றனர். இதன் மூலம் இயக்கம் சாரணர் இயக்கமாக பார்க்கப்படுகிறது. அதன் முதலும் இறுதியுமான கவலை கட்டுப்பாடும், ஒழுங்கும்தான். அறிவு வெற்றிடத்தையும், ஆழ்ந்த புலமையின்மையையும் பொறுத்தவரை அது சில பேச்சுத்திறமையாளர்களால், நுனிப்புல் மேயும் உணர்வெழுச்சிக் குழுக்களால் நிரப்பப்படுகிறது அல்லது ஈடுசெய்யப்படுகிறது.

இது உண்மையானதும், ஆபத்தானதுமான ஒரு இடைவெளியாகும். தீர்மானம் எடுக்கும் இடங்களும், வழிகாட்டல் தளங்களும் அறிஞர்களாலும், சிந்தனையாளர்களாலும், புத்திஜீவிகளாலும் நிரப்பப்படாவிட்டால் இயங்கங்களும், ஜமாஅத்துக்களும் வரட்சி, நுனிப்புல் மேய்தல் மற்றும் மந்தத்தால் பீடிக்கப்படும்.

- **ஹரகதுத் தவ்ஹீத் வல் இஸ்லாஹ் என்ற உங்களது அனுபவத்தின் பின்புலத்தில், தூனீசிய நஹ்ழா அதன் பத்தாவது மாநாட்டில் எடுத்த தனது அரசியலையும் பிரச்சாரப் பணியையும் பிரிக்கும் தீர்மானத்தை எவ்வாறு நோக்குகிறீர்கள்? அம்மாநாட்டின் பின்னர் அதன் இயக்கப் பாதை அத்தீர்மானத்துடன் இயைபடைந்து செல்லுமா?**

அரசியல் கட்சியையும், பிரச்சாரப் பணியையும் பிரிக்கும் நஹ்ழாவின் தீர்மானம் கொள்கை அடிப்படையில் தீட்சண்யமான, துணிவுகரமான ஒரு எட்டு எனலாம். எனினும் அதன் செயல் வடிவம் இன்னும் தெளிவாக இல்லை. சில வேளை தூரநோக்கு, கொள்கை என்ற அடிப்படையில் அதற்கு இன்னும் காலம் கனியாமல் இருக்கலாம்.

- **மொரோக்காவில் அரசாங்கம் அமைப்பதில் ஏற்பட்ட அரசியல் இழுபறிகளையும், சிரமங்களையும் நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? அப்துல் இலாஹ் பென்கீரான் தலைமையில் முன்னைய அரசாங்கம் மேற்கொண்ட சீர்திருத்தங்களில் அது எவ்வகையான தாக்கத்தை செலுத்தப் போகிறது?**

நிலமை எவ்வாறிருந்த போதிலும் இறுதி விளைவுகளை வைத்தே படிப்பினை பெறமுடியும். அரசாங்கம் அமைக்கப்பட்டு அது (பக்.14)




## வரிக்கஞ்சிய ஈத்தம்பழம்

அபூ ஷாமில்

ரமழான் என்றவுடன் பள்ளிவாசல்கள் எல்லாம் உஷாராகிவிடுகின்றன. மக்கள் தொழ வேண்டும், ஸகாத் கொடுக்க வேண்டும் என்பதைத் தூண்டுவதற்காக அறிவித்தல் கொடுக்காத பள்ளிவாசல்கள் எல்லாம் நோன்பாளியை நோன்பு துறக்க வைப்பதன் சிறப்புக்களை எடுத்துக் கூறி பள்ளிவாசலில் இப்தார் ஏற்பாட்டுக்காக நிதி சேகரிக்கத் தொடங்கிவிட்டன. கஞ்சிக்கு இவ்வளவு, இறைச்சிக் கஞ்சியென்றால் இவ்வளவு, இப்தார் புல் பக்கேஜ் இவ்வளவு, ஹாபீ் பக்கேஜ் இவ்வளவு, 27 க்கு தலைக்கு இவ்வளவு என உம்ரா வியாபாரிகள் போல ஜும்ஆவுக்குப் பின்னர் ஏகப்பட்ட விளம்பரங்கள். இனி ஒரு மாதத்துக்கு பள்ளிவாசல் நிர்வாகம் ரமழானை கஞ்சி காய்த்தே கழித்துவிடும்.

அப்படியானால் சமூகத்தின் நிலைமை? இருக்கவே இருக்கிறது ஈத்தம்பழம். இந்த முறை பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி. கடந்த முறை டக்ளஸ் தேவானந்தா. அதற்கு முன்னர் சஜித் பிரேமதாச என முஸ்லிம்கள் நோன்பு துறப்பதற்கான ஈத்தம்பழம் தொடர்பில் 21 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் பலரும் குரல் கொடுத்து வருகிறார்கள். முன்னைய காலங்களில் அதியுச்சமாக 9 மில்லியன் ரூபா முஸ்லிம்களின் கலாச்சார நிதியிலிருந்து இலவச ஈத்தம் பழத்துக்கான வரியாக கழிக்கப்பட்டு, நல்லாட்சியில் கடந்த வருடம் இரண்டு கோடி ரூபா வரை அது உயர்ந்து சென்றுள்ளது. மறிச்சுக்கட்டி, மாயக்கல்லி என குவிய வேண்டிய முஸ்லிம்களின் கவனம் இன்னும் ஒரு மாதத்துக்கு ஈத்தம்பழ வரியில்தான் குவியப் போகின்றது.

மந்திரிமார்களின் வாகனங்கள் எல்லாம் இறக்குமதி வரியின்றி நாட்டுக்குள் இறங்கி வந்து உல்லாசமாக உலவித் திரிகையில், இனாமாகக் கிடைக்கின்ற எதுவெல்லாமோ இலகுவாக உள்நுழைகையில் பகலெல்லாம் நோன்பிருந்தவர்களின் நோன்பு துறப்பதற்காக இலவசமாகக் கிடைத்த ஈத்தம்பழத்துக்கு மட்டும் வரி. ஒன்றில் அது முஸ்லிம் கலாச்சாரத்துக்கு என ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கழிக்கப்பட வேண்டும் அல்லது அனுப்பிய முஸ்லிம் நாடே அரசாங்கத்துக்கு வரியும் கட்ட வேண்டும். இதுதான் விதி.

இம்முறை இலங்கை அரசாங்கம் முஸ்லிம்கள் மீது விதித்த இப்தார் வரியை சவூதி அரசாங்கம் பொறுப்பேற்றிருக்கிறது. அதாவது ஏறக்குறைய 02 கோடி ரூபாவை இலங்கை மக்களுக்கு ஈத்தம்பழம் அனுப்புவதற்காக சவூதி அரசாங்கம் செலவழித்துள்ளது. இலங்கையில் நடத்தப்பட்ட சர்வதேச இஸ்லாமிய மாநாடுகளின் செலவுகளுடன் ஒப்பிடும்போது இது வெறும் ஈத்தம்பழத் துண்டின் பெறுமானமாக சிலருக்குத் தெரியலாம். ஆனால் இலங்கை மண்ணின் மைந்தர்களுக்கு இது உஹது மலையளவு பாரிய பிரச்சினை.

கடந்த ரமழானின் இப்தார் நேரத்துக்கு ரங்காவின் மின்னல் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. ஹுனைஸ் பாரூக், பாயிஸ், மஸ்தான் ஆகியோர் கடந்த ஆட்சியில் போலவே நல்லாட்சியிலும் முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்வதாக உரையாடிக் கொண்டிருந்தனர். இது தொடர்பில் கருத்து வெளியிட தொலைபேசியில் தொடர்பு கொண்ட கோலர் ஒருத்தரிடம் என்ன விதமான பிரச்சினைகள் தொடர்கின்றன என அறிவிப்பாளர் கேட்ட போது, பாருங்கள். நோன்பு 15 உம் முடியப் போகிறது. எங்களுக்கு இன்னும் ஈத்தம்பழம் வந்து சேரவில்லை என்று அந்த பக்திமான் அருள்மொழிந்தார்.

இந்த நாட்டில் ஈத்தம் பழம்தான் எமது பிரதான பிரச்சினையா? அல்லது ஈத்தம்பழப் பிரச்சினை ஒவ்வொரு வருடமும் தொடர்கின்ற அளவுக்கு அதை தீர்த்து வைக்க எமக்கு வக்கில்லையா? ஒரு ஈத்தம்பழத் துண்டையேனும்... என்று நபிகளார் வர்ணித்த இழிவுப் பெறுமானத்துக்கு சமூகம் வந்துவிட்டதன் அடையாளம் இதுதானா?

ரமழானில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு எவ்வளவோ இருக்கிறது. ரமழானில் குறைந்த எண்ணிக்கையினர் ஒரு பெரும்பான்மையை வென்ற பத்ர்களம், ஷுஹதாக்களின் மீது யாஸீன் ஓதுவதற்கு மட்டுமே ஞாபகிக்கப்படுகிறது. எதிரிகளால் மட்டுமே சூறையாடப்பட்ட பத்ரின் முஹாஜிர்களையும் விட இன்று தனது சொந்த சமூகத்தினாலேயே, அதன் அரசியல் தலைமைகளாலேயே கருவறுக்கப்படுகின்ற அநீதி இலங்கை முஸ்லிம் சமூகத்துக்குள்ளா[illegible] நடக்கிறது.

இது போன்ற ஆயிரமாயிரம் அநீதிகளால் வ[illegible]ய மூடி பட்டினியாக இருக்கும் சமூகம் விழித்துக் கொள்வதற்கு இந்த ரமழான் பயன்படுத்தப்பட வேண்டும். திட்டமிடப்படுகின்ற இப்தார்கள், சமூகத் தலைமைகளை அழைத்து இந்த விடயங்களைப் பேசுவதாக அமைய வேண்டும்.

இல்லாவிட்டால், கடந்த வருடம் ஈத்தம்பழத்துக்கு விதிக்கப்பட்ட வரியை முஸ்லிம்களுக்காக ஜனாதிபதி குறைத்து விட்டார் என்ற பிரலாபம் தான் அடுத்த வருட நோன்புக்கான தலைப்பாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பார்வை

## எப்.பி.ஐ. தலைவர் பணி நீக்கம்



அமெரிக்க உள்துறை உளவு நிறுவனமான எப்.பி.ஐ. இன் பணிப்பாளர் ஜேம்ஸ் கோமேயை பதவி நீக்கம் செய்தமை மேற்குலக வட்டாரங்களில் அதிர்ச்சியலைகளைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்க உள்துறை உளவு அமைப்பான எப்.பி.ஐ. கடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது ட்ரம்ப் மற்றும் ரஷ்யாவுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள் இருப்பதாகக் குற்றஞ் சாட்டியிருந்ததோடு, ரஷ்யா அமெரிக்க அதிபர் தேர்வில் தலையிடுவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தது.

ஜேம்ஸ் கோமேயால் திறம்பட எப்.பி.ஐ. நிர்வாகத்தை கையாள முடியவில்லை, எனவே நீதித் துறைப் பணிப்புரைக்கமைய அவர் பதவி நீக்கப்படுவதாக ட்ரம்ப் தரப்பு அறிவித்துள்ளது.

அதே வேளை ட்ரம்பினது தேர்தல் பிரசாரக் குழுவின் ரஷ்யாவுடனான தொடர்புகள் குறித்து எப்.பி.ஐ. விசாரணைகள் ஆரம்பித்த பின்பு அதற்கெதிராகவே குறித்தவாறு பதவி நீக்கம் இடம்பெற்றதாக எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துருக்கி - அமெரிக்கா இரு தரப்பு உறவுப் பேச்சுவார்த்தை



கடந்த வாரம் சிரியாவில் நிலைகொண்டுள்ள குர்திஷ் படையினர் தொடர்பில் துருக்கிய அதிபர் தெரிவித்திருந்த கருத்துக்கள் அமெரிக்கா - துருக்கி இராஜதந்திர உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தியிருந்தன. துருக்கியில் இடம்பெறும் வன்முறை நிகழ்வுகளில் தொடர்ந்தேர்ச்சியான பங்கினை குர்திஷ் பிரிவினைத் தரப்புக்கள் வகித்துவரும் நிலையில், அவை கூர்மை பெறுவதைத் தடுக்கும் விதத்தில் சிரியாவில் நிலைகொண்டிருக்கும் குர்திஷ் படைத் தரப்பு தொடர்பான நிலைப்பாடுகளை எடுத்து வருகின்றது.

இந்நிலையில் இரு தரப்பும் உறவுகளை வலுப்படுத்தும் விதத்தில் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதோடு டொனால்ட் ட்ரம்ப்பும் வெகு காலமாக இறுக்கமான பிணைப்புக் கொண்ட அமெரிக்க-துருக்கி உறவுகள் மேலும் இறுக்கமாக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## வங்காள மொழியைக் கட்டாயமாக்கியது மேற்கு வங்க அரசு



இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் இனிமேல் வங்காள மொழி கற்பது கட்டாயமானது என அம்மாநில கல்வியமைச்சு அறிவித்துள்ளது. மேலும் இது அங்குள்ள அனைத்துத் தர பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி வெளியிட்டுள்ள அறிக்கையில் இனிமேல் கல்வி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் வங்காள மொழி கட்டாயமான பாடமாக அமைவதுடன், மாணவர்கள் தமது சுய தேர்வின் அடிப்படையில் மேலும் இரு மொழிகளைக் கற்க முடியும் எனவும் அறிவித்துள்ளார்.

ஏனைய இரு மொழிகளாக ஆங்கிலம்; இந்தி, உருது, பஞ்சாபி, நேபாளி, சந்தோலி உட்பட எந்த மொழியையும் மாணவர்கள் தேர்வு செய்ய முடியுமென்பதை அவர் விளக்கியுள்ளார்.

இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் இந்துத்துவக் கடும்போக்குக் கட்சியான பி.ஜே.பி. இந்தியா முழுதும் அறிமுகப்படுத்த முயற்சிக்கும் ஹிந்தி மொழியை முதன்மைப்படுத்தி ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளை மட்டும் கட்டாயப் பாடமாக்கும் செயற்திட்டத்துக்கு விழுந்த பாரிய அடியொன்றாகக் இது கருதப்படுகிறது.

இந்த அறிவிப்பின் மூலம் ஹிந்தித் திணிப்புக்கு எதிராக மம்தா அம்மையார் மிகப் பெரும் செய்தியொன்றை விடுத்திருப்பதோடு, இந்துத்துவவாதிகள் விரும்புவதற்கு மாற்றமாக ஹிந்திக்கு முதன்மை இடம் கொடுக்கப்படாது. ஹிந்தியோடு இணைத்து ஏனைய இந்திய மொழிகள் மற்றும் சிறுபான்மை மொழிகளான நேபாளி, சந்தோலி மொழிக்கும் முதன்மை அந்தஸ்தை வழங்கியுமுள்ளார். அண்மையில் கேரள மாநில அரசாங்கமும் மலையாள மொழிக்கு முதன்மை இடம் வழங்கும் அவசர சட்டமூலமொன்றை நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

## உலகளாவிய ரீதியில் இணையத் தளங்களுக்கு சைபர் தாக்குதல்



அமெரிக்கா உள்ளிட்ட நூற்றுக்கு அண்மித்த நாடுகளை உள்ளடக்கிய சைபர் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இணையத்தள வரலாற்றில் இடம் பெற்ற மிகப் பாரிய சைபர் தாக்குதலாக இந்தத் தாக்குதல் கணிக்கப்படுகின்றது.

"ransomeware" என்ற பெயரால் அழைக்கப்படும் இந்த வைரஸ் மூலம் ஆயிரக்கணக்கான இணையத்தளங்கள் முடங்கியுள்ளதோடு மில்லியன் கணக்கிலான ஈ-மெயில் கணக்குகளும் முடங்கிப் போயுள்ளன. அத்தோடு சுமார் 300,000 அளவிலான கணனிகளும் இவர்களால் முடக்கப்பட்டுள்ளது. உலகளவில் பரவலாக பாவிக்கப்படும் ப்ராண்ட்களையுடைய கணனிகள் மற்றும் மென்பொருள்களே குறிவைக்கப்பட்டு வருவதாக வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

Shadow Breakers என தம்மை அடையாளப்படுத்தியுள்ள குறித்த அநாமதேயக் குழுவினர், குறித்த எந்த அடையாளத்தையும் கண்டறிவதற்கு சர்வதேச புலனாய்வுக் குழுக்களும் தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுனர்களும் திண்டாடி வருகின்றனர். மேலும் இணையத்தள முடக்கங்களோடு சேர்த்து பெருந்தொகையான பணமும் ஹேக்கர்ஸின் கணக்குகளுக்குள் சென்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



## ஈரானில் ஜனாதிபதித் தேர்தல்

மே மாதம் 19 ஆம் வெள்ளியன்று ஈரானியர்கள் தமது அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதற்கட்ட வாக்களிப்பில் ஈடுபடவுள்ளனர். இந்த முதற்கட்ட வாக்கெடுப்பில் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளை எவரும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லையென அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இது 79 ஆம் ஆண்டு ஈரானிய புரட்சிக்குப் பின்னரான பன்னிரண்டாவது ஜனாதிபதித் தேர்தலாகும். கடந்த ஹஸன் ரூஹானியின் ஆட்சிக் காலத்தில் மத்திய கிழக்கின் அதிகார மையத்துக்கு வர முயற்சித்த ஈரானின் இராணுவ, அரசியல் நகர்வுகளுக்குப் பின்னரான தேர்தல் என்ற வகையில் அரசியல் நிபுணர்களும் மத்திய கிழக்கு அவதானிகளும் இத்தேர்தலைக் கூர்ந்து அவதானித்து வருகின்றனர்.

சிரியா விவகாரம், ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் எதிர்காலம், மற்றும் ஈராக், யெமன் உள்நாட்டு விவகாரங்களிலும் ஈரானின் தேர்தல் முடிவுகள் தாக்கம் செலுத்தக் கூடியது. பிராந்தியத்தில் ஈரானின் இருப்பு, ஈரானின் அணு செயற்திட்டங்கள் போன்ற விவகாரங்களும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த ஜனாதிபதித் தேர்தலின் இரு பிரதான வேட்பாளர்களாகவும் நிகழ்கால ஜனாதிபதி ஹஸன் ரூஹானி மற்றும் அவரது பிரதான போட்டி வேட்பாளராக இப்ராஹீம் ரைஸியும் காணப்படுகின்றார். இருவரும் ஷீஆ பிரிவினரின் முக்கிய அறிஞர்களாகக் கருதப்படுவதோடு ரூஹானி சீர்திருத்தவாதியாக அடையாளப்படுத்தப்படுகிறார். ரூஹானியே அஹ்மதி நஜாத் காலத்தில் மேற்குலகோடு நிலவிய முறுகல்களை சுமுக நிலைக்குக் கொண்டு வந்தவருமாவார். பழைமைவாதியாக அடையாளப்படுத்தப்படும் இப்ராஹீம் ரைஸி ஈரானின் ஆன்மீகத் தலைமையான ஆயத்துல்லா காமெனெயிக்கு நெருக்கமானவராவார்.

எவ்வாறிருப்பினும் 79 இன் ஈரானியப் புரட்சிக்குப் பின்னரான ஈரானியர்களின் உளவியல் கட்டமைப்பில் பெரிது மாற்றம் நிகழமாட்டாது என்பதே அவதானிகளது கணிப்பாகும். முஸ்லிம் உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்த ஈரானியப் புரட்சி பின்னர் ஷீஆப் புரட்சியாக ஆக்கப்பட்டு சுன்னி முஸ்லிம் உலகிலே [illegible] பயன்படுத்தப்பட்டது.

## மாலி தொடர்ந்தும் தீவிரவாதத்துக்கெதிராகப் போராடும் என்கிறார் கெய்ட்டா



தீவிரவாதக் குழுக்கள் உண்மையாகவே சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பக்கம் திரும்பி வரும் வரைக்கும் தீவிரவாதத்துக்கெதிரான மாலியின் போராட்டம் தொடருமென அந்நாட்டு அதிபர் இப்ராஹீம் பூபாக்கர் கெய்ட்டா தெரிவித்துள்ளார். இனக்குழுக்கள் மற்றும் அடிப்படைவாதக் குழுக்களினால் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வரும் மாலியிலே பல ஆண்டுகளாக அதன் முன்னை நாள் காலனியாதிக்க நாடான பிரான்ஸ் நாட்டின் துருப்புக்களும் ஐ.நா. அமைதிப் படையினரும் நிலைகொண்டுள்ளனர்.

மத்திய கிழக்கின் பிரபல அல்ஜஸீரா ஊடகத்தின் 'எல்லைகளைத் தாண்டி...' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இக்கருத்துக்களைத் தெரிவித்தார். தீவிரவாதக் குழுக்கள் சமாதானப் பேச்சுக்கள் குறித்து தொடர்ந்தும் அலட்சியப் போக்குடன் இருப்பதாகவும், எனவே அவர்கள் சீரியஸாக சமாதானப் போக்கிற்குள் நுழையும் வரைக்கும் தமது தாக்குதல்கள் தொடருமென்றும் கருத்துரைத்தார்.

தமது தேச மக்களின் சுபீட்சமும் சமாதானபூர்வமான வாழ்வுமே தமது இலக்கெனவும் அவர் கூறினார். தாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நாட்டம் காட்டும் போது அக்குழுக்கள் தாக்குதல்களில் இறங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாலியின் ஜனாதிபதியாக 2013 இலிருந்து பதவி வகித்து வரும் கெய்ட்டா 2018 இல் இரண்டாவது சுற்றுக்கும் களமிறங்கத் தீர்மானித்துள்ளார். ஆபிரிக்காவின் பாரிய பரப்பளவு கொண்ட நாடுகளுள் ஒன்றான மாலியில் பிரான்சை விடப் பாரிய பரப்புள்ள நிலப்பகுதிகள் தீவிரவாதக் குழுக்களது கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்பிராந்தியங்களில் உள்ள மக்கள் மீது இஸ்லாமிய குற்றவியல் தண்டனைச் சட்டங்கள் கடுமையாக நடைமுறைப் படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது.

## ஐ.நா. விசாரணைகளை மறுக்கும் அஸாத் அரசாங்கம்



சிரியாவின் அஸாத் தலைமையிலான அரசாங் கத்தினால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் இரசாயன ஆயுதத் தாக்குதல்கள் மற்றும் பாரியளவிலான படுகொலைகள் குறித்த ஐ.நா. விசாரணைக்கான அழைப்புக்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

குறிப்பாக பரவலான ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்ட ஸைதான்யா சிறைச்சாலைப் படுகொலைகள் குறித்த விசாரணைகளை தாம் முற்றிலும் மறுதலிப்பதாக டமஸ்கஸ் அறிவித்துள்ளது. குறித்த படுகொலைகளில் அஸாதின் அரசியல் எதிரிகள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் தூக்கிலிடப்பட்டும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டிருந்தனர். இது குறித்து செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் ஹொலிவூட் திரைப்படங்களை மிஞ்சி [illegible] சித்திரவதைகள் என வர்ணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



சிரிய அரசாங்கம் சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளாக அஸதின் அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சி இடம்பெற்று வருகின்றது. அதில் சுமார் 4½ இலட்சம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இரசாயன, உயிரியல் மற்றும் போழிவு தரும் ஆயுதங்ளை அஸதின் அரசாங்கப் படை பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளதாக ஐ.நா. குற்றம் சாட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 69 ஆவது நக்பாவை நினைவுகூறும் பலஸ்தீனர்கள்

• றவூப் ஸெய்ன்

பலஸ்தீன அறபுகளின் நிலங்கள் மீது இஸ்ரேல் சட்டவிரோதமாக உருவாக்கப் பட்டு 69 ஆண்டுகள் நிறைவடைகின் றன. இஸ்ரேல் வன்முறையாகப் பிறந்த அதே ஆண்டிலேயே பலஸ்தீனர்கள் தமது பூர்வீகத் தாயகத்திலிருந்து விரட்டி யடிக்கப்பட்டனர். இலட்சக்கணக்கான பலஸ்தீனர்கள் தமது பிறந்தகத்திலிருந்து வேரோடு பிடுங்கி வீசப்பட்டனர். அவ் வாறு வரலாறு மறுக்கப்பட்ட பலஸ் தீனர்கள் 69 ஆவது துயர ஆண்டை கண் ணீருடனும் கவலைகளோடும் நினைவு கூர்கின்றனர்.

தற்போது காஸா, மேற்குக்கரை, கிழக்கு ஜெரூசலம் மற்றும் ஆக்கிர மிக்கப்பட்ட பலஸ்தீனில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நக்பா எனும் அந்தத் துயர நிகழ்வை பலஸ்தீனர்கள் நினைவுகூர்கின்றனர். இது தொடர்பி லான ஊர்வலங்கள் மேற்குறித்த பிரதேச ங்களில் நடைபெற்று வருகின்றன.

வீதி ஊர்வலங்களில் ஈடுபடும் பலரது உறவினர்கள் ஒரு மாதத்திற்கு மேலாக இஸ்ரேலிய சிறைச்சாலைகளில் உண்ணா விரதக் கைதிகளாக இருந்து வருகின்ற னர். அவர்களது கோரிக்கைகளும் இந்த ஊர்வலங்களில் முழங்கப்படுகின்றன.

1948 இல் இஸ்ரேல் சட்டவிரோத மாகப் பிரகடனம் செய்யப்பட்டபோது 8 இலட்சம் பலஸ்தீனர்கள் அவர்களது பூர்வீக நிலங்களிலிருந்து விரட்டியடிக் கப்பட்டனர். அவர்களின் இடங்களில் ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் யூதர்கள் இறக்குமதி செய்யப்பட்டு குடி யமர்த்தப்பட்டனர். 500 பலஸ்தீனக் கிரா மங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. பலஸ்தீன நகரங்கள் மனித சஞ்சார மற்றவையாக மாற்றப்பட்டன.

நக்பா நினைவுகூறலைத் தடுப்பதற்கு இஸ்ரேல் அரசாங்கம் பல்வேறு தகிடு தத்தங்களை மேற்கொண்டது. இஸ்ரேல் ஒரு யூத அரசு என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் எந்த ஆர்ப்பாட்டத்திற்கும் அனுமதியளிப்பதில்லை எனவும் அவற் றுக்கான நிதி ஆதரவுகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

இஸ்ரேலின் நிதியமைச்சருக்கு ஊர் வலங்களைத் தடுக்கும் அதிகாரம் வழங் கப்பட்டது. ஆயினும், இந்தத் தடை களைத் தாண்டி பலஸ்தீனர்கள் தமது துயரங்கள் நினைவுகூர்கின்றனர். இஸ் ரேல் வன்முறையாகப் பிறந்த அதே வரு டம் பலஸ்தீன சமூகம் வேருடன் பிடுங்கி வீசப்பட்டது. இஸ்ரேல் 69 ஆவது பிறந்த நாளை குதூகலமாகக் கொண்டாடுவதற்கு எல்லா வித முயற்சிகளையும் மேற் கொண்டு வரும் ஒரு தருணத்திலேயே பலஸ்தீனர்கள் தமது சோக வரலாற்றை நினைவுபடுத்துகின்றனர். எனினும் இஸ் ரேலின் பலஸ்தீனர்கள் மீதான போர்க் குற்றங்களும் கொலை வெறி நடவடிக் கைகளும் நில ஆக்கிரமிப்பும் இன்னும் முடிவடையவில்லை.



இஸ்ரேலின் பிரமாண்டமான கொண் டாட்டங்களுக்கு மத்தியில் மே 15 மற் றும் ஜூன் 5 ஆகிய தினங்கள் பலஸ் தீனர்களின் வரலாற்றில் மறக்க முடியாத இரு நாட்களாகக் கருதப்படுகின்றன. இஸ்ரேல்-பலஸ்தீன் முரண்பாட்டு வர லாற்றில் மே 15 நக்பா எனப்படுகின்றது. அதேபோன்று ஜூன் 05 நக்ஸா தினமாகக் கருதப்படுகின்றது.

நக்பா என்பது பெரும் துயரம். பலஸ் தீன மக்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மற்றும் சியோனிஸம் என்பவற்றால் வேரறுக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்ட தினம். 1917 இல் தொடங்கிய நக்பா 1948 இல் உச்சத்திற்கு வந்தது. சியோனிஸத் திற்கு ஆதரவளித்த பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் சியோனிஸத்தின் இனச் சுத்தி கரிப்புக்கும் நில ஆக்கிரமிப்புக்கும் துணை நின்றது.

நக்ஸா என்பது அறபுகளது போராட் டத்தின் தோல்வியைக் குறிக்கின்றது. பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பு நிறை வேறாத நாளையே ஜூன் 05 குறிக்கின் றது. 1948 இல் இஸ்ரேல் சட்டவிரோத மாக யூதர்களால் பிரகடனம் செய்யப் பட்டபோது அறபு நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராக போரைத் தொடங்கினர். அப் போது இஸ்ரேல் தோற்கடிக்கப்பட்டு விடும் என்றே அறபுகள் நம்பினர். வெளி யேற்றப்பட்ட பலஸ்தீனர்கள் தமது தாயகத்திற்குத் திரும்ப முடியும் என்று எண்ணினர்.

எனினும், தொடர்ந்த ஆண்டுகளில் பலஸ்தீன் அகதிகளின் எண்ணிக்கை பெருகிச் சென்றது. வெளியெற்றப்பட்ட 8 இலட்சம் பலஸ்தீனர்கள் அகதி முகாம் களில் அபலைகளாய் அலைக்கழிந்த னர். 1967 ஜூன் யுத்தம் இஸ்ரேலைத் தோற்கடிக்கும் என்று பலஸ்தீனர்கள் நம்பினர். மறுதலையாக அறபுகள்தான் அதில் தோற்கடிக்கப்பட்டனர்.

20 ஆண்டுகால இடைவெளியில் அமெரிக்க ஆயுதம், இராணுவ உதவி, நிதி ஆதரவு, ஏனைய மேற்கு நாடுகளின் ஆதரவு அனைத்தையும் பெற்ற இஸ்ரேல் 6 நாட்களில் அறபு நாடுகளைத் தோற் கடித்தது. மேற்குக்கரை முழுவதும் காஸா, கிழக்கு ஜெரூசலம் என்பனவும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. ஜோர்தானிடமிருந்த மேற்குக்கரையை இஸ்ரேல் கைப்பற்றியது. எகிப்தின் சினாய் பாலைவனம், சிரியாவின் கோலான் குன்றுகள் லெபனானின் ஷிபா பண்ணை என இஸ்ரேலினால் மூர்க்கத் தனமாக ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த ஆக்கிரமிப்புப் போர் ஆரம்பித்த தினம் ஜூன்05ஆகும். இதுவே பலஸ்தீனர்களின் வரலாற்றில் நக்ஸா தினம் எனப்படு கின்றது.

பலஸ்தீன அறபுகளின் வரலாற்றில் நிகழ்ந்த நக்பா மற்றும் நக்ஸா நிகழ் வுகளுக்குப் பின்னர் அறபுகளின் அரசியல் மனோநிலையிலும் மேற்கு நாடுகளின் அணுகுமுறையிலும் பாரிய திருப்பங்கள் ஏற்பட்டன. அமெரிக்க-இஸ்ரேல் உறவு வலுவடைந்தது. நக்பா, நக்ஸா என்பன வரலாற்றுப் பக்கங்களுக்குச் சென்றது. அறபு நாடுகளோ இஸ்ரேலை அங்கீ கரித்து ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந் தன. பலஸ்தீன் விடுதலைப் போராட் டத்திற்கான ஆதரவையும் சிறிது சிறிதாக விலக்கிக் கொண்டன.

பத்தாஹ்வின் இராணுவ நடவடிக்கை படிப்படியாகச் சுருங்கியது. மேற்குக் கரை, காஸா, கிழக்கு ஜெரூசலம் என்ப வற்றில் யூதர்களின் புதிய குடியேற்றத் திட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டன. ஐ.நா. சபை தொடக்கத்திலிருந்தே இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை மறைமுகமாக ஆதரித்து வந்தது. இஸ்ரேல் பிராந்தியத்தில் தவி ர்க்க முடியாத ஒரு நாடாகவும் ஒரே ஜனநாயக நாடாகவும் பிரச்சாரம் செய் யப்பட்டது.

மேற்கு நாடுகளின் பல்கலைக்கழகங் கள், புத்திஜீவிகள் பலஸ்தீனர்களின் வரலாற்றைப் புரட்டும் கைங்கரியங் களில் ஈடுபட்டனர். இஸ்ரேலியப் பெண் பிரதமர் கோல்டா மேயர் என்பவர் அமெரிக்காவின் நிவ்யோர் டைம்ஸ் பத்திரிகையில் யூதர்களின் வரலாற்றை எழுதும்போது Palataine did not exsist and that there is no such thing as a palastinian people. பலஸ்தீனம் இருக்கவில்லை. பலஸ்தீன மக்கள் என்று சொல்லப்படும் எதுவும் இருக்கவில்லை எனத் தெரி வித்திருந்தார். இதுதான் பலஸ்தீனர்கள் பற்றிய வரலாற்று விம்பமாக மாற்றப் பட்டது.


மறுபுறம் மனித சஞ்சாரமற்றுக் கிடந்த ஒரு பாலைவனத்தை யூதர்கள் கண்டுபிடித்து வளமான தேசமாக மாற்றி யமைத்தார்கள் என்பதுபோல ஒரு வர லாற்றுப் புராணம் கட்டமைக்கப்பட் டது. இது செமித்திய இனவாதத்தின் உச்சகட்ட வரலாற்றுப் புரட்டலாகும். 1991 ஆம் ஆண்டில் ஐ.நா.வில் உரை யாற்றிய நியூட் கிங்ரிச் எனும் அமெரிக் கர் இதே கருத்தியலை கோல்டா மேய ரின் அதே வார்த்தையில் மீள் உயிர்ப் பித்தார். Palastinians are an invented people. பலஸ்தீனர்கள் கண்டுபிடிக்கப் பட்ட மக்கள் என்றார் அவர்.

ஒரு பிரச்சினை அடிப்படையில் இல் லையென்றால் அதற்கு தீர்வு தேடும் கடமைப்பாடு யாருக்கும் இருப்ப தில்லை. பலஸ்தீனர்களின் பூர்வீக இரு ப்பை மறுப்பதிலிருந்தே இஸ்ரேலின் தேசியபொய்களையும்புராணங்களையும் நீடிக்கச் செய்வதற்கான அனுமதி பிறக் கின்றது. இதுவே சியோனிஸ ஆதரவுப் புலமையாளர்களின் அரசியல் தர்க்க மாகும்.

எவ்வாறாயினும், 1917 முதல் 1948 வரை பலஸ்தீனர்கள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்டார்கள் என்பதை யும் மில்லியன் கணக்கானோர் விரட்டி யடிக்கப்பட்டனர் என்பதையும் வரலாறு நேர்மையாகப் பதிவுசெய்துள்ளது. துர திஷ்டவசமாக அறபுத் தலைவர்கள் பலஸ்தீனர்களின் துயரத்தை 1967 யுத்தத் தைத் தொடர்ந்து சிறிது சிறிதாக மறக்கத் தொடங்கினர். 1967 இல் சூடானின் தலைநகர் கார்டூமில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட அறபுத் தலைவர்களுக்கு இடையில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகள் அதனை நன்கு பிரதிபலித்தன. பலஸ்தீன பிரச்சினையில் முன்னுரிமைகளையும் மூலோபாயங் களையும் அவர்கள் குழப்பிக் கொண்ட னர். அப்துன் நாஸர், ஹுஸைன், ஹாபிஸ் அல் அஸத் போன்றோர் போரு க்கு முந்திய ஒருமித்த கருத்திலிருந்து படிப்படியாக விடுபட்டனர். இதுதான் இஸ்ரேலின் மூர்க்கத்தனமான முன்னேற் றத்திற்கு உந்துகோலாக இருந்தது.

(பக்.14)

# பிரான்ஸ் ஜனாதிபதியாக மெக்ரோன்



இறுதிச் சுற்றில் லீ பென் என்பவரை தோல் வியடையச் சென்று இமானுவல் மெக்ரோன் பிரான்ஸ் ஜனாதிபதியாக வெற்றிவாகை சூடி யுள்ளார். மக்கள் மெக்ரோனின் வெற்றியைக் கொண்டாடுகின்றனர். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட லீ பென் வலதுசாரி தேசிய முன்னணிக் கட்சியின் தலைவர் ஆவார்.

லீ பென் ஓர் வெள்ளை இனவாதி என அறியப்பட்டவர். ஆனால், அவர் தோற்றுவிட்டார் என்பது அங்கு இனவாதம் தோற்றுவிட்டது என்பதன் அர்த்தமல்ல. பிரான்ஸில் கொதித் தெழும் இஸ்லாமியப் பீதிக்கு லீ பென் தெரி வாகியிருந்தால் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்திருப்பார் என்ற அச்சம் இருந்தது. ஆனால், மெக்ரோன் இனவாதத்தை வெல்வார் என்றோ இனவாதம் வளராமல் தடுப்பார் என்றொ சொல் வதற்கில்லை.

லீ பென்னுக்கு எதிராக வாக்களித்தவர்கள் இனவாதத்தை தோற்கடிப்பதற்கே முயன்றனர். ஆனால், சமீபகாலமாக பிரான்ஸில் வளர்ந்து வரும் சகிப்பின்மை, இனக்குரோதம், முஸ்லிம் கள் மற்றும் கறுப்பின மக்கள் தொடர்பிலான பாகுபாடுகள் என்பவற்றை மெக்ரோன் வெல் வாரா அல்லது அவற்றைத் தூண்டி வளர்ப்பாரா என்ற சந்தேகம் அங்கு நீடிக்கவே செய்கின்றது.

இன வெறுப்பை வெற்றி கொள்வதற்கு மெக் ரோனுக்கு ஆதரவளியுங்கள் என்றே அந்நாட்டில் மிதவாதிகள் பிரச்சாரம் செய்தனர். முன்னாள் நீதி யமைச்சரும் பிரபல அரசியல்வாதியுமான கிறிஸ் டியன்டோபிரா, மெக்ரோனுக்கு வாக்களித்தமைக் கான காரணத்தைக் கூறும்போது, பிரான்ஸில் மக் கள் இன-மத அடிப்படையில் பிளவுபட்டுள்ளனர். அவர்கள் ஒன்றுபட வேண்டும். செனகல் நாட்டு குடியேற்றவாசிகள், பிற ஆபிரிக்க கறுப்பின மக்களை பிரான்ஸின் மேட்டுக்குடி சமூகம் ஒதுக்கி வருவதும் வெறுப்பதும் பாரதூரமான சமூக அமைதியின்மையையே உருவாக்கும்.

குடிபெயர்ந்தோர்களிடையே பாரிய வறுமை நிலவுகின்றது. அவர்களின் குடும்ப வருமானம் ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாகும். இந்நிலையில் எதிர்கால ஜனாதிபதி சமூக நீதியை நிலைநாட்டு வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று முன்னாள் நீதி யமைச்சர் கூறுகிறார்.

அனால் இமானுவல் மெக்ரோன் இந்த இலக்கை அடையும் நிலையில் உள்ளாரா? இது பலரும் எழுப்பும் கேள்வி. நவீன பிரான்ஸின் வரலாற்றில் மிகக் குறைந்த வயதில் ஜனாதிபதியானவர் மெக் ரோன். 39 வயதான் இவர் ஒரு முதலீட்டு வங்கி யாளர் ஆவார். புதிய தாராண்மைவாதக் கொள்கை களுக்கு ஆதரவான மெக்ரோன், சமூக விவகாரங் களிலும் ஓரளவு மிதவாதி எனக் கருதப்படுபவர். ஆனால், தற்போதைய பிரான்ஸ் சமூகம் எதிர் கொண்டுள்ள இன வெறுப்பு விவகாரங்கள் குறித்த அவரது நிலைப்பாடு தெளிவற்றதாகவே உள்ளது.

கடந்த ஆண்டில் பிரான்ஸ் பொலிஸ் ஒருவர் ஒரு கறுப்பினப் பெண்ணை கற்பழித்து, அடித்துத் துன் புறுத்தியபோது மென்ரோன் எவ்விதக் கருத்தையும் வெளியிடவில்லை. மற்றொரு கறுப்பர் பொலிஸா ரால் கொல்லப்பட்டார். பிரான்ஸில் பொலிஸார் கறுப்பின மக்களை பாகுபாடாக நடத்துகின்றனர்.

132 ஆண்டுகள் பிரான்ஸ் அல்ஜீரியாவை கால னித்துவப்படுத்தியிருந்தது. அந்தக் காலனித்துவ த்தை மனித குலத்திற்கு எதிரான குற்றமென்று மெக்ரோன் குறிப்பிட்டிருந்தாலும் இதே வகையான காலனித்துவத்திற்கு நல்ல விளைவுகளும் உண்டு என்று அவர் வாதாடுகின்றார். எவ்வாறாயினும், பிரான்ஸின் புதிய ஜனாதிபதி நாட்டில் வளர்ந்து வரும் இனவாதத்தைக் கட்டுப்படுத்து வதற்கு எந்தளவு மிதவாதத்துடன் செயற்படுவார் என்பது சி க்கலான கேள்வியே. ஆபிரிக்கக் கறுப் பின மக்களும் பிரான்ஸில் குடியேறி வாழும் வட ஆபிரிக்க முஸ்லிம் நாட்டவர்களும் இந்த சந்தேகத்துடன் தான் வாழ்கின்றனர்.

அமெரிக்காவில் வளர்ந்து வரும் சமீபத்திய இனவாதத்தை பிரான்ஸின் இனவாதம் மிகைத்து விடுமோ என்ற அளவுக்கு விளிம்பு நிலைப்பட்ட மக்கள் மிகுந்த அச்சத்தோடும் ஐயத்தோடும் வாழும் நிலை உருவாகியுள்ளது. இத்தகைய சூழ்நிலை யில், மெக்ரோனின் வெற்றி இன ஒருமைப்பாட் டிற்கும் சமூக நீதிக்குமான வெற்றியாக இருக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• மிப்றாஹ் முஸ்தபா

# மக்தபும் மற்றதும் ஒன்றாக முடியுமா?

தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டுள்ள இலங்கை முஸ்லிம்களுக்கு அல்குர்ஆனை சரியான முறையில் ஓதக்கற்றுக் கொடுப்பதற்காக காலாகாலம் பல்வேறு வகைகளில் முயற்சிகள் இடம்பெற்று வந்திருக்கின்றன. அவற்றுள் ஒருமித்த பாடத்திட்டத்தின் கீழ் முறையான திட்டமிடலோடு இடம்பெற்று வருகின்ற மூன்று நிறுவனங்களை நாம் இங்கு அறிமுகப்படுத்துகின்றோம். இம்மூன்று நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய மத்ரஸாக்கள் கிராம மட்டங்களில் அல்குர்ஆனைக் கற்றுக் கொடுக்கும் பணியை சிறிய அளவில் செய்து வந்தாலும், அவை ஒழுங்குபடுத்தப்பட்ட பாடத்திட்டத்தின் கீழ் இடம்பெறுவதில்லை.

எனவே அல்குர்ஆனை சிறு பிள்ளைகளுக்கு பிழையில்லாமலும் தஜ்வீத் முறைப்படியும் ஓதக் கற்றுக் கொடுப்பதென்பது மிகப் பெறுமதியான பொறுப்பாகும். அதனை நாடு முழுவதிலுமுள்ள மத்ரஸாக்கள் ஒரே பாடத்திட்டத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் முன்னெடுப்பது பற்றி உலமாக்களும் முஸ்லிம் சமூகமும் தீவிரமாகக் கவனம் செலுத்துவது முதன்மையான ஒரு விடயமாகும்.

## மஊனதுர் ரஹ்மான்

இறைவேதமான அல்குர்ஆனை இந்த நாட்டிலே திருத்தமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே கடந்த 60 வருடங்களாக செயற்பட்டு வருகின்ற ஒரு நிறுவனமாக மஊனதுர் ரஹ்மான் திகழ்கிறது.

இறப்பர் ஏற்றுமதித் துறையில் முன்னணி வர்த்தகரான வியங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இப்றாஹிம் என்பவர் அதில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு குர்ஆன் மத்ரஸாக்களை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையின் விளைவால்தான் இது தோற்றம் பெற்றது. இதற்கான பாடத்திட்டம் உஸ்தாத் அப்துஸ் ஸமத் அவர்களால் தயாரிக்கப்பட்டது. 5 வயதிலே குர்ஆனை ஓதுவதற்காக சேர்க்கப்படும் ஒரு பிள்ளை முழுக் குர்ஆனையும் 9 அல்லது 10 வயதில் பிழையில்லாமல் ஓதுவதற்கு பயிற்றுவிக்கப்படுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கிட்டத்தட்ட 300 மத்ரஸாக்கள் இயங்கி வந்தாலும் யுத்த நிலைமை காரணமாக அவை அனைத்தும் கைவிடப்பட்டமை துரதிஷ்டவசமானது. தற்போது இந்த நாட்டில் 100 மத்ரஸாக்கள் மஊனதுர் ரஹ்மானின் கீழ் இயங்கி வருகின்றன. அவற்றில் குருணாகல் மாவட்டத்தில் 40 மத்ரஸாக்களும், ஏனையவை கண்டி, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா, கேகாலை, புத்தளம் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்த மத்ரஸாக்களில் ஓதுகின்ற மாணவர்கள் பரிசோதகர்களால் பரீட்சிக்கப்படுகிறார்கள். இறுதி வருடத்தில் அல்குர்ஆனை திருத்தமான முறையில் ஓதுவதற்கான பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

## காத்தான்குடி குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்திச் சங்கம்



காத்தான்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் தொன்று தொட்டு குர்ஆன் மத்ரஸாக்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. ஒரே பாடத்திட்டத்தின் கீழ் எல்லா மத்ரஸாக்களையும் ஒன்றிணைத்து அவர்களுக்குத் தேவையான கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்களை நடாத்தி பரீட்சைகள் வைத்து ஒரு நெறிப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் செயற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு 01.09.1986 தொடக்கம் குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்தி சபை உருவானது. இந்த சபை உருவாகிய போது அதன் தலைவராக காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக் கல்லூரியின் முதல்வர் மர்ஹூம் ஷைகுல் பலாஹ் அப்துல்லாஹ் ஹஸ்ரத் செயற்பட்டார்கள். முதலாவது பரிசோதகராக மௌலவி எம்.ஐ. ஆதம்லெப்பை (பலாஹி) நியமிக்கப்பட்டார்.

மண்முனை தொடக்கம் மட்டக்களப்பு வரையான காத்தான்குடி மற்றும் அதனை அண்டிய 56 மத்ரஸாக்களை உள்ளடக்கியதாக இந்த சபை ஆரம்பிக்கப்பட்டது. முதலில் இந்தப் பகுதியில் காணப்பட்ட குர்ஆன் மத்ரஸாக்களை நடாத்துகின்ற நிர்வாகிகள், பள்ளிவாயல்களின் நிர்வாகிகள் அனைவரையும் ஒன்றுதிரட்டி இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியே இந்த சபை ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது பரீட்சைக்கு 1987 டிசம்பர் மாதத்தில் 87 மாணவர்கள் தோற்றினார்கள். குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்தி சங்கம் உருவாக்கப்பட்டமைக்கான பிரதான நோக்கம் சிறு வயதிலிருந்தே பிள்ளைகள் அல்குர்ஆனை பிழையில்லாமலும் சரளமாகவும் ஓத வேண்டும் என்பதாகும்.

தற்போது சுமார் 60க்கும் மேற்பட்ட மத்ரஸாக்களில் இருந்து 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் வருடாந்தம் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள். இதில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், கூடுதலான புள்ளிகளை எடுக்கின்ற மாணவர்கள் விருதுகளும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள்.

கூடுதலான மாணவர்களுக்கு முஅல்லிம்கள் பயிற்றுவிக்க வேண்டும் என்பதற்காக அதிகமான மாணவர்கள் சித்தியடையும் மத்ரஸாக்களுக்கு பண ரீதியான கௌரவிப்புக்களும் வழங்கி வைக்கப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு சுமார் 900 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தார்கள். சரியான முறையில் திட்டமிட்டு இதனை நடைமுறைப்படுத்துவதுதான் இந்த நிறுவனம் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருப்பதற்கான காரணமாகும்.

இந்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டது முதல் குர்ஆன் மத்ரஸாக்களில் பணியாற்றும் முஅல்லிம்கள் மற்றும் முஅல்லிமாக்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஆலிம்களாக உள்ள ஆண்கள், ஆலிமாக்களாக உள்ள பெண்கள், மௌலவி தராதரம் அற்ற ஆண்கள், மௌலவிய்யா தராதரம் அற்ற பெண்கள் ஆகிய 4 வகையினருக்கு தற்போது பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இந்த சங்கத்தை நடாத்துகின்றபோது நிதி அடிப்படை வேண்டும் என்பதற்காக ஆரம்பத்தில் காத்தான்குடியில் உள்ள ஜும்ஆப் பள்ளிவாயல்கள் மாதாந்தம் பங்களிப்புகளை செய்தன. 2002 ஆம் ஆண்டு பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் குர்ஆன் மத்ரஸாக்களை முன்னேற்றும் நோக்கில் நிதி ரீதியான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஹஜ்ஜுக்கு மக்களை அழைத்துச் செல்லும் பணியை ஆரம்பித்தது.

தஜ்வீத் கலையில் தேர்ச்சி பெற்ற உலமாக்கள் அதிகமாக இல்லாததன் காரணமாக இதனோடு தொடர்புபட்ட ஒரு வெளிவாரி கலாசாலையாக 01.01.1990 ஆம் ஆண்டு இந்த சபையின் அனுசரணையோடு முகைதீன் மெத்தைப் பள்ளிவாயல் நிர்வாகத்தோடு இணைந்து தஜ்வீதுல் குர்ஆன் பயிற்சிக் கலாசாலையை ஆரம்பித்து, மத்ரஸாக்களில் ஓதி முடித்து வெளியாகும் மாணவர்களுக்கு ஒரு வருட கால பயிற்சியளிக்கப்படுகிறது. குர்ஆன் மத்ரஸாக்களில் 2 வகையான பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

1. குர்ஆனைப் பார்த்து பிழையில்லாமலும் சரளமாகவும் ஓத வைத்தல்.

2. சிறிய சூராக்கள், தொழுகையில் ஓத வேண்டிய அவ்ராதுகள் மற்றும் அன்றாட வாழ்வில் ஓத வேண்டிய துஆக்கள் என்பவற்றை மனனம் செய்ய வைத்தல்.

நான்கு வருடங்களைக் கொண்ட பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தரம் ஒன்றில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மிகத் திறமையான மாணவர்கள் மூன்று வருடத்திற்குள் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்தால் பரீட்சைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். நான்கு வருடங்களில் பூர்த்தி செய்யாத மாணவர்கள் ஐந்தாவது வருடத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுகின்றனர்.

இலங்கையை பொறுத்தவரை வெவ்வேறு பிரதேசங்களிலும் இத்தகைய மத்ரஸாக்கள் நடந்தாலும், மத்ரஸாக்கள் அனைத்தையும் ஒருமித்த வகையில் 30 வருடங்களுக்கும் மேலாக காத்தான்குடியில் நடத்தி வருகின்றமையானது பெரியதொரு வெற்றியாகவே நோக்க வேண்டும். தற்போது 5000 - 6000 வரையான மாணவர்கள் மத்ரஸாக்களில் ஓதுவதோடு வருடாந்தம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி வெளியாகின்றனர்.

## மக்தப் மத்ரஸா



ஆங்காங்கே இலங்கையில் பல நூறு வருடங்களாக நடந்து வருகின்ற மத்ரஸாக்களை ஒருமித்த பாடத்திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற முயற்சியின் விளைவுதான் மக்தப் பிரிவாகும். 2005 ஆம் ஆண்டிலிருந்து ஒருமித்த பாடத்திட்டத்திலான குர்ஆன் மத்ரஸாக்களை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் ரிஸ்வி முப்தி அவர்களால் முன்வைக்கப்பட்டு வந்தது. அந்த வகையில், 2008 டிசம்பர் 05 இல் இது சம்மந்தமான கலந்துரையாடல் ஒன்று ஜம்இய்யதுல் உலமா முக்கியஸ்தர்களோடு இடம்பெற்றது.

இதன் பின்னர் மக்தப் அமைப்பு உலகில் தென்னாபிரிக்கா, லண்டன், இந்தியா போன்ற நாடுகளில் காணப்படுவதன் காரணமாக குறித்த நாடுகளுக்கு சென்று அதன் சாதக, பாதகங்களை ஆராய்ந்து இலங்கைக்கு பொருத்தமான வகையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதன் விளைவாக 2011 ஒக்டோபர் 01 ஆம் திகதி மருதானை கலந்தர் ஷா மஸ்ஜிதில் 18 மாணவர்களோடு மக்தப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

மருதானையில் மக்தப் பிரிவை ஆரம்பிக்க முன் கொழும்பிலுள்ள 153 மஸ்ஜிதுகளுடைய நிர்வாகிகளை அழைத்து, இந்தத் திட்டத்தின் நோக்கங்கள் பற்றி அறிவுறுத்தப்பட்டது. அதன் பின்னர் பத்து பத்து மஸ்ஜிதுகளின் நிர்வாகிகளை தனித் தனியாக அழைத்து, அவர்களோடு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கலந்துரையாடியது.

இதன் அடுத்த கட்டமாக முஅல்லிம்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. சுமார் 6 மாதங்கள் கொழும்பை மையப்படுத்தி மக்தப் மத்ரஸாக்கள் செயற்பட்டன. இதிலுள்ள பிரச்சினைகள், சவால்களை இனங்கண்டு, அவற்றை நிவர்த்தி செய்து நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் மக்தப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது சுமார் 1600 மஸ்ஜிதுகளில் மக்தப் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கின்றது. இன்றைய காலம் சிறுவர்கள், இளைஞர்கள் பல வகைகளிலும் ஒழுக்க ரீதியாக சீரழிந்து போகக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்ற காலம். எனவே, அல்லாஹ்வோடு தொடர்பை ஏற்படுத்தி, தர்பிய்யா மூலமாக ஒழுக்கமுள்ள அறிவார்ந்த எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலேயே மக்தப் பிரிவு செயற்பட்டு வருகின்றது.

மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ள மக்தப் பாடத்திட்டமானது மொத்தமாக 15 வருடங்களைக் கொண்டதாகும். ஐந்து வயதில் மக்தபிற்கு சேர்கின்ற ஒரு பிள்ளைக்கு முதல் கட்டமான 5 வருடங்கள் அல்குர்ஆன், [illegible], அல் அகாயித் வல் மஸாயில், [illegible] மொழி ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. குர்ஆனோடு தொடர்புபட்ட பாடத்தில் குர்ஆனை ஓதுவதும் சிறிய சூராக்களை மனனம் செய்வதும் முக்கியமானது.

தர்பிய்யா பாடம் ஊடாக இஸ்லாமிய பொது அறிவு, இஸ்லாமிய வரலாறு, அன்றாட வாழ்வில் இஸ்லாம் ஆகியன கற்பிக்கப்படுகின்றன. முதல் கட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த முதல் தொகுதி மாணவர்களுக்கான இரண்டாம் கட்டத்திற்கான ஐந்து வருடங்களைக் கொண்ட பாடநெறியை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இறுதிக் கட்டமாக ஐந்து வருடங்களைக் கொண்ட பாடநெறி நாளாந்த வகுப்புக்களாக அமையாமல் மாணவர்களின் வசதிக்கேற்ப பொருத்தமான தலைப்புக்களில் நடாத்துவதற்கும் திட்டமிட்டிருக்கின்றோம்.

20 மாணவர்களுக்கு ஒரு முஅல்லிம் என்ற அடிப்படையில் வகுப்புக்கள் இடம்பெறுவதோடு, 6 வகுப்புக்கள் வந்தால் ஒரு முதீர் (அதிபர்) நியமிக்கப்படுவார். மாணவர்களுக்கான கவர்ச்சிகரமான பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவதோடு, ஒவ்வொரு ஆண்டு நிறைவிலும் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன.



அந்த வகையில், 60 வருடங்களாக நடைமுறைப் படுத்தப்படுகின்ற மஊனதுர் ரஹ்மான், 30 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற காத்தான்குடி குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்திச் சங்கத்தின் மத்ரஸா பாடத் திட்டம் என்பன நடைமுறையில் இருக்கையிலேயே ஜம்இய்யதுல் உலமாவின் மக்தப் முறை புதிதாக முளைத்துள்ளது.

இலங்கையில் பல நூறு வருடங்களாக நடந்து வருகின்ற மத்ரஸாக்களை ஒருமித்த பாடத்திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற முயற்சியின் விளைவுதான் மக்தப் பிரிவாகும் என ஜம்இய்யதுல் உலமாவின் மக்தப் பிரிவு கூறிக் கொண்டபோதும் இன்றுவரை இந்த மத்ரஸா முறைமைகளுக்கிடையில் ஒருமித்த பாடத்திட்டம் ஏதும் அமுல்படுத்தப்படவில்லை. இவை அனைத்தும் வெவ்வேறாகவே இயங்குகின்றன.

இவை தவிர ஊர்களிலே இயங்குகின்ற எந்த மத்ரஸாவும் இந்தத் திட்டத்தின் கீழால் இதுவரை ஒருங்கமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தவகையில் ஜம்இய்யதுல் உலமாவின் பெயரில் பள்ளிவாசல்களில் முளைவிடும் மக்தபுகள் ஊர்களிலே இருக்கின்ற பத்து மத்ரஸாக்களில் பதினொன்றாக வந்து சேர்கிறதே தவிர எதையும் ஒருமிக்கச் செய்வதான முயற்சிகளை காண முடியவில்லை.

அரபு மத்ரஸாக்களின் பாடத்திட்டங்களை ஒருங்கமைப்பதற்கு முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம் முயற்சி எடுத்து வருகிறது. இலங்கையின் அனைத்து குர்ஆன் மத்ரஸாக்களும் கூட முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களத்தின் கீழேயே பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, தமக்குக் கீழால் உள்ள குர்ஆன் மத்ரஸாக்களின் பாடத் திட்டத்தையும் ஒருங்கமைப்பது முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம் முன்னெடுக்க வேண்டிய பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழியல் கற்கைக்கு இந்தியாவில் ஒரு களம்:

## காயிதே மில்லத் ஊடகக் கல்விக்கான சர்வதேச அகடமி' (QIAMS)

காயிதே மில்லத் இஸ்மாஈல் சாஹிப் (1896-1972) இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய அகில இந்திய முஸ்லிம் லீக்கின் முன்னாள் தலைவர். இவர், இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கிய சிற்பிகளுள் ஒருவராகத் திகழ்கிறார். பாராளுமன்ற உறுப்பினராகவும் நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். அவரது நினைவாக காயிதே மில்லத் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை நிறுவனம் (Quaide Milleth Educational and Social Trust- QUEST) உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னை மேடவாக்கத்தில் காயிதே மில்லத் கல்லூரி 42 வருடங்களாக இயங்கி வருகின்றது. இக்கல்லூரியில் தமிழ், முஸ்லிம் வேறுபாடுகளில்லாமல் ஆயிரக்கணக்கிலான மாணவர்கள் கற்கிறார்கள். அதன் ஒரு அங்கமாகவே காயிதே மில்லத் ஊடகக் கல்விக்கான சர்வதேச அகடமி (Quaide Milleth International Academy of Media Studies – QIAMS) உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஏப்ரல் 23 ஆம் திகதி இக்கல்லூரியின் அங்குரார்ப்பண நிகழ்வு சென்னை ஹயாட் ரீஜன்சி ஹோட்டலில் நடைபெற்றது. இதில் 400 பேரளவில் கலந்துகொண்டார்கள். இலங்கையிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் கலந்துகொண்டார். இந்தியாவின் முன்னணிப் பத்திரிகையான 'இந்து'வின் உரிமையாளர் என். ராம் இதனை ஆரம்பித்து வைத்தார்.

ஊடகத் துறையில் வேகமாக ஏற்பட்டு வரும் மாற்றங்களை மாணவர்கள் புரிந்துகொண்டு கற்று, வேலைவாய்ப்புக்களை பெறும் வகையில் பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. நடைமுறைப் பயிற்சி சார்ந்த பாடநெறிகளே அதிகளவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பத்திரிகைகள், தொலைக்காட்சி, இணையதளங்கள் போன்ற பல்வேறு மீடியாக்களில் பணியாற்றுவதற்கு தற்போதைய சூழலுக்கேற்ப ஊடகவியலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான சிறப்பு அடிப்படை பயிற்சிகளை இந்த அகடமி வழங்குகின்றது. இந்த அகடமியில் ஒரு வருட கால பட்டப் படிப்பு 2017 ஜூலை 05 இல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் Convergent Journalism, Mass Communication, Visual Communication, Development Communication ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. Non Linear Editing, Tv Reporting and Anchoring, Photography and Videography, Digital Journalism, எழுத்தாற்றல் பயிற்சி மற்றும் மொழியாக்கம் ஆகிய தலையங்கங்களில் 06 மாத கால சான்றிதழ் கற்கை நெறியும் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறிகள் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

காயிதே மில்லத் ஊடகக் கல்விக்கான சர்வதேச அகடமியின் ஆலோசனைக் குழுத் தலைவராக இந்தியாவின் ஓய்வு பெற்ற மூத்த ஐ.எஸ்.எஸ். அதிகாரி மூஸா ராசா சாஹிப் அவர்களும் செயலாளராக தாவூத் மியாகான் அவர்களும் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக மலேசியாவைச் சேர்ந்த டத்தோ ஸ்ரீ முஹம்மத் இக்பால், மனோன்மணியம்




சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி வே. வசந்திதேவி, சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சாதிக், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், ஹைதராபாத்தை சேர்ந்த டாக்டர் பக்ருதீன், மூத்த பத்திரிகையாளர் திரு. ஞானி, சதகதுல்லா அப்பா கல்லூரியின் செயலாளர் பத்ஹுர் ரப்பானி ஆகியோரும் உள்ளார்கள்.

சென்னையில் Asian College of Journalism உள்ளது. அதை எம். ராம் நடாத்துகிறார். அதில் ஆங்கில மொழியில் மாத்திரமே பாட நெறிகள் இடம்பெறுகின்றன. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கல்லூரியில் ஆங்கிலமும் தமிழும் கலந்த பாடநெறிகள் உள்ளன.

தமிழில் இதழியலை கற்பதற்கான வாய்ப்புக்கள் அங்கு மிகவும் குறைவு. அக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இக்கல்லூரி உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் யாராவது இப்பாடநெறியை படிக்க விரும்பினால் அவர்களுக்கான விடுதி வசதிகளை இலவசமாக வழங்க அவர்கள் தயாராக உள்ளனர். ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் நடத்திய எமது விஜயத்தின்போது அவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பலனாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்திற்கு அவர்கள் 4 புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளார்கள்.

விமான டிக்கட் செலவைத் தவிர முழுச் செலவையும் இந்தப் புலமைப் பரிசில் உள்ளடக்கியிருக்கிறது. கிட்டத்தட்ட ஒன்று அல்லது ஒன்றரை இலட்சத்துக்குள் பாடநெறியை தொடரும் வாய்ப்புள்ளது. தற்பொழுது அவர்கள் ஆரம்ப கட்டமாக 06 மாத கால பாடநெறியை ஆரம்பித்துள்ளார்கள்.

தாவூத் மியாகான் அண்மையில் இலங்கை வந்து நடத்திய கலந்துரையாடல்களின் பின்னர் முதன் முறையாக இந்தியாவின் கல்லூரியொன்றில் இலங்கை மாணவர்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பத்திரிகைகளிலும் பணியாற்றுகின்ற 50 ஊடகவியலாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்கள். இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் நீண்ட நேரம் உரையாற்றினார். இலங்கைக்கும் அவர்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந்திய ஊடகவியலாளர்கள் சிதறிய அடிப்படையிலேயே பணியாற்றுகிறார்கள். அங்கு சென்னை முஸ்லிம் லீக்கினால் வெளியிடப்படுகின்ற மணிச்சுடர் என்னும் தினசரிப் பத்திரிகை மாத்திரமே உள்ளது. அது தவிர முஸ்லிம்களுக்கான பத்திரிகைகள் மிகக் குறைவு. சென்னையில் பல்வேறு ஊடகங்களில் முஸ்லிம்கள் பதவிகளை வகித்துள்ளார்கள். இவர்களை ஒன்றுபடுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தையொத்த அமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் யாப்பையும் அவர்கள் எம்மிடமிருந்து எடுத்துள்ளார்கள். முஸ்லிம் என்று அல்லாமல் ஒரு பொதுப் பெயரில் இயங்குவதற்கும் தீர்மானித்துள்ளார்கள். அதற்கென 12 பேர் கொண்ட ஒரு கமிட்டியும் உருவாக் கப்பட்டுள்ளது.

தகவல்: என்.எம். அமீன் -
தலைவர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்

தொகுப்பு: ஹெட்டி ரம்ஸி

---

• அனஸ் அப்பாஸ்

# கட்டிலிலிருந்து பிரசவித்த மூன்று நூல்கள்





1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி தனது உம்மாவின் ஊரான மாத்தறையில் பிறந்தார் இர்பான். பிறப்பு முதல் பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கும் வரைக்கும் மாத்தறையில் வசித்துவிட்டு, பிறகு, தனது வாப்பாவின் பிறந்த ஊரான தர்கா நகருக்கு வந்து குடியேறினர்.

"தர்காநகர் ஸாஹிறா கல்லூரியில்தான் நான் கல்வி கற்றேன். பாடசாலைக்கு நடந்து செல்வதில் சிரமங்கள் இருந்தன. இரண்டாம் வகுப்பு வரை நடந்து சென்றேன். ஆனால் பிறகு எனது நாநாதான் என்னை சைக்கிளில் கூட்டிச் சென்றார். ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய பின்பு ஆகஸ்ட் விடுமுறை முடிந்ததும் பாடசாலை செல்ல முடியவில்லை. அடிக்கடி கீழே விழுவதும் வகுப்பறையை விட்டு வெளியே செல்ல முடியாத பல சிக்கல்கள் இருந்தன.

ஐந்தாம் வகுப்புக் கல்வியுடன் பாடசாலை வாழ்க்கை முற்றுப் பெற்றது. வகுப்பில் பாடங்களில் நான் எனது ஏனைய சகோதரர்களைப் போன்று திறமை காட்டவில்லை. பாடசாலைக் கல்வி ஐந்தாம் வகுப்புடன் முடிந்ததும் எனக்கு வீட்டிலே இருப்பது பெரிய சந்தோசத்தைத் தந்தது. பாடசாலை செல்வதிலும், வகுப்பறையில் கூட நடமாட முடியாத நிலை காரணமாக வீட்டில் இருக்கக் கிடைத்தது மனதிற்கு பெரிய ஆறுதலாய் இருந்தது" என்கின்றார் எழுத்தாளர் இர்பான்.

**இர்பானுக்கு நேர்ந்தது என்ன? என்ன நோய் அவரை பாதித்தது? ஐந்தாம் வகுப்பு மட்டுமே படித்த ஒருவரால் எப்படி மூன்று வெளியீடுகளுக்கு உயிர் கொடுக்க முடிந்தது?**

Parent Project Muscular Dystrophy டுஷேன் மஸ்கியுலர் டிஸ்ட்ரோபி என்பது ஆண் பிள்ளைகளில் ஏற்படக்கூடிய உயிராபத்தை ஏற்படுத்தும் ஓர் தசைச் சிதைவு நோயாகும். இந்நோய் பிறக்கும் ஆண் குழந்தைகளில் சராசரியாக 3500 பேரில் ஒருவருக்கு ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. (இது பற்றி முதன் முதலில் விவரித்த பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கிளோம் டுஷேன் என்ற நரம்பு நோய் நிபுணரின் பெயரிலேயே இந்நோய் அழைக்கப்படுகிறது.)

தசைகளின் வளர்ச்சிக்குத் தேவையான டிஸ்ட்ரோபின் எனப்படும் புரோட்டீன் உருவாக்கத்தில் ஏற்படும் தவறு காரணமாக இந்நோய் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவரே சகோதரர் இர்பான் ஹாபிஸ்.

இலங்கையில் இது போன்ற 600-700 நோயாளர்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. பெரும்பாலும் இப்பிள்ளைகள் பிறக்கும்போது சாதாரண பிள்ளைகள் போல் தோன்றக்கூடும். எனினும், 4 வயதாகும்போது நடத்தல், படிக்கட்டுகளில் ஏறுதல், ஓடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது சிரமத்தைத் தர ஆரம்பிக்கும். 7-8 வயதை அடையும் போது எதுவிதக் காரணமுமின்றி அவர்கள் கீழே விழ ஆரம்பிப்பர்.

11-14 இற்கு இடைப்பட்ட வயதை அடையும்போது நடப்பது அவர்களுக்கு மிகவும் சிரமமான விடயமாக மாறிவிடுவதால் இப்பிள்ளைகள் நாற்காலிக்கு அல்லது சக்கர நாற்காலிக்கு மாறுவர். 16-17 வயதாகும்போது முள்ளந் தண்டெலும்பு வளைய ஆரம்பிப்பதாலும் மார்புத் தசைகள் பலவீனமடையத் தொடங்குவதாலும் சுவாசித்தல் சம்பந்தமான பிரச்சினைகளும் ஏற்படும்.

நுரையீரல் சரியான முறையில் வளியால் நிரப்பப்படாத காரணத்தால் தடிமன் போன்ற சிறு நோய்களும் இலகுவில் நியுமோனியாவாக மாறி உயிராபத்து ஏற்பட வாய்ப்பாக அமைகிறது. இதயத் தசைகள் பலவீனமடைவதால் இருதயக் கோளாறுகளும் ஏற்படலாம்.

டுஷேன் நோயாளிகளில் பெரும்பாலானோர் இறப்பது நியுமோனியா அல்லது இருதயக் கோளாறு காரணமாகவாகும். இந்நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்துகள் எதுவுமில்லை. எனினும், இது தொடர்பான ஆராய்ச்சிகள் பாரிய அளவில் வெற்றியளித்து வருகின்றன. இப்போதைக்கு Ataluran எனும் பெயரில் ஒரு மருந்து ஐரோப்பாவின் EMA எனும் மருந்துகள் அதிகார சபையின் அனுமதியைப் பெற்றுள்ளது. இன்னும் சில மாதங்களில் அது சந்தைக்கு வரக்கூடும். Nonsense Mutation வகை பரம்பரை அலகு விகாரம் காரணமாக ஏற்படும் டுஷேன் நோய்க்கு இம்மருந்து மூலம் குணம் கிடைக்க வேண்டும் இன்ஷா அல்லாஹ்.

இத்தனை ஆபத்தான நிலையில் இருக்கும் இர்பான் இதோ பே[illegible]

"என் வாழ்க்கையில் நான் பெற்ற பெரும் பாக்கியம் எனது பெற்றோர். அவர்கள் இருவரினதும் தியாகம், அளவிலா பாசம் என்னை இன்று வரைக்கும் உயிர் வாழச் செய்துள்ளன. எனது உம்மாவின் தியாகம் நிகரற்றது. நான் பிறந்த நாள் முதல் உம்மா அவருடைய இறுதி நாள் வரைக்கும் ஒரு சிறு குழந்தைக்கு எப்படியெல்லரல் அரவணைப்பு செய்யப்படுமோ அதே அரவணைப்பை எனக்கும் செய்துகொண்டே இருந்தார். உம்மா இல்லாத உலகை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

வாப்பாவின் செல்வாக்கு எனது அறிவு வளர்ச்சியிலும், ஆத்மீக வளர்ச்சியிலும் இருந்தது. என்னுடைய நோயைப் பற்றிய அறிவும் தெளிவும் இலங்கையில் இந்நோயால் பாதிக்கப்பட்ட வேறெந்த பிள்ளைகளின் பெற்றோரிடத்திலும் இருக்க முடியாது. மிக உயர் தரங்களை அடைந்திருக்கக் கூடிய தனது அதிபர் பதவியைத் துறந்து எனக்காக ஓய்வு பெற்றுக்கொண்டார் எனது வாப்பா. எனது வைத்தியரும் எனது வாப்பா தான். கிட்டத்தட்ட கடந்த இருபது வருடங்களாக ஒரு வைத்தியரைக் கூட நான் கண்டதில்லை. உம்மாவின் திடீர் மறைவுக்குப் பிறகு என்னைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்று செய்து வருகிறார்."

மேலும் இர்பான் கூறுகையில், "பாடசாலைக் கல்வி இடையில் விடுபட்டதும் எனக்கு ஆங்கில மொழியில் பேசக் கற்க வேண்டும் என்ற ஆசை மனதில் உதித்தது. எனது வாப்பாவின் மூத்த தம்பியின் பிள்ளைகள் ஆங்கில மொழியில் தான் கல்வி கற்று வந்தனர். அவர்களுக்கு தமிழ் தெரியாமலிருந்தமையும் எனக்கு ஆங்கிலம் தெரியாமலிருந்தமையும் அவர்களோடு பேசி உறவாட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இது என் மனதைப் பெரிதும் பாதித்தது.

எப்படியாவது ஆங்கில மொழியைக் கற்று அவர்களுடன் ஒரு நாளைக்கு பேசுவேன் என்று உறுதி பூண்டேன். ஆங்கிலம் படிப்பதை பெரும் சவாலாகக் கருதி எனக்கு நானே ஆசானானேன். எனது தனி முயற்சியால் அச்சவாலை வெற்றிகொண்டேன். எல்லாப் புகழும் [illegible]

2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் தான் முதன் முதலில் எழுத ஆரம்பித்தேன். பேஸ்புக் வாயிலாக liwords எனும் இளம் எழுத்தாளர்களுக்கான பக்கத்தில் ஆங்கிலத்தில் கவிதைகள் எழுதிப் பதிவேற்றினேன். அதில் சந்தித்த நண்பர்களின் ஊக்குவிப்பே எனக்கு எழுதத் தூண்டியது. 2012 ஆம் வருடம் பெப்ரவரி 19 ஆம் திகதி எனது முதலாவது வெளியீடாக Silent Struggle என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பு வெளியிடப் பட்டது. அமோக வரவேற்பும் பாராட்டுக்களும் கிடைத்தன.

இரண்டாம் வெளியீடாக Moments of Merriment சிறுவர்களுக்கான கதைகள் அடங்கிய புத்தகம் 2014 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வெளியிட்டேன். 2016 ஜூலை 10 ஆம் திகதி மூன்றாவது புத்தகம் Silent Thoughts வெளியாகியது. இந்தப் புத்தகம் எனது தனிப்பட்ட சிந்தனைகளையும், வாழ்க்கை அனுபவங்களையும், எனது பெற்றோரிடமிருந்து பெற்ற வாழ்க்கைப் பாடங்களையும் வைத்து எழுதப்பட்டது.

கண்ணீரை பாய்ச்சும் வாழ்க்கைப் பாடங்கள் அடங்கிய Silent Thoughts நூல் விமர்சனங்கள் முகநூலில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அமோக வரவேற்பைப் பெற்றிருந்தன. சகோ. இர்பான் ஹாபிஸ் குறித்து நான் தேட ஆரம்பித்த புள்ளி அதுதான்.

"என் கை விரல்களை மட்டுமே என்னால் அசைக்க முடியும். முதல் இரண்டு நூல்களும் எனது லப்டொப்பில் ஒன் ஸ்க்ரீன் கீபோர்ட் உதவியுடன் மௌஸால் ஒவ்வொரு எழுத்தாக கிளிக் செய்வதன் மூலம் டைப் பண்ணினேன். மூன்றாவது நூலை எழுதும்போது என் விரல்களால் மௌஸை பயன்படுத்த முடியாமல் போயிருந்தது. ஆகவே எனது ஐபோனில்தான் Silent Thoughts முழுவதையும் டைப் செய்தேன்."

"வாழ்க்கை என்பது ஒரு சோதனைக் களம். சோதனைகள் பலவிதமானவை. அவைகளை எவ்வாறு ஒருவர் நோக்குகிறார் என்பதே முக்கியமானது. இறை நம்பிக்கையும் மன பலமும் சோதனைகளைச் சாதனைகளாக ஆக்கிக்கொள்ள உதவுமென திடமாக நம்புகிறேன்.

சாதித்த மனிதர்களைப் பார்த்து எங்களால் அப்படி முடியவில்லையே என நினைத்து மனம் வாடிப் போகாமல் அவர்களின் வாழ்வினிலிருந்து எமது வெற்றிக்கு சாதகமான விடயங்களை தேர்ந்தெடுப்பது சிறந்ததாகும். பெற்றோரை என்றும் மதிப்பவர்களாகவும் அவர்களின் அன்பைப் பெற்றவர்களாகவும் இருப்பின் இறைவன் என்றும் உங்களைக் கைவிட மாட்டான்" என்கின்றார் உற்சாக நாயகன்.

இறுதியாக... "இன்று வரைக்கும் இன்னொரு நூல் எழுதுவதைப் பற்றி யோசிக்கவில்லை. ஆங்கிலத்தில் சிறுகதை எழுதி பேஸ்புக்கில் பதிவிடுவதில் ஆர்வமாய் உள்ளேன். இரண்டு கதைகள் எழுதினேன். இன்னும் எழுத உத்தேசித்துள்ளேன். தமிழிலும் கவிதை போன்று எழுத முயற்சித்து எழுதியும் உள்ளேன். அல்லாஹ்வின் அருள் எனக்கு அதிகமாகவே கிடைத்திருக்கிறது என்று சொல்வதில் என் மனம் குளிர்ச்சியடைகிறது.

பெற்றோர்களின் தியாகம், சகோதரர்களின் பாசம், உறவினர்களின் உற்சாக வார்த்தைகள், நண்பர்களில் முக்கியமாக பேஸ்புக் நண்பர்களின் உந்துதல் என்பன நான் பெற்ற அருட்கொடைகளாகும்" என்று சொல்லி முடிக்கின்றார் எழுத்தாளர் இர்பான் ஹாபிஸ்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முஹம்மத் பகீஹுத்தீன்



# ரமழான்: மனதை இயக்கும் வாழ்வை உயர்த்தும்

கண்ணியமிக்க ரமழான் மாதம் இதோ மீண்டும் எம்மிடம் வந்திருக்கின்றது. ரமழான் இம்மை மறுமை வாழ்வின் மாற்றத்திற்கான பயிற்சிப் பாசறையாகும். வருடா வருடம் மாற்றத்தை நோக்கிய நகர்வுக்காக வழிகாட்டும் புனித ரமழான் இம்முறையும் புதிய பாதைக்கு வழிகாட்டும் என எதிர்பார்க்கின்றோம். ரமழான் மனதை இயக்கும், வாழ்வை உயர்த்தும் என்ற நம்பிக்கையோடு புனித ரமழான் மாதத்தை வரவேற்கின்றோம்.

நபி (ஸல்) அவர்கள் ரமழானின் வரவை முன்னிட்டு தனது தோழர்களிடம் மகிழ்ச்சியோடு இப்படிக் கூறுவார்கள்: "தோழர்களே உங்களை நோக்கி ரமழான் மாதம் வருகிறது. அது பாக்கியம் நிறைந்த மாதம். அந்த மாதத்தில் அல்லாஹ் நோன்பைக் கடமையாக்கினான். அதில் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்பட்டிருக்கும். நரகத்தின் வாயில்கள் மூடப்பட்டிருக்கும். ஷைத்தான்கள் விலங்கிடப்பட்டு விடுவார்கள். அதில் ஓர் இரவு இருக்கிறது; அது ஆயிரம் மாதங்களை விடவும் சிறந்தது. அதன் நன்மைகள் யாருக்கு கிடைக்காமல் போகின்றனவோ அவன் அனைத்து நன்மைகளையும் இழந்தவனாவான்." (ஸஹீஹுல் ஜாமி - அல்பானி)

### ரமழானை வரவேற்றல் என்றால் என்ன?

ரமழானை வரவேற்பது என்பது கண்ணியமிக்க அந்த மாதத்தை அழகாக திட்டமிட்டு பயன்படுத்துவதற்கு உளரீதியாக தம்மைத் தயார்படுத்துவதாகும். தீய செயல்களைக் கலைந்து துர்நடத்தைகளை விட்டுத் தூரமாகி பாவமன்னிப்பு கேட்டு மனமாற்றம் பெற வேண்டும் என்ற உண்மையான உறுதியான எண்ணத்துடன் அந்த மாதத்தில் நுழைவதே அதனைக் கொண்டாடி வரவேற்பதாக அமையும்.

### ரமழானை வரவேற்க அகிலமே களை கட்டுகிறது

ரமழான் மாதம் மாற்றத்திற்குரிய ஒரு காலம். அந்த மாற்றத்தின் ஆரம்பம் வானத்தில் இருந்து ஆரம்பமாகிறது. அது அல்லாஹ் அந்த மாதத்திற்குக் கொடுக்கும் கண்ணியமாகும். ரஸூல் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்:

"றமழான் வந்து விட்டால் சுவனத்து வாயில்கள் திறக்கப்பட்டு, நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன, ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன." (புகாரி, முஸ்லிம்) இவை வானளவில் நடைபெறுகின்ற மிகப் பெரிய மாற்றங்கள்.

இந்தப் பிரபஞ்ச மாற்றம் அல்லாஹ்வை நெருங்குவதற்கும் நோன்பின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கும் வழிகோலுகிறது. பொதுவாக மனிதன் பாவம் செய்வதற்கு ஷைத்தானின் தூண்டுதலும் மனிதனின் மனோ இச்சையும் பிரதான இரண்டு காரணிகளாகும். முதலாவதை அல்லாஹ் கட்டுப்படுத்துகிறான். இரண்டாவதை நோன்பு கட்டுப்படுத்துகிறது.

### ரமழான் நடத்தை மாற்றத்தை எதிர்பார்க்கிறது

மாற்றங்களில் முக்கியமானது நடத்தை மாற்றமாகும். ரமழான் அதற்குரிய காலமாகும். உலகில் மாற்றங்களை கொண்டு வந்த வேதங்கள் ரமழானில் தான் இறங்கின. புனித அல்குர்ஆன் ரமழான் மாதத்தில் இறங்கியிருக்கிறது. அல்குர்ஆன் மாத்திரமன்றி தௌராத், இன்ஜீல் கூட ரமழான் மாதத்தில் தான் இறங்கியுள்ளன. இந்த வேதங்கள் அனைத்தும் மனிதனது நம்பிக்கை, சிந்தனை, நடத்தை என்பனவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் இறக்கப்பட்டவையே. எனவே ரமழான் மாற்றத்திற்கான காலம் என்பது இறைவனது தெரிவாகும். நபிகளார் (ஸல்) அவர்கள் இருபத்தி மூன்று வருட காலத்தில் ஏற்படுத்திய பாரிய சமூகப் புரட்சிக்கான ஊற்றுக் கண் அல்குர்ஆன் ரமழானில் தான் இறங்கியது.

அல்லாஹுதஆலா நோன்பின் நோக்கத்தைப் பற்றிக் கூறும் பொழுது "நீங்கள் தக்வா உடையவர்களாக மாறுவதற்காக நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது" என்று சூரா பகராவில் கூறுகிறான். இந்த தக்வா என்பது ஒரு மனப்பாங்கு மாற்றமாகும். மாற்றத்தை நோக்கி ஒவ்வொரு உள்ளமும் சுயமாக இயங்குவதற்கான பயிற்சிப் பட்டறையே ரமழான் மாதமாகும்.

இதற்கப்பால் நடத்தை மாற்றத்தைக் குறிக்கும் முகமாகவே நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள். "பொய் சொல்வதையும், போலியாக செயற்படுவதையும் யார் விடவில்லையோ அவர் தனது உணவையும் பானத்தையும் விடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை" என்றார்கள். (புஹாரி)

மற்றொரு சமயம் இவ்வாறு கூறினார்கள்: "நோன்பு நோற்றுவிட்டால், தேவையற்ற பேச்சுக்களில் ஈடுபடாதீர்கள். பிறரை முட்டாள் என்று கருதி விடாதீர்கள். (அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடாதீர்கள்) உங்களை ஒருவர் ஏசினாலோ அல்லது சண்டையிட வந்தாலோ நான் நோன்பு நோற்றிருக்கிறேன் என்று கூறி ஒதுங்கிக் கொள்ளுங்கள்" என்றார்கள். (முஸ்லிம்)

ஜாபிர் (றழி) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் நோன்பு நோற்றால், உங்களது செவியும், பார்வையும், நாவும் பொய்யை விட்டும் பாவங்களை விட்டும் நோன்பிருக்க வேண்டும். பணியாளர்களைத் துன்புறுத்துவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள், உங்களது நோன்பு கண்ணியமாகவும் அமைதியாகவும் காணப்படல் வேண்டும். நீங்கள் நோன்பு நோற்ற ஒரு தினமும் நோன்பு நோற்காத ஒரு தினமும் ஒரே மாதிரியாக அமையாது பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார்கள். (இப்னு அபீஷைபா)

பாவங்களை மாத்திரமன்றி அற்பத்தனமான நடத்தைகளையும் களைந்து ஒரு கண்ணியமான மனிதனை நோன்பு தயார்படுத்துகிறது. இத்தகைய ஒரு உயர்ந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய காலம்தான் ரமழான் காலம். உண்மையில் ரமழான் மனதை இயக்கும் வாழ்வை உயர்த்தும்.

### நோன்பு ஏன் எதற்கு?

நோன்பு ஆசைகளை அடக்குவதற்கும் மனக் கட்டுப்பாட்டுடன் நடப்பதற்கும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் அடிமைப்பட்டு வாழ்வதற்கும் மற்றும் இறையச்சத்தை வளர்த்துக் கொள்வதற்காகவும் கடமையாக்கப்பட்டுள்ளது. உண்மையில் நோன்பு பாவத்தில் தோய்ந்துள்ள உள்ளத்தை சுத்திகரிப்பதற்கும், ஆன்மீக உணர்வை அதிகரிப்பதற்கும், காம உணர்வை கட்டுப்படுத்துவதற்கும் பெரிதும் உதவுகிறது. மேலும் நோன்பு சமூகத்தை பயிற்றுவித்தல், இறையருளை உணர்த்தல், மறுமையில் கிடைக்கப் பெறும் கூலிக்காக மாத்திரம் செயற்படுதல் போன்ற உயர் பண்புகளையும் வளர்த்து விடுகிறது.

கட்டுப்பாடின்றி வயிற்றை நிரப்பும் பேராசை, மிருகத்தனமான காம இச்சை, ஷைத்தானிய கோபாவேசம், கடிவாளமில்லாத நாவு ஆகிய நான்கும் சந்தேகமின்றி மனிதனை ஆட்டிப் படைக்கும் ஆசைகளாகும். இவை தனிநபர் வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும், தேசத்தை கட்டியெழுப்புவதிலும் பாரிய சீர்கேட்டையும் அழிவையும் ஏற்படுத்துபவையாகும். இவை குணப்படுத்த முடியாத தொற்று நோயாக சமூகத்தில் பரவும். அந்த ஆசைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் மனதை இயக்கும் சக்தியாகவும் சிகிச்சையளிக்கும் பயிற்சிப் பாசறையாகவும் ரமழான் தொழிற்படுகிறது.

### மனிதன் ஏன் இச்சைகளோடும் ஆசைகளோடும் படைக்கப்பட்டுள்ளான்?

இச்சை என்பது தன்னளவில் ஒரு பாவமன்று. அதனைக் கையாள்வதில் தான் நன்மையும் தீமையும் உருவாகின்றது. மனிதன், தான் வாழும் பூமியை வளமாக்கி பயனடைவதற்கும், சுபீட்சத்துடன் வாழ்வதற்குமே ஆசைகள் கொண்டவனாக படைக்கப்பட்டுள்ளான்.

பசி உணர்வு வாழ்வின் இருப்புக்கான அடிப்படை. காம உணர்வு மனித இன விருத்திக்கான அடிப்படைக் காரணி. ஆனால் அது இறைவழிகாட்டலுடன் பிரயோகிக்கப்பட வேண்டும். அப்போது அது கனவன், மனைவி, பிள்ளை, உறவுகள் என கட்டுக்கோப்பான குடும்ப வாழ்வுக்கு வித்திடும்.

கோபம் அதற்குரிய இடத்தில் இருந்து கொண்டால் தீமைகள் பரவாது. பதிலாக எங்கும் பாதுகாப்பு நிலவும். அல்லாஹ்வுக்கான கோபம் நன்மைகளுக்கான காவல் அரணாகவும், தீமைகளுக்கான தடுப்புச் சுவராகவும் இருப்பதுடன் மானத்தையும், வாழ்வின் இருப்புக்கான உத்தரவாதத்தையும் புனிதங்களை பேணுவதற்கான காப்பாகவும் அமையும். அது நிலை மாறினால் பிளவும் பிரிவாகவும், கொலையும் கொள்ளையாகவும், சண்டை சச்சரவாகவும் மாறிவிடும்.

அவ்வாறே பேச்சு என்பது இருவரை சேர்க்கும். இரண்டு குடும்பங்களை இணைக்கும். இரண்டு ஊர்களை சமாதானமாக வாழவைக்கும். இரண்டு நாடுகளையே அமைதியாக ஆள வழிவகுக்கும். பேச்சு இறை திருப்தியை அடிப்படையாகக் கொண்டு இருந்தால் உயர்ந்த சுவனம் பரிசாக கிடைக்கும். முள்ளில்லாத நாவு கடிவாளமின்றி பேசத் தொடங்கினால் நரகப் படுகுழியே தங்குமிடமாக அமைந்து விடும்.

எனவே பசியுணர்வு தொடர்ந்தேர்ச்சியான வாழ்வுக்கு ஒரு அடிப்படை. காமம் மனித இன விருத்திக்கான காரணி. கோபம் அதற்குரிய இடத்தில் இருந்தால் தீமைகள் தடுக்கப்பட்டு எங்கும் பாதுகாப்பு நிலவும். பேச்சு இறை திருப்தியை அடிப்படையாகக் கொண்டு அமைந்தால் உயர்ந்த சுவனம் பரிசாக கிடைக்கும். எனவே மனிதன் ஆசைகளுடனும் இச்கைளுடனும் படைக்கப்பட்டிருப்பதற்கு அர்த்தம் உண்டு. ஆசைகளை அவன் கையாளும் விதத்தைப் பொறுத்து அது அவனுக்கு சுவனத்திற்கான அல்லது நரகத்திற்கான பாதையாக அமையலாம்.

### ஆசைகளை நெறிப்படுத்துவதில் நோன்பின் பங்கு

ரமழான் உடல், அறிவு, ஆன்மா, நடத்தை ஆகிய நான்கு பகுதிகளையும் பரிசுத்தப்படுத்துகின்றது. மண்ணின் மீது ஆசை கொண்ட மனிதனை வானத்தின் பால் உயர்த்துகிறது. கறைபடிந்த உள்ளத்தை சுத்தப்படுத்துகிறது. மனிதன் வாழ்வில் ஆயிரம் வசதிகள் இருந்தும் நிம்மதியில்லாமல் வாழ்வதுண்டு. காரணம் உள்ளம் மலர்வதில்லை. மனம் விசாலிப்பதில்லை. யார் இறைவழிகாட்டலை புறக்கணிக்கின்றானோ அவனது மனோநிலை இறுக்கமானதாக இருக்கும் என்று அல்லாஹ் அருள் மறையில் ஸூரா தாஹாவின் 123 ஆவது வசனத்தில் குறிப்பிடுகிறான்.

நிம்மதி சந்தோசம் இல்லாத சுருங்கிய உள்ளத்தை நோன்பு குணப்படுத்துகிறது. மனதை இயக்கி ஆன்மீகத்தை உயிர் வாழச் செய்கிறது. அந்த வகையில் ரமழான் உடல், அறிவு, ஆன்மா, நடத்தை ஆகிய நான்கு பகுதிகளிலும் மனித ஆசைகளைக் கட்டுப்படுத்தி அல்லாஹ்வின் பால் உயர்வதற்கு வழிகாட்டுகிறது. அவனது ஆசைகளுக்கு கடிவாளமிடுகிறது. ரமழான் மாற்றத்தை நோக்கி மனதை இயக்குகிறது. வாழ்வை உயர்த்துகிறது.

மாற்றம் ஒவ்வொருவரினதும் உள்ளத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். ரமழானின் பிரதான இலக்கு இறையச்சம் நோக்கிய பயணமாகும். இறையச்சம் என்பது உள்ளத்தில் உருவாகும் மாற்றம் என நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். எனவே வாழ்வில் மாற்றம் தேவை என்ற எண்ணத்துடன் புனித ரமழான் மாதத்தில் களமிறங்கினால் நிச்சயமாக ரமழான் மனதை இயக்கும் வாழ்வை உயர்த்தும்.

---

உஸ்தாத்
ஆஸாத் அப்துல் முஊத் (நளீமி)

# பெரியவர்களும் அல்குர்ஆனை ஓதுவோம்

சங்கைமிக்க ரமழான் மாதம் எம்மை வந்து விட்டது. ரமழானுக்கும் அல்குர்ஆனுக்கும் இடையிலான தொடர்பு விஷேடமானது. அல்லாஹ் அருள் நிறைந்த ரமழான் மாதத்தில்தான் அருள் நிறைந்த அல்குர்ஆனை இறக்கி அருளினான். எனவே அல்லாஹ்வின் அருள்களை நாம் பெற்றுக்கொள்ள அல்குர்ஆனுடனான உறவைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அல்குர்ஆன் மனித வாழ்விற்கு வழிகாட்டும் வேதம். அது உலகில் வாழும் அனைத்து மனிதர்களுக்கும் அருளாக இறக்கப்பட்டது. அதன் போதனைகளைப் பின்பற்றியோர் ஒருபோதும் வழி தவற மாட்டார்கள். அவர்களது வாழ்வு ஒளிமயமாகும். வாழ்க்கை அர்த்தமுள்ளதாகக் காணப்படும். வாழ்வதன் நோக்கம் நிறைவேறும்.

இப்படியில்லாது, அல்குர்ஆனின் போதனைகளை விட்டு விட்டு வேறு பாதைகளை யார் பின்பற்றுகின்றார்களோ அவர்கள் உலக வாழ்வில் தட்டுத் தடுமாறிப் போவார்கள். இவர்கள் மனோஇச்சைக்குக் கட்டுப்பட்டு, உலக வாழ்வில் மோகம் அதிகரித்துக் காணப்படும். சமூகத்தில் பல சீர்கேடுகள் அதிகரிக்கும். அத்துடன் மறுமையிலும் இவர்கள் நஷ்டமடைவார்கள்.

அல்குர்ஆனுக்கு நாம் செய்ய வேண்டிய பல கடமைகள் உள்ளன. அவற்றில் அதனை ஓதுவதும் ஒரு கடமையாகும். இக்கடமை அனைவராலும் செய்ய முடியுமான கடமைகளில் ஒன்றாகும். இது அல்குர்ஆனின் கட்டளைகளில் ஒன்றாகும்.

அல்குர்ஆனை ஓதுமாறு அல்லாஹ் கட்டளையிடுகின்றான். "நான் முஸ்லிம்களில் ஒருவராக இருக்குமாறு ஏவப்பட்டுள்ளேன், மற்றும் அல்குர்ஆனை ஓதுமாறும் ஏவப்பட்டுள்ளேன்" (நம்ல்: 91-92) என நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் சொன்ன கட்டளையை குர்ஆன் கூறுகின்றது.



அல்குர்ஆனை ஓதுவது நஷ்டமடையாத வியாபாரம் என அல்லாஹ் வாக்களிக்கின்றான். "நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஓதி, தொழுகையை நிலைநாட்டி; நாம் அவர்களுக்குக் கொடுத்ததிலிருந்து ரகசியமாகவும், பரகசியமாகவும் செலவு செய்கின்றார்களோ இத்தகையவர்கள் அழியாத ஒரு வியாபாரத்தில் ஆசை வைத்துள்ளனர்." (பாதிர்: 29).

நபி (ஸல்) அவர்கள் அபூ தர் அல் கிபாரி (ரழி) அவர்களுக்கு சொன்ன வஸிய்யத் அல்குர்ஆனைப் பற்றியதாகும். "நீங்கள் அல்குர்ஆனை ஓதி வாருங்கள். அது உங்களுக்கு உலகில் ஒளியாகவும், வானத்தில் சேமிப்பாகவும் இருக்கும்." (இப்னு ஹிப்பான்).

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: "யார் அல்லாஹ்வின் வேதத்தில் ஒரு வசனத்தை செவிமடுக்கின்றாரோ அவருக்கு இரட்டிப்பான நன்மை எழுதப்படும். யார் அதனை ஓதுகின்றாரோ அவருக்கு அது மறுமைநாளில் ஒளியாகக் காணப்படும்." (அஹ்மத்).

ஸமுரா இப்னுல் ஜுன்துப் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: "ஒவ்வொரு விருந்தாளியும் தனது விருந்துபசாரத்தை வழங்க விரும்புகின்றான். அல்லாஹ்வின் விருந்துபசாரம் அல்குர்ஆனாகும். எனவே நீங்கள் அதனை விட்டு விட வேண்டாம்." (பைஹகி).

இன்று அல்லாஹ்வின் அருளால் ரமழான் மாதத்தில் சிறார்களுக்கான குர்ஆன் ஹிஸ்பு மஜ்லிஸ்கள் நடைபெற்று வருகின்றன. இதில் மாணவர்கள் பங்கு பற்றி ஓதலுக்கான பயிற்சிகளையும் பெறுகின்றனர். இவ்வகையான செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டும். கலந்துகொள்வோரை உற்சாகப்படுத்தும் வகையில் பரிசில்களை வழங்க முடியும். இதனை முன்னின்று செய்வோரும் கௌரவப்படுத்தப்பட வேண்டும்.

ஊர்களில் காணப்படும் பகுதி நேர ஹிப்ல் மத்ரஸாக்களின் மூலமாகவும் அல்குர்ஆனை ஓதுவதற்கான தூண்டுதல்கள் வழங்கப்படுகின்றன. அவை இன்னும் வழிகாட்டப்பட்டு நடைபெறுமாயின் அவற்றின் விளைவுகளையும் நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அல்குர்ஆனை திறம்பட ஓத வேண்டும் என்பது சிறுவர்களுக்கு மாத்திரம் சொல்லப்படும் வழிகாட்டலல்ல. இதில் பெரியவர்களும் ஈடுபட வேண்டும். அவர்களும் அல்குர்ஆனை நாளாந்தம் ஓதும் பழக்கத்திற்கு வர வேண்டும்.

அல்குர்ஆன் அனைவரும் ஓத வேண்டிய இறைமறையாகும். பலபோது வயது முதிர்ந்தோர், (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமகால பிக்ஹ் பிரச்சினைகள்

# கடன் அட்டையை வரையறைகளுடன் பயன்படுத்தல்



கடன் அட்டையில் வட்டியை அடிப்படையாகக் கொண்டே ஒப்பந்தம் நடைபெறுகின்றபோதும் வட்டியுடன் நேரடியாக சம்பந்தப்படாத பட்சத்தில் இக்கடன் அட்டையைப் பாவிக்கலாமா என்பதில் நவீன கால இஸ்லாமிய சட்ட அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அதாவது வட்டி கடமையாகாத வகையில் வழங்கப்பட்ட கால வரையறைக்குள் முழுத் தொகையையும் செலுத்த முடியும் என்ற நம்பிக்கையிருந்தால் கடனட்டைகளைப் பயன்படுத்தலாமா என்பதே கருத்து வேறுபாட்டிற்குரிய கேள்வியாகும்.

வட்டியில் சிக்காத வண்ணம் கடன் அட்டையைப் பயன்படுத்துவது கூடும் என்று ஒரு சாராரும், கடன் அட்டை ஒப்பந்தம் வட்டியை அடிப்படையாகக் கொண்டே கைச்சாத்திடப்படுவதனால் அதன் முழு வடிவமும் ஹராமாகவே அமையும் என மற்றொரு சாராரும் கருதுகின்றனர்.

ஹனபி, ஹன்பலி மத்ஹபின் கருத்துக்களை நோக்கும்போது, அவர்கள் மேற்குறித்த நிலையில் அது ஆகும் என்று கருதுகின்றனர். ஒரு கடன் உடன்படிக்கையின்போது மார்க்கம் அனுமதிக்காத ஒரு நிபந்தனையும் அங்கு விதிக்கப்படுமாயின், அந்த நிபந்தனை செல்லுபடியற்றதாக மாறுமே தவிர உடன்படிக்கையில் அது எவ்வித பாதிப்பையும் செலுத்த முடியாது என்பதே இவர்களின் வாதமாகும்.

எனவே, கடன் அட்டை தொடர்பில் வட்டியைக் கொண்டு விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் செல்லுபடியற்றது. அவற்றைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. அதேபோன்று அது போன்ற நிபந்தனையில் நாம் விழுந்து விடாமல் கடன் அட்டைகளைப் பாவிக்க முடியும் எனக் கூறும் இவர்கள், கீழ்வரும் ஹதீஸை அதற்கு ஆதாரமாக முன்வைக்கின்றனர்.

''மக்களுக்கு என்ன ஆயிற்று. அல்லாஹ்வின் சட்டத்தில் இல்லாத நிபந்தனைகளை விதிக்கின்றார்களே. அல்லாஹ்வின் வேதத்தில் இல்லாத ஒரு நிபந்தனையை ஒருவர் விதித்தால் அது செல்லுபடியாகாது. அதை அவர் நூறு முறை நிபந்தனையாக விதித்தாலும் சரியே. (அறிவிப்பாளர்: ஆயிஷா (ரழி), ஸஹீஹுல் புகாரி 2530)

மேற்குறித்த ஹதீஸை அடிப்படையாகக் கொண்டு சமகால அறிஞர்கள், ஒருவர் ஒப்பந்தத்தின்படி வட்டியுடன் நேரடியாக சம்பந்தப்படாது குறிப்பிட்ட கால வரையறைக்குள் குறிப்பிட்ட கடனை செலுத்தி விட முடியும் என்ற மன உறுதியுடனும் பேணுதலுடனும் இருப்பின், வெறுமனே ஒப்பந்தத்தில் மட்டும் கைச்சாத்திடுவதிலும் அவ்வட்டையைப் பயன்படுத்தி ஏனைய ஆகுமான சேவைகளைப் பெற்றுக்கொள்வதிலும் தவறில்லை எனக் கருதுகின்றனர். இதற்கு மற்றொரு ஹதீஸையும் ஆதாரமாகக் கொள்கின்றனர்.

''நான் பரீராவை வாங்கினேன். அப்போது எஜமானர்கள் அவருக்கு வாரிசாகும் உரிமை தமக்கே உரியதாக இருக்க வேண்டும் என நிபந்தனையிட்டார்கள். நான் அதை நபியவர்களிடம் சொன்னேன். அதற்கு நபியவர்கள் அவனை விடுதலை செய்துவிடுங்கள். ஏனெனில், வாரிசுரிமை விலையைக் கொடுப்பவருக்கே. அதாவது, விடுதலை செய்பவருக்கே உரியதாகும் எனக் கூறினார்கள்.'' (அறிவிப்பாளர்: ஆயிஷா (ரழி), ஸஹீஹுல் புஹாரி 2023)

மற்றொர் அறிவிப்பின்படி, ''நிபந்தனையிடுங்கள் விடுதலை செய்யுங்கள். மேலும் அவர்களுக்கே வாரிசுரிமை எனவும் நிபந்தனையிட்டுக் கொள்ளுங்கள் என நபியவர்கள் கூறியுள்ளார்கள். (ஸஹீஹுல் புஹாரி 2524)

மேற்போந்த ஹதீஸுக்கு விளக்கமளிக்கும் முஹத்திஸூன்கள் பின்வருமாறு கூறுகின்றனர்.

''மார்க்கத்திற்கு முரணான இத்தகைய நிபந்தனைகளை இட்டுக் கொள்வதை தரக் குறைவாகக் காட்டுவதற்கும் அவ்வாறான நிபந்தனைகளை பொருட்படுத்தத் தேவையில்லை என்பதையும் ஷரீஆவுக்கு முரணாக எத்தகைய நிபந்தனைகளை இட்டபோதும் அது செல்லுபடியாகாது என்பதையும் காட்டவே நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

மின்சார, தொலைபேசிக் கட்டணம் உரிய நேரத்தில் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிகமான ஒரு தொகையும் சேர்த்தே அறவிடப்படுவது பல நாடுகளில் நடைமுறையிலுள்ள சட்டமாகும். இங்கு வட்டி சம்பந்தப்படுவதால் ஒரு முஸ்லிம் மின்சாரம், தொலைபேசி, குடிநீர் என்பவற்றைப் பாவிப்பது ஹராம் என எங்களால் கூற முடியுமா? இல்லை.

மாறாக, வட்டியில் விழுந்து விடாமல் குறிப்பிட்ட கால வரையறைக் குள் கட்டணத்தைச் செலுத்தி விட முடியும் என மன உறுதியும் நம்பிக்கையும் இருப்பின் அவற்றைப் பயன்படுத்த முடியும். கடன் அட்டை விவகாரத்தையும் இவ்வாறே நோக்க வேண்டும். தக்கி உஸ்மான், வஹ்பதுஸ் ஸுஹைலி, அபூ குத்தா போன்றோர் இக்கருத்தை ஆதரிக்கின்றனர்.



# ஹதூன் அஜ்வத் அல் பாஸி

ஹதூன் அஜ்வத் அல் பாஸி சவூதி அறேபியாவில் ஜித்தாவில் பிறந்தவர். அந்நாட்டிலுள்ள கிங் ஸஊத் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியையாக விளங்குகின்றார். 1989 ஆம் ஆண்டிலிருந்து அப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்த அவர், குறிப்பிடத்தக்க வரலாற்றுத் துறை ஆய்வுகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

சவூதி அறேபியா உள்ளடங்கியிருக்கின்ற பண்டைய நபதாஇய்யா எனப்படும் இஸ்லாத்திற்கு முந்திய அறேபிய ராஜ்யத்தின் வரலாறு குறித்து ஹதூன் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். அவரது கருத்தில் நவீன சவூதி அறேபியாவில் பெண்கள் பெற்றுள்ள சுதந்திரத்தை விட பண்டைய ராஜ்யத்தில் பெண்கள் பெற்றிருந்த சுதந்திரம் அதிகமானதாகும்.

ஹதூன் மக்காவிலுள்ள ஸூபித்துவ அல் பாஸி குடும்பத்தின் உறுப்பினராவார். ஹஸன் இத்ரீஸி என அழைக்கப்படும் பெரியாரின் பரம்பரையில் வந்த குடும்பமே இது. அவரது தந்தை ஷெய்க் அஜ்வத் அல் பாஸி. தந்தையின் தந்தை ஷெய்க் அப்துல்லாஹ் அல் பாஸி. ஹதூன் ஷாதுலிய்ய தரீக்காவின் பாஸிய்யா ஆன்மீக கிளை ஸ்தாபகர் இமாம் குத்புல் வுஜூத் ஹஸ்ரத் முஹம்மத் அல் பாஸி அவர்களின் கொள்ளுப் பேத்தியாவார். இப்பரம்பரை இறைதூதர் (ஸல்) அவர்களின் வழித் தோன்றலில் வந்தது எனக் கொள்ளப்படுகின்றது.

ஹதூனின் தாய் சாமிரா ஹமீத் தகீம். ஹிஜாஸை சேர்ந்த ஹர்ப் எனப்படும் பழங்குடியைச் சேர்ந்தவரே அவர். ஹதூன் அல் பாஸி சுதந்திர சிந்தனைக்கு இடம் வழங்கிய ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். ஊடகங்கள் வாயிலாக பெண்களின் உரிமைகள் குறித்து அதிகம் எழுதுகின்றவர்.

1986 இல் வரலாற்றுத் துறையில் தனது முதல் பட்டத்தைப் பெற்ற அவர், 2000 ஆம் ஆண்டு பண்டைய பெண்களின் வரலாறு எனும் துறையில் மென்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். 1989 இல் மன்னர் ஸுஊத் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்த அவர் 1992 இல் வரலாற்றுப் பீட உறுப்பினரானார். பெண்களின் வரலாறு குறித்து பல்வேறு அய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

2007 இல் இஸ்லாத்திற்கு முன்னைய பண்டைய அறேபியாவில் பெண்களின் நிலை எனும் தனது ஆய்வை வெளியிட்டார். பண்டைய, கிரேக்க, ரோமன், செமித்திய மரபுகள், சட்டங்கள், சமூக அமைப்புகள் என்பவற்றில் இருந்ததை விட பண்டைய அறேபியாவில் பெண்களின் சுதந்திரம் அதிகமாக இருந்தது என்று ஹதூன் இந்த ஆய்வில் சுட்டிக்காட்டுகின்றார்.

அறேபியவர்கள் நகரமயமாக்கப்படாத நாடோடிகளாய் இருந்தனர் எனும் கருத்தையும் அவர் நிராகரிக்கின்றார். 2005 இல் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் பெண்கள் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. மார்க்கக் காரணங்களே அதற்கு முன்வைக்கப்பட்டன. 2011 இல் இடம்பெற்ற மாநகர சபைத் தேர்தலில் ஹதூன் ஒரு பிரச்சாரகராகக் கலந்துகொண்டார். சவூதி அறேபியா தனது அரசியல் சீர்திருத்த வரலாற்றில் தேர்தலில் பெண்களை அனுமதித்தமை ஒரு திருப்பம் என அவர் தெரிவித்திருந்தார்.

2015 தேர்தலில் பிரபலமான பிரச்சாரகராக அவர் மாறினார். எவ்வாறாயினும், நாட்டில் பெண்களுக்கான முழுச் சுதந்திரம் இதுவரை வழங்கப்படவில்லை என்பதே அவரது அபிப்பிராயமாகும். அல் ரியாத் எனப்படும் அறபுப் பத்திரிகையில் சிறப்புக் கட்டுரைகளை எழுதி வருகிறார். சவூதிப் பெண்கள் வரலாறு, ஊடகம், தொல்பொருளியல் போன்ற துறைகளில் அனேகமான கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். அதேபோன்று உள்ளூர் மற்றும் சர்வதேச அச்சு ஊடகங்களில் அவரது நூற்றுக்கணக்கான நேர்காணல்கள் வெளிவந்துள்ளன. CNN, BBC, அல் ஜஸீரா போன்ற உலகத் தொலைக்காட்சி சேவைகளிலும் அவரது நேர்காணல்கள் வெளிவந்துள்ளன.

# ஜேர்மனியில் இடம்பெறும் ஓர் அதிசயமான வழக்கு!



2 ஆம் உலகப் போரின்போது ஜேர்மனின் நாசிகள் அந்நாட்டில் நடத்தியதாகக் கூறப்படும் மரண முகாம்களில் 10 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய முகாம்களில் ஒன்றுக்கு காவலாளியாக இருந்த 94 வயதான ஒருவரை இப்போது ஜேர்மன் நீதிமன்றில் நிறுத்தி விசாரணை செய்கின்றனர். அவரது பெயர் ரெய்ன் ஹோல் ஹனிங். இவர்தான் ஹொலொகோஸ்ட் தொடர்பில் விசாரிக்கப்படும் இறுதிக் குற்றவாளி. ஹொலொகோஸ்ட் என்பது யூதர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட மரண தண்டனையாகும்.

ரெய்ன் ஹோல்ட் 170,000 பேர் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தார் என்பது அவர் மீதான பிரதான குற்றச்சாட்டாகும். அவர் அதனை நிராகரிக்கின்றார். அவருக்கு மன்னிப்பு வழங்குமாறு வேண்டுகின்றார்.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்று சுமார் 60 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த விசாரணை நடைபெறுவது தான் மிக ஆச்சரியமானது. ஹொலொகோஸ்ட் என்பது வரலாற்றில் உண்மையில் நிகழ்ந்ததா இல்லையா என்பது பற்றி ஒரு பெரும் விவாதமே நீடிக்கின்றது. ஹொலொகோஸ்ட் யூதர்கள் கண்டுபிடித்த ஒரு பொய் என்று வாதிடும் ஆய்வாளர்கள் உள்ளனர். காரணம், ஜேர்மனியில் நாசிகளால் நடாத்தப்பட்டதாகக் கூறப்படும் விஷவாய்வு மற்றும் மரண முகாம்களில் 10 இலட்சத்திற்கும் அதிகமான யூதர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது யூத அரசியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர்களின் வாதமாகும்.

ஆனால், இந்த வாதம் அடிப்படையிலேயே அறிவுபூர்வமற்றது. 1940 களில் 10 இலட்சத்திற்கும் அதிகமான யூதர்கள் உலகில் வாழ்ந்தார்களா என்ற கேள்வியிலிருந்து இந்த வாதத்தின் போலி முகம் வெளிப்படுகின்றது.

அமெரிக்காவிலும் வேறு பல ஐரோப்பிய நாடுகளிலும் ஹொலொகோஸ்டின் உண்மைத் தன்மை குறித்த விவாதங்கள் நடைபெற்று வந்துள்ளன. 1991 நவம்பரில் அமெரிக்காவைச் சேர்ந்த பிரெட்லி ஸ்மித் என்பவர் இது குறித்த பகிரங்க விவாதத்திற்கு அழைப்பு விடுத்தார். வரலாற்றில் அப்படியொன்று நடக்கவில்லை என்பதே அவரது முடிவாக இருக்கின்றது.

இன்று உலகின் சில நாடுகளில் ஹொலொகொஸ்ட் ஒரு மாயை என்று கூறுவது தடுக்கப்பட்டுள்ளது. வேறு வகையில் அது தண்டனைக்குரிய குற்றமாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் ஜேர்மனைச் சேர்ந்த ரெய்ன் ஹோல்ட் 94 ஆவது வயதில் எவ்வாறு விசாரணைக்குட்படுகிறார் என்பதே அதிர்ச்சியான கேள்வியாகும்.

ஹிட்லரின் நாசிகள் ஜேர்மனியில் தமது எதிரிகளை வேட்டையாடுவதற்கும் வதை செய்வதற்கும் முகாம்களை நடாத்தினார்கள் என்பது உண்மைதான். அதில் யூதர்கள் மாத்திரமே அடைக்கப்பட்டார்கள் என்பதும் வதை செய்யப்பட்டார்கள் என்பதும் பெரும் வரலாற்றுப் புரட்டாகும். இன்னொரு புறம் 10 இலட்சத்திற்கும் அதிகமான யூதர்கள் இத்தகைய முகாம்களில் கொல்லப்பட்டார்கள் என்பதும் ஸ்மிதின் கருத்தின்படி பெரும் வரலாற்றுப் புரட்டலாகும்.

தமது முறைகேடான பழக்க வழக்கங்கள், ஏமாற்று மோசடிகள், சுயநலம், வட்டியின் மூலம் பிற மக்களின் பொருளாதாரத்தை உறிஞ்சல் போன்ற கீழ்த்தரமான செயல்பாடுகள் மூலம் யூதர்கள் ஐரோப்பிய சமூகங்களுக்கு மத்தியில், குறிப்பாக ஜேர்மனியில் நாசிகளின் அதிருப்தியை சம்பாதித்திருந்தனர். யூதர்களின் நடத்தைகளும் மனோபாவமும் அவர்கள் மீது தன்னியல்பான வெறுப்பையே உருவாக்கியிருந்தது.

இந்நிலையில், நாசிகள் யூதர்களில் சிலரை வதை முகாம்களின் அடைத்து கொலை செய்தமை உண்மையாக இருக்கக் கூடும். ஆனால், அவர்களின் உடல்களிலிருந்து பெறப்பட்ட கொழும்பின் மூலம் ஹிட்லர் சவர்க்காரம் செய்ததாகக் கூறப்படும் கதைகளெல்லாம் பெரும் வரலாற்றுப் புரட்டலாகும்.

இன்று ரெய்ன் ஹோல்ட் எதிர்கொள்ளும் வழக்கின் அரசியல் பின்னணி என்ன? ஒரு காலத்தில் யூதர்களை வெறுத்து ஒதுக்கிய நாசிகளால், யூதர்கள் கொல்லப்பட்ட ஜேர்மனியில் 94 வயதிலுள்ள ஒரு வாயிற் காவலன் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார் என்றால் அதன் அரசியல் பின்னணி என்ன?

அஞ்சலா மார்க்கலின் அரசாங்கத்தில் யூதர்கள் எந்தளவு செல்வாக்குப் பெற்றுள்ளனர் என்பதையே இது காட்டுகின்றது. தாம் முற்றாகத் தூக்கி வீசப்பட்ட ஒரு நாட்டில் மிகக் குறைந்தளவு சிறுபான்மையாக உள்ள யூதர்கள் அரசியல் லொபிகளில் எப்படி செல்வாக்குப் பெற்றுள்ளனர் என்பதையே இன்றைய விசாரணை உணர்த்துகின்றது.

நாசிகளின் வதை முகாம்களில் பல நூறு பேர் வாயிற் காவலர்களாக பணியாற்றியிருக்கலாம். அவர்கள் எல்லோரும் போல் இறந்து விட்டனர். உயிர் வாழ்கின்ற ஒரேயொரு மனிதரான ரெய்ன் ஹோல்ட் தனது 94 ஆவது வயதில் நீதிமன்றில் நிறுத்தப்பட்டிருப்பது ஒரு வினோதமான செயலாகும். ஏனெனில், 60 ஆண்டுகளுக்கு முந்திய நிகழ்வுகளை மிகச் சரியாக நினைவுபடுத்த முடியாத நிலையில் அவர் உள்ளார். அதிகார வர்க்கம் வழங்கிய ஊதியத்திற்கு பணியாற்றிய ஒருவரை அவரது தன்னியல்பான குற்றம் போன்று கருதி விசாரணை செய்வது எந்த வகையில் நியாயமாகும்.

அவ்வாறாயின் 48 இற்கு முன்னர் பலஸ்தீனிலிருந்து 8 இலட்சம் மக்களை அகதிகளாக்கி பல்லாயிரம் பேர் கொல்லப்படுவதற்குக் காரணமான கோல்டா மேயர், பென்கூரியன் ஆகியோரும் விசாரிக்கப்பட வேண்டும்.

ஈராக்கில் 10 இலட்சம் மக்களைப் பலியெடுத்த புஷ்ஷும் பிளேயரும் நீதிமன்ற விசாரணைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். பொஸ்னியாவில் பெரும் மனிதப் படுகொலைகளுக்குக் காரணமான யூகோஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி விசாரிக்கப்பட வேண்டும். இன்னும் கம்போடியா, ருவாண்டா, சேர்பியா, ஆர்மேனியா, நான்கிங் படுகொலைக்குக் காரணமானவர்கள் எல்லோரும் நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்ள வேண்டும்.

ஹொலொகோஸ்ட் குற்றவாளிகளை விட இவர்கள் சமீபத்திய குற்றவாளிகள் என்பது முக்கியமானது. நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டிய பலர் மிகச் சுதந்திரமாக வெளியில் உலா வரும் போது 60 ஆண்டுகளுக்கு முன்னர் ஹிட்லரின் அழுத்தத்திற்கு உட்பட்டு ஒரு வதை முகாமுக்குக் காவலாளியாக இருந்த ஒருவரை 94 வயதில் விசாரணை செய்வது என்பது எந்த வகையில் நியாயமாகும். யூதர்கள் தமக்குச் சார்பானதை மட்டுமே குற்றம் என்றும் தண்டனை என்றும் நீதி என்றும் வரையறுக்கின்றனர். அது எப்போதும் உலகப் பொது நீதிக்கு எதிரானதாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்னப்புவ... (01ம் பக்கத் தொடர்)

உண்மை நிலை அவ்வாறல்ல. CCTV விடயங்களும் கருகியதாகக் கூறுகின்றனர். 5 மணிநேரம் தாக்குப்பிடிக்கும் நினைவகத்தில் இருந்து Administrator Password மூலம் எப்படியாவது கோப்புகளை பெற முயற்சிக்கின்றோம் என முகாமையாளர் ஹரீஸ் தெரிவித்தார்.

இவர் கடமையாற்றிய அனுராதபுர கிளையும் 06 மாதங்களுக்கு முன்னர் இதே போல தீப்பற்றி எரிந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். அவசரத்திற்கு நீர் கொழும்பில் உள்ள தீயணைப்புப் படையை தொடர்பு கொண்டால் அவர்கள் கணக்கு வழக்கு தொடர்பாக பேசியே நேரத்தை வீணடித்தார்கள். எவ்வளவு காசு தருவீர்கள் என்பதை உத்தரவாதப்படுத்திய பின்னரே வருவதாக சொல்லி, ஒரு மணிநேரம் கழித்தே வந்து சேர்ந்தார்கள் என இங்கு பணியாற்றும் முபாரக் தெரிவித்தார்.

இங்கு 03 சிங்கள சகோதரிகள் உட்பட 7 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். வென்னப்புவையில் உள்ள 5 மாடி கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் "Last Chance" நிறுவனம் இயங்கி வருகிறது. வீதியில் இருந்த லைட்டர் ஒன்றும் ஸ்க்ரு டிரைவர் ஒன்றும் சந்தேகத்தை தூண்டின.

குறித்த நேரத்தில் வீசிய திடீர் காற்றும் தீயை வேகமாக்கியது. இதனால் எமது நிறுவனத்திற்கு அண்ணளவாக 9 கோடி ரூபாய்கள் அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மார்க்க ரீதியான நிலைப்பாடுகள் கருதி நாம் வியாபாரத்திற்கு காப்புறுதி செய்தும் இல்லை. கட்டிட உரிமையாளர் இந்த கட்டிடத்திற்கு காப்புறுதி செய்தும் இல்லை.

அண்மைய சில நாட்களாக முகநூலில் 'வென்னப்புவையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக உள்ள லாஸ்ட் சான்ஸ் நிறுவனத்தில் பொருட்கள் வாங்க வேண்டாம்' என்ற இனவாதத்தைத் தூண்டும் வாசகத்தையும் கண்டிருக்கின்றோம். ஆகவே எமது சந்தேகங்களை வலுவாக்கும் நிலைப்பாட்டைத்தான் சூழவும் காண்கின்றோம் என வென்னப்புவ கிளைக்கான முகாமையாளர் முனஸ்ஸிர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த காலங்களிலும் இனவாதச் செயற்பாடுகள் கூர்மையடைந்த வேளையிலேயே நோலிமிட் நிறுவனம் தீக்கிரையானது. இதுவும் வர்த்தகப் போட்டியின் காரணமாகவே நடைபெற்றிருக்கலாம் என்று பேசப்பட்ட போதும் அதனுடைய விசாரணை முடிவுகள் இன்னும் வெளிவரவில்லை.

## எட்காவுக்கான... (01ம் பக்கத் தொடர்)

இந்திய ஆசிரியர்களை மலையகத்தில் கற்பிக்க அனுமதியளித்தால் நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்க போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை நோக்கும் போது பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்குவது மிக குறைவாகவே காணப்படுகின்றது. பொருளாதார பிரச்சினை உயர்கல்வி வாய்ப்பு இன்மை என்பன பிரதான பிரச்சினையாகும். இவர்களில் வைத்தியர்கள் பொறியியலாளர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே உருவாகின்றனர்.

இந்த வாய்ப்பும் மலையக மக்கள் வாழும் எல்லா மாவட்டங்களுக்கு கிடைப்பது இல்லை. நுவரெலியாஇ கண்டி மாவட்டங்களில் மாத்திரமே க.பொ.த உயர் தரத்தில் விஞ்ஞான கணித பிரிவுகளும் உடைய பாடசாலைகள் காணப்படுகின்றன. ஏனைய மாவட்டங்களான பதுளை மொனராகலை இரத்தினபுரி கேகாலை குருநாகல் காலி களுத்துறை போன்ற மாவட்டங்களில் விஞ்ஞான கணித பிரிவு கொண்ட பாடசாலைகள் இல்லை என்பது மிகவேதனையான விடயமாக காணப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வேலை பெற்றுத் தருமாறு தற்போது போராட்டங்களை மேற்கொண்டு வரும் தருணத்தில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்து மலையக பகுதிகளில் கல்வியை போதிக்க எடுக்கும் நடவடிக்கையானது பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. இவ்வாறான செயற்பாடு மேலும் பிரச்சினைகளை தோற்றுவிக்கும்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் மேற்கொள்ள இருக்கும் எட்கா ஒப்பந்தத்தில் முன்னோட்டமாக இதை பார்க்கலாம். எனவே இப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணாது இவ் அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதை இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

## வீடு திரும்பும்... (01 ம் பக்கத் தொடர்)

என்ற உடன்பாட்டின் பேரில் பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மீள்பார்வைக்கு கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், இது தொடர்பில் செயற்படுவதற்கான ஒரு குழுவினர் அரசாங்க அதிபர் தலைமையில் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அதில் கிராம சேவகர், பிரதேச செயலாளர், பௌத்த மதகுருக்கள் மூவர், முஸ்லிம் மதத் தலைவர்கள் மூவர் உள்ளடங்குவதாகவும் தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்தப் பிரதேசம் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் இருசாராரும் இந்த இடத்தில் கட்டடப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என்ற உடன்பாடும் இதன்போது எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனாலும் 49 ஏக்கர் பரப்பிலுள்ள தமது காணிகள் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமாக்கப்பட்டமை தமக்குத் தெரியாது எனவும், கடந்த ஆறு வருடங்களாக தமது காணிகளைப் பதிவு செய்வதற்கு தாம் விண்ணப்பித்த போதும் இன்று வரை தமது காணிகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் தற்போது வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்தும் இருக்குமென்றும் மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் நேற்று அங்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் அஹமட் நஸீர் தெரிவித்த போதும், தமது காணிகளின் உறுதித் தன்மை உத்தரவாதப்படுத்தாத நிலையில் மக்களிடம் தொடர்ந்தும் பதற்ற நிலையே காணப்படுகிறது.

## முஸ்லிம் தனியார்... (01ம் பக்கத் தொடர்)

இதைத் தொடர்ந்து முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்துக்கென பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. நீதியரசர் ஸலீம் மர்ஸூபுடைய குழுவுக்குப் புறம்பாக நியமிக்கப்பட்ட இந்தக் குழுவும் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் சம்பந்தமாக எந்தத் திருத்தங்களையும் முன்வைக்காத நிலையிலேயே ஐரோப்பிய யூனியன் ஜீஎஸ்பி வரிச்சலுகையை வழங்கியுள்ளது.

இதேவேளை ஜீஎஸ்பி வரிச்சலுகையைப் பெறுவதற்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் ஒன்றான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் இதுவரை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஜீஎஸ்பி வரிச் சலுகையைப் பெறுவதற்கான நிபந்தனைகள் எதனையும் அரசாங்கம் பகிரங்கப்படுத்தாத நிலையில், இந்த நிபந்தனைகள் ஜீஎஸ்பியின் சாக்கில் அரசாங்கம் விதித்துக் கொண்ட நிபந்தனைகளா என்ற கேள்விகள் தற்போது எழுந்துள்ளன.

## சுயாதீன ஆணைக்குழுக்களின் ... (01 ம் பக்கத் தொடர்)

மேலும் ஆணைக்குழுக்களின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதன்போது அனைத்து ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளையும் முறைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை தாமதமின்றி நிறைவேற்றுமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

கணக்காய்வு சட்டம் உள்ளிட்ட சட்டங்களை நிறைவேற்றுதல், பணிக்குழாமை முழுமைப்படுத்தல் போன்ற குறைபாடுகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை இதன் போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக குறித்த துறையுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் ஜனாதிபதி



இதன் போது தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ அபேகோன் ,அரச சேவைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## 69 ஆவது... (09ம் பக்கத் தொடர்)

தொடர்ந்து வந்த தசாப்தங்களில் இஸ்ரேல் தன்னை யாரும் அசைக்க முடியாத சக்தியாக நிலைநிறுத்தியது. அறபு ஆட்சியாளர்கள் அடிபணியும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதே நிலைதான் இன்றும் நீடிக்கின்றது. 1500 பலஸ்தீனக் கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், காஸாவிலும் மேற்குக்கரையிலும் மக்கள் நக்பாவை நினைவுகூர்கின்றனர். உலக வரலாற்றில் ஒரு சமூகம் தனது தாயகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, அந்த இடத்தில் இன்னொரு நாடு வன்முறையாகப் பிறந்த வரலாறு பலஸ்தீனத்திற்கு மட்டுமே உரியது.

பேராசிரியர் எட்வேர்ட் ஸைட் குறிப்பிடுவது போன்று, வளமான நிலங்களை ஆக்கிரமிப்பதும் பின்னர் மக்களை வரலாறற்றவர்களாக ஆக்குவதும் உலக வரலாற்று நெடுகிலும் நிகழ்ந்து வந் துள்ளது. ஆனால், பலஸ்தீனில் நிகழ்ந்த துயரம் முற்றிலும் வேறுபட்டது. 400 மில்லியன் அறபுகளுக்கு மத்தியில் 4 மில்லியன் யூதர்கள் குடியேற்றப்பட்டு மண்ணின் மைந்தர்கள் அகதிகளாக்கப்பட்ட துயரம் நவீன வரலாற்றில் பலஸ்தீனில் மட்டும் தான் நிகழ்ந்திருக்கிறது.

மேற்கு நாடுகளின் கபடத்தனமும் இஸ்ரேலின் இறுமாப்பும் மட்டுமே இதைச் சாத்தியப்படுத்தவில்லை. அறபுகளின் கையாலாகாத் தனமும் இதற்குக் காரணமாய் உள்ளது. அறபுகள் மிக ஆபத்தான முடிவொன்றை நோக்கி இழுத்துச் செல்லப்படும் நிலையிலேயே பலஸ்தீனர்கள் தமது விடுபடாத எதிர்பார்ப்புகளோடு நக்பா தினத்தை நினைவுபடுத்துகின்றனர்.

## பெரியவர்களும்... (12 ம் பக்கத் தொடர்)

ஒரு சில பெற்றோர்கள் சில நியாயங்களுக்காக அல்குர்ஆனை ஓதாமல் இருப்பதுண்டு. நீண்ட காலம் ஓதாமல் இருந்தமை, சிறுவர்களாக இருக்கும் போது ஓதக் கற்றுக் கொள்ளாமை, ஓதுவதற்கு வெற்கப்படல் போன்றவற்றை காரணிகளாக வைத்து ஓதாமல் இருக்கலாம்.

இம்மனோநிலை மாற்றப்பட வேண்டும். ஒரு இபாதத்தை செய்ய ஏன் நாம் வெட்கப்பட வேண்டும். நாம் ஸூரா பாதிஹா, மற்றும் சிறிய ஸூராக்களை சரியாக ஓதுகின்றோமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் இந்த ஸூராக்களை நாளாந்த தொழுகைகளில் ஓதி வருகின்றோம்.

அல்குர்ஆனை ஓத சிரமப்படுகின்ற மூத்தவர்களுக்கும் பள்ளிவாசல்களில் விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இவர்களுக்கான தனியான மஜ்லிஸ்கள் காணப்பட வேண்டும். இவர்களுடன் மிக கனிவாக, கௌரவமாக நடந்துகொள்ள வேண்டும். அவர்களது சமூக அந்தஸ்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். தனித்தனியாக இப்பணியை செய்ய முடியுமாக இருந்தாலும் அது வரவேற்கத்தக்கது. விளைவில் அனைவரும் அல்குர்ஆனை ஓதக்கூடிய பழக்கத்திற்கு வருவது எமது நோக்கமாக இருக்க வேண்டும்.

இப்படியான நல்ல முன்மாதிரிகளை எமது மஹல்லாக்களில் ஏற்பாடு செய்வோம். அல்குர்ஆனை எல்லோரும் ஓதக் கூடிய நிலைக்கு நாம் வருவோம். இவ்விடயத்தில் பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும். மற்றும் நாம், ஒருவருக்கு ஒருவர் பக்க பலமாக இருந்து செயற்பட்டு அல்லாஹ்வின் அருள்களையும் கூலியையும் பெற்றுக் கொள்வோம்.

## தென்கிழக்கு... (04 ம் பக்கத் தொடர்)

1956 இல் தமிழரசுக் கட்சியின் நான்காவது மாநாட்டில் இணைந்த வடகிழக்கில் தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி தமிழரசும் முஸ்லிம்களுக்கு ஒரு சுயாட்சி முஸ்லிம் அரசும் எனத் தீர்மானிக்கப்பட்டது. 1961 இல் இடம்பெற்ற ஒன்பதாவது மாநாட்டில், தந்தை செல்வநாயகம் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சம ஆட்சி அலகை மீள் உறுதி செய்தார். அதன் பிறகு 1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் சுயாட்சி என்ற விடயம் குறித்துரைக்கப்பட்டது.

இப்போது தமிழ்க் கூட்டமைப்பும் நியாயமான ஒரு தீர்வை வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றது. இந்நிலையில், என்ன நியாயத்தின் அடிப்படையில் மாகாண சபை உறுப்பினர், இதைக் கூறியிருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள மனம் மறுக்கின்றது. இந்தப் பேச்சைத் தமிழ்க் கூட்டமைப்பு மறுத்துரைத்ததாகவோ அல்லது நல்லாட்சி மக்கள் முன்னணி விளக்கம் கோரியதாகவோ அறியக் கிடைக்கவில்லை. ஆனால், ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டதுக்கு இணங்க அஸ்மினை, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அப்பதவியில் இருந்து மீள அழைத்திருக்கின்றது.


வடக்கும் கிழக்கும் இணைவது இரு சமூகங்களுக்கும் பலமாக அமையும் என்பது உண்மைதான். இரு சமூகங்களும் பகையை மறந்து ஒன்றுபட வேண்டியது காலத்தின் கட்டாயமும் ஆகும். ஆனால், தீர்வுத் திட்டம் என்று வருகின்றபோது, வடக்கையும் கிழக்கையும் இணைப்பதைக் கிழக்கு முஸ்லிம்கள் விரும்பவே இல்லை. அதை அவர்கள் விரும்பவே இல்லை எனும்போது, அதை அவர்கள் தமக்கு உகந்த தீர்வாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது கண் கூடு.

எனவேதான், அவர்கள் வடக்கு, கிழக்கை இணைத்தால் அல்லது இணைக்காமல் தீர்வு வழங்கினால் தமக்குரிய பங்கு எதுவாக இருக்க வேண்டும் என்று பேசத் தொடங்கியிருக்கின்றார்கள். இது சம்பந்தனினதும் றவூப் ஹக்கீமினதும் பிரச்சினையில்லை; இங்கு வாழ்கின்ற மக்களின் பிரச்சினை. அந்த வகையில், வடக்கும் கிழக்கும் இணைக்கப்படாதிருப்பதே ஒரு தீர்வு போன்றது என்று கருதுவோரும் உள்ளனர். கிழக்கில் தனி முஸ்லிம் மாகாணமும், இணைந்த வடகிழக்கில் நிலத் தொடர்பற்ற முஸ்லிம் மாகாணமும் அமைய வேண்டும் என்றும் ஒரு சில அரசியல்வாதிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

சமஷ்டி முறை பற்றியும் பேசப்படுகின்றது. ஒருவேளை முஸ்லிம் சுயாட்சி அலகின் எல்லைகள் குறுகலடையுமாக இருந்தால், அல்லது அதன் மையம் தென்கிழக்காக அமையுமாக இருந்தால், அதனைத் தென்கிழக்கு அலகாக ஒரு தீர்வாகப் பெறுவது தொடர்பிலும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

தமிழர்களுக்குத் தீர்வுத் திட்டம் கிடைப்பதை சிங்கள ஆட்சியாளர்களும் வெறும் கற்பனை என்றே முன்னர் கருதினார்கள். இப்போது அந்த நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது. அதுபோல, முஸ்லிம்களுக்கான தீர்வுத் திட்டம் பற்றிய கருத்தியல்களும் மாறலாம் என்பதை நினைவில் கொள்வது நல்லது. எனவே, முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் நியாயங்களையும் விளங்கிக் கொண்டு, அரசியல்வாதிகள் கருத்து வெளியிட வேண்டும்.

எந்தக் காரணத்துக்காகவும் தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கை இணைத்துக் கேட்பதை கேலி செய்ய முடியாதோ, கற்பனாவாதம் என்று கூற முடியாதோ, அதுபோலவே கிழக்கு முஸ்லிம்கள் கோரும் தென்கிழக்கு அலகு போன்ற தீர்வு ஒன்றைக் கற்பனை என்று கூறி யாரும் கேலிக்குள்ளாக்க முடியாது.



## பிராந்தியத்தில்... (07 ம் பக்கத் தொடர்)

பயணிக்கிறது. இவ்வரசாங்கம் முன்னைய அரசாங்கத்தின் தொடர்ச்சி என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பழைய போத்தல் புதிய மூடி எனச் சொல்லலாம். இவ்வரசாங்கம் அடிப்படையான அம்சங்களில் எவ்வித வித்தியாசத்தையும் கொண்டிருக்காது.

- **முஸ்லிம் அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியம் துருக்கிய அரசியலமைப்பு மாற்றத்திற்காக நடாத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவளித்திருந்ததுடன், ஜனாதிபதி முறைமை இஸ்லாத்துக்கு மிக நெருக்கமானது என அறிக்கைவிட்டிருந்தது. இது குறித்த உங்களின் நிலைப்பாடு என்ன?**

உண்மையில் இவ்வறிக்கையானது ஒன்றியத்தின் தலைவர் எமது ஷெய்க் பேரறிஞர் யூசுஃப் அல் கர்ளாவியின் தனிப்பட்டதொரு இஜ்திஹாத். முஸ்லிம் அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியம் இவ்விடயம் குறித்து கலந்துரையாடவோ அல்லது அதனை ஆதரித்தோ, எதிர்த்தோ கருத்து ஏதும் வெளியிடவில்லை.


### மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 12 இதழ்கள் | ரூபா 600.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 24 இதழ்கள் | ரூபா 1200.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 [illegible] People's Bank A/C 058100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ரமழான் இபாதத் அட்டவணை


அன்பின் மாணவச் செல்வங்களே! ரமழான் எம்மை நோக்கி வந்திருக்கின்றது. அது பல அருள்களை கொண்டிருக்கின்ற மாதம். நன்மைகளை நிறைவாக பெற்றுக் கொள்ளக் கூடிய மாதம். எனவே, இம்மாதத்தில் நிறைய நன்மைகள் செய்ய வேண்டும்.

அல்குர்ஆன் இறங்கிய மாதம். எனவே, அல்குர்ஆனை அதிகமாக ஓதுவோம். குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு ஜுஸ்உவை ஓதுவோம். ரமழான் தொழுகையின் மாதம். எனவே, ஆண் மாணவர்கள் ஐவேளை தொழுகையையும் ஜமாஅத்தாக தொழுவதற்கு உறுதிகொள்வோம். பெண் மாணவிகள் உரிய நேரத்தில் தொழுவதற்கு முயற்சிப்போம். ரமழான் ஸதகாவின் மாதம். எனவே, உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவி செய்வோம்.

இங்கு ஒரு அட்டவணை உங்களுக்கு தரப்பட்டிருக்கின்றது. அதனை பூர்த்தி செய்யுங்கள். நிறைவான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவரையும் பொருந்திக்கொள்வானாக.

| நோன்பு | ஐவேளை தொழுகை | தராவீஹ் தொழுகை | குர்ஆன் ஓதுதல் | வுழுவுடன் இருத்தல் | ஸதகா | துஆ |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | |
| 02 | | | | | | |
| 03 | | | | | | |
| 04 | | | | | | |
| 05 | | | | | | |
| 06 | | | | | | |
| 07 | | | | | | |
| 08 | | | | | | |
| 09 | | | | | | |
| 10 | | | | | | |
| 11 | | | | | | |
| 12 | | | | | | |
| 13 | | | | | | |
| 14 | | | | | | |
| 15 | | | | | | |
| 16 | | | | | | |
| 17 | | | | | | |
| 18 | | | | | | |
| 19 | | | | | | |
| 20 | | | | | | |
| 21 | | | | | | |
| 22 | | | | | | |
| 23 | | | | | | |
| 24 | | | | | | |
| 25 | | | | | | |
| 26 | | | | | | |
| 27 | | | | | | |
| 28 | | | | | | |
| 29 | | | | | | |
| 30 | | | | | | |

# எங்கே நிம்மதி?



முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனது நாடு மிகப் பெரிய நாடாக இருந்ததுடன், நிறைய செல்வங்களும் இருந்தன. அவனுக்கு நிறைய மாளிகைகள் இருந்தன. பல ஆடம்பர வசதிகள் இருந்தன. எனினும், அவனுக்கு நிம்மதியிருக்கவில்லை, சந்தோஷம் இருக்கவில்லை. ஒரு நாள் அவன் அரண்மனையை சுற்றி வந்த போது, அவனது பணியாள் ஒருவன் மிகச் சந்தோஷமாக பாடல்கள் பாடிக் கொண்டு வேலை செய்துகொண்டிருப்பதை கண்டு, ஆச்சரியமடைந்தான்.

அரசன் தனது பணியாளிடம், நீ எப்படி இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாய் எனக் கேட்டான். அதற்கு அப்பணியாள் அரசரே, நான் ஒரு பணியாள்தான். எனக்கு ஒரு குடும்பம்

மீள்பார்வை
தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

இருக்கிறது. எனக்கு வீடொன்று இருக்கிறது. எனக்கும் குடும்பத்தினருக்கும் சாப்பிட வருமானம் போதுமாக இருக்கின்றது. எனவே, நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் எனப் பதிலளித்தான்.

இந்தப் பதில் அரசனுக்கு திருப்தியாக இருக்கவில்லை. எனக்கும் இவையனைத்தும் இருக்கின்றனவே. எனினும், எனக்கு நிம்மதியும் சந்தோஷமும் இல்லையே என யோசித்தான்.

இவ்விடயத்தை அரசன் தனது ஆலோசகர்களில் மிக முக்கியமானவரிடம் கூறி, அவன் மகிழ்ச்சியாக இருப்பதற்கான காரணம் என்னவென்று கேட்டான். அதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்: அரசரே, அவன் இன்னும் 99 கழகத்தில் சேரவில்லை என்று நினைக்கின்றேன்.

அது என்ன 99 கழகம் என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அரசன். அது ஒன்றுமில்லை அரசரே. 99 தங்க நாணயங்களை ஒரு பையில் இட்டு, அவனது வீட்டு வாசலில் வைத்து விட்டு வாருங்கள். அதன் பின்னர் நடப்பதை பாருங்கள் என்றார். அரசனும் உடனடியாக வேறொரு பணியாளனிடம், குறித்த பையை அனுப்பி வைத்தான்.

வீட்டுக் கதவை திறந்த பணியாளன் வாசலில் பையைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அதனை யாரும் கண்டு விட முன்னர் வீட்டுக்குள் எடுத்துச் சென்று, திறந்து பார்த்தான். அவனது விழிகள் உயர்ந்தன. அவசரமாக தங்க நாணயங்களை எண்ணிப் பார்த்தான். 99 தங்க நாணயங்களே இருந்தன. மீண்டும் மீண்டும் பல தடவைகள் எண்ணிப் பார்த்தபோதும் 99 தங்க நாணயங்களே இருந்தன. நிச்சயமாக, யாரும் 99 நாணயங்களை விட்டுச் சென்றிருக்க மாட்டார்கள் என்று நம்பிய அவன் வீட்டைச் சுற்றியும், பாதைகளிலும் தேடிப் பார்த்தான். ஆனால், தங்க நாணயம் இருக்கவில்லை.

எனவே, அவன் எப்படியேனும் இன்னும் ஒரு தங்க நாணயத்தை சம்பாதித்து, 100 நாணயங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என நினைத்தான். அடுத்த நாள் அரண்மனையில் அவன் மிகக் கடுமையாக கஷ்டப்பட்டு, வேலை செய்தான். அரசன் அரண்மனையைச் சுற்றி வந்தபோது, அவன் பாடல் எதுவும் படிக்காமல், ஏதோ சிந்தனையில் கடுமையாக வேலை செய்வதை அவதானித்தான்.

அரசன் தனது ஆலோசகரிடம் சென்று விடயத்தை கூறினார். ஆலோசகர் கூறினார்: அரசரே, அவன் இப்போது 99 கழகத்தில் இணைந்துவிட்டான். 99 கழகம் என்பது யாரெல்லாம் தம்மிடம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு போதிய வசதிகள் இருந்தபோதும் இது மட்டும் இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் எனக் கருதிக் கொண்டு, இன்னுமொன்றை தேடுகிறார்களோ அவர்களை குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது என்றார்.

உலகில் நிறைய பேரின் வாழ்க்கை இப்படித்தான் 99 தங்க நாணயங்களை வைத்துக் கொண்டு, இன்னும் ஒரு தங்க நாணயத்தை தேடுவதில் நிம்மதி, மகிழ்ச்சியின்றி கழிகின்றது.

# அபி – குறும் படமும் ஒரு சிறு குறிப்பும்




'அபி' படக்குழுவுக்கு வாழ்த்துக்கள். அவர்களது முதல் முயற்சி என்றாலும் வெற்றியடைந்திருக்கிறார்கள். இயக்குனர் அஸீம் IT துறையில் பணியாற்றக் கூடியவர். தனது கனவை அவர் நிஜப்படுத்தியிருக்கிறார். கமெரா சார்ந்த விடயங்களைக் கற்றுக் கொண்டு அவரே ஒளிப்பதிவாளராகவும் கடமையாற்றியிருக்கிறார். அருமையான காட்சிகள் பல படத்தில் இருக்கின்றன. அவரது கமெரா மொழி சில தருணங்களில் அற்புதமாகப் பயணப்பட்டிருக்கிறது. நடிகர்களும் முதல் முறை நடிகர்கள் என்றாலும் தமது இயலுமையை முழுமையாக வெளிக்காட்டி இருக்கிறார்கள்.

தந்தைக்கும் மகளுக்கும் இடையிலான பாசத்தை அடிப்படையாக வைத்து கதை நகர்கிறது. முதல் பகுதி இருவரின் பாசம் தொடர்பானது. இரண்டாம் பகுதி தந்தை தனது சகோதரியின் சீதனத்திற்காக பணம் தேடி வெளிநாடு போவதால் பிள்ளை எதிர்கொள்ளும் ஏக்கம் தொடர்பானது. கடல் தாண்டினால் வெளிநாடு இருக்கிறது என்ற அம்மாவின் வார்த்தையைக் கேட்டு கடலைக் கடக்க முயலும் குழந்தை. சீதனத்தின் கொடுமையை உணர்ந்து மனம் மாறும் வைத்திய மாப்பிள்ளை என்ற புள்ளிகளில் கதை பயணித்து முடிகிறது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை கடந்த 15 வருடங்களில் கலைத் துறை சார்ந்த ஈடுபாட்டுடன் புதிய முயற்சிகளில் பல இளைஞர்கள் இயங்கி வருகிறார்கள். அந்த வரிசையில்தான் 'அபி' படத்தையும் பார்க்கிறேன். வாழ்க்கைப் போராட்டத்தில் காணாமல் போகாமல் நம் கலைஞர்கள் கரையேற வேண்டும்.

இத்தகைய ஒரு முதல் முயற்சியில் நிச்சயம் சில பலவீனங்கள் இருக்கும். பலவீனங்களை பாடங்களாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்றைய உலகில் இது போன்ற ஒரு முயற்சி குறித்து ஆலோசனை பெற பலர் இருக்கிறார்கள். துறைசார் அனுபவம் கொண்டவர்களது பங்களிப்பு சேரும்போது கலைப் படைப்புக்களை கச்சிதமாக வெளிக் கொண்டு வரலாம் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

நீங்கள் ஒன்றை உருவாக்கிக் காட்டியிருக்கிறீர்கள். அதில் வெற்றியும் பெற்றிருக்கிறீர்கள். 'ஓடுகிற உங்கள் கேமராவை முதலில் நிறுத்துங்கள். இப்போது உங்களைச் சுற்றிலும் நிகழ்கிறதே... அதுதான் சினிமா' என்றார் கியாரஸ்தமி. அபியின் பேசுபொருள் போல பேசப்படாத விடயங்கள் பல இருக்கின்றன. நல்ல கதைகளைத் தேடுங்கள். நின்றுவிடாது உங்கள் பயணத்தைத் தொடருங்கள்.

-இன்ஸாப் ஸலாஹுதீன்

## நூல் அறிமுகம்:


# மனிதப் புனிதர் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி (ஸல்)

### நூலாசிரியர் கலாபூஷணம் அப்துல் ஹாதி முஹம்மது யூசுப் அவர்களின் என்னுரையிலிருந்து...

மனிதப் புனிதர் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் இந்தப் புனித வரலாற்றை எழுதுவது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். அத்துடன் எச்சரிக்கையுடனும் மிகக் கவனமாகவும் எழுத வேண்டியிருந்ததால் பல வருடங்கள் செலவாகின. இதற்காகப் பல்வேறுவகைப்பட்ட அறிஞர்களின் நூல்களை ஆராய்ந்தேன். பல்வேறு இடங்களில் இருந்து தகவல்களைப் பெற்றேன். சிலவற்றில் கற்பனைகளும் கர்ணபரம்பரைக் கதைகளும் தாங்கி இருந்தன. வேறு சிலவற்றில் சுய அபிப்பிராயங்களும் ஊகங்களும் கலந்திருந்தன. எனவே அவற்றை முற்று முழுவதுமாகத் தவிர்த்துக் கொண்டேன்.

அல்லாஹ்வின் தூதரவர்களின் புனித வாக்குகளான ஹதீஸ் எனும் மலர்ச் சோலையிலிருந்து பல்வேறு நறுமண மலர்களை நிறைய நிறையவே பறித்து மணம் பரப்பியுள்ளேன். குறிப்பாக இந்நூலில் வரும் சம்பவங்களுக்குரிய ஆதாரபூர்வமான ஹதீஸ்களைத் தேடுவதில் மட்டும் பல மாதங்கள் செலவாகின. இதற்காக பல அறிஞர்களின் ஆதரவைத் தேடியும் சாத்தியமாகவில்லை. கடைசியில் 7563 ஹதீஸ்கள் அடங்கிய ஸஹீஹுல் புஹாரியின் 5 பாகங்களையும் 5771 ஹதீஸ்கள் அடங்கிய ஸஹீஹுல் முஸ்லிமின் 4 பாகங்களையும் கொண்டு, அந்த ஹதீஸ் கடலில் குளித்து ஆதாரபூர்வமான முத்துக்களைத் தேடிப் பொறுக்கி இந்நூலை மணமாக்கியுள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்.

இவ்வாறு குர்ஆன், ஹதீஸ், முன்னைய நபிமார்களாலும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வேதங்களாலும் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வைப் பற்றி சிறப்பிக்கப்பட்ட கூற்றுக்கள், முன்னறிவிப்புக்கள் பல்வேறு இடங்களில் பரவலாகத் தூவப்பட்டுள்ளன. நபிகளாரின் சுக துக்கங்களில் கலந்து உயிரும் உடலுமாக இணைந்து வாழ்ந்த உத்தம பத்தினிகளின் சத்திய வாக்குகளும் பதிவாகியுள்ளன. [illegible]




எண்ணெய்யாக நின்று பல்லாண்டுகள் பக்குவமாக பணிபுரிந்து நபிகளாரை நுணுக்கமாக அவதானித்து வந்த பண்பான தோழர்களின் பாங்கான வாய்மொழிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

### அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க். எம்.எம்.ஏ. முபாரக் அவர்கள் நூலுக்கு வழங்கிய பாராட்டுரை...

முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி பல நூல்கள் வெளிவந்த போதிலும் இந்நூலின் அமைப்பு மிகவும் வேறுபடுவதாகக் காணப்படுகின்றது. இறுதித் தூதர் பற்றிய அபாண்டங்கள் பரப்பப்படும் இக்காலத்தில் இந்நூல் சரியான வரலாற்றை எடுத்துக் கூறுகிறது. இதனைத் தொகுத்து சரியான தகவலைத் தாவென ஆதாரபூர்வமான நூல்கள் உசாத்துணையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

கவர்ச்சிமிக்க தலைப்புக்களை இட்டதன் மூலம் இந்நூல் ஒரு தலைப்பை முடித்ததும் மற்றதைத் தொடரத் தூண்டுகிறது. தானும் இந்நூலை வாசிப்போரும் ஒன்றுக்குப் பத்து நன்மைகள் அடைந்து கொள்ளும் பொருட்டு நிரப்பமான ஸலவாத்தை அவ்வப்போது நூலாசிரியர் எழுதியுள்ளார். எளிமையான நடையில் எழுதியுள்ள ஆசிரியரின் மொழிவளமும் பாராட்டப்பட வேண்டியது.

### முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க். எம்.எச்.எம் ஸமீல் அவர்கள் வழங்கிய அணிந்துரையிலிருந்து...

எமது இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களின் பிறப்புக்கு முன்னுள்ள நிகழ்வுகள், அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்வுகளுடன் தூதரின் பணிவான பேச்சு, எளிமையான வாழ்க்கை, மற்றையவர்களை மதித்துணரும் பண்பு, மன்னிக்கும் மனப்பாங்கு போன்ற சிரேஷ்ட பண்புகளை சித்தரிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

மேலும், இத்தகைய முயற்சியினை பொது மக்களுக்கு குறிப்பாக கல்வியியலாளர்கள் சமூகத்துக்கும் முன்வைப்பதன் மூலம் உத்தம நபி அவர்களின் புனித வரலாற்றை அறிந்து கொள்ள முடியும் என நம்புகின்றேன். இது பாடசாலை, அஹதிய்யா பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்குப் பயனுள்ளதாக அமையும் அதேவேளை, சாதாரண பொதுமக்கள் அனைவரும் இலகுவான முறையில் நபி அவர்களின் வரலாற்றை விளங்கிக் கொள்ளும் வகையிலும் எழுதப்பட்டுள்ளது.

### காலி இப்னு அப்பாஸ் அரபுக் கலாசாலையின் அதிபர் உஸ்தாத் தீனுல் ஹஸன் (பஹ்ஜி) அவர்களின் அணிந்துரையிலிருந்து...

பொதுவாகவே சீராவில் உள்ள தெவிட்டாத, உணர்வுபூர்வமான அருஞ்சுவையுடன் இந்நூலின் இலக்கிய நயத்துடனான அழகிய தலைப்புகளும் எளிமையான இனிய தமிழ் மொழி நடையும் சேர்ந்து அதற்கு மேலும் மெருகூட்டியுள்ளன. சம்பவங்கள், தகவல்களை ஆதாரங்களுடனும் தகுந்த சான்றுகளுடனும் முன்வைப்பதில் நூலாசிரியர் மிகுந்த கரிசனை எடுத்திருப்பதையும் அதில் அவர் வெகுதூரம் வெற்றி கண்டிருப்பதையும் இந்நூலை வாசிக்கும் போது உணர முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான மெகா பரிசுத் தொகை அறிவிப்பு




இன்று சூதாட்டம் அதிகம் இடம்பெறும் ஒரு துறையாக கிரிக்கெட் மாறியிருக்கின்றது. அதே போன்று தங்களது பணம், நேரம் அனைத்தையும் செலவளிக்கக்கூடிய ரசிகர்களையும் கிரிக்கெட் வரமாகப் பெற்றிருக்கின்றது. இந்த நிலையில் இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடை பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான மெகா பரிசுத் தொகையை ஐசிசி அறிவித்துள்ளது.

அந்த வகையில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் சம்பியனாகும் அணிக்கு 2.2 மில்லியன் டொலர்கள் வழங்கப்படுவதோடு இரண் டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ளும் அணிக்கு 1.1 மில்லியன் டொலர்கள் வழங்கப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபை அறி வித்துள்ளது.

அதேபோன்று அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறும் அணிகளுக்கு தலா 4 இலட்சத்து 50 ஆயிரம் டொலர்களும் ஒவ்வொரு பிரிவுகளிலும் மூன்றாம் இடத்தைப் பிடிக்கும் அணிகளுக்கு 90 ஆயிரம் டொலர்களும் கடைசி இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 60 ஆயிரம் டொலர்களும் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வெற்றிகரத் தலைவரை இழந்தது பாகிஸ்தான்

பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவரான மிஸ்பாஹுல் ஹக் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். பாகிஸ்தான் அணியை ஐசிசி தர வரிசையில் முதல்தர டெஸ்ட் அணியாக உயர்த்திய பெருமைக்கு சொந்தக்காரரான மிஸ்பாஹ், அந்த நாட்டின் வெற்றிகரமான தலைவர் எனவும் வர்ணிக்கப்படுகிறார்.

மிஸ்பாஹுல் ஹக் பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் 2001ம் ஆண்டு தனது 25 ஆவது வயதில் அறிமுகமாகி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக கடந்த வாரம் இடம்பெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியுடன் தனது 43 ஆவது வயதில் ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் நிறைவுபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் வென்ற நிலையிலேயே மிஸ்பாஹுல் ஹக்கின் கிரிக்கெட் வாழ்க்கை நிறைவுக்கு வந்திருக்கிறது.

பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக் காரரான மிஸ்பாஹுல் ஹக், 35 வயதிற்குப் பிறகு 4509 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதற்கு அடுத்த படியாக கிரகம் கூச் 4563 ஓட்டங்களையும், சச்சின் டெண்டுல்கர் 4139 ஓட்டங்களை யும் இந்த வயதில் குவித்துள்ளனர். அதேபோன்று 40 வயதிற்குப் பிறகு 2000 ஓட்டங்களைப் பெற்ற 2 ஆவது வீரர் என்ற பெருமையையும் அவர் தனதாக்கி யுள்ளார். இதற்கு முன் ஜெக் ஹோப்ஸ் 2000 ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

மிஸ்பாஹ்வின் தலைமையில் பாகிஸ்தான் அணி 57 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 26 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

# பிரெஞ்சு ஓபனில் பெடரர் விளையாட மாட்டார்



களிமண் தரை ஆடுகளத்தில் நடைபெறும் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியிலிருந்து 5 ஆம் நிலை வீரரான சுவிட்சர் லாந்தின் ரோஜர் பெடரர் விலகியுள்ளார். 18 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றுள்ள ரோஜர் பெடரர், கடந்த ஆண்டு காயம் காரணமாக பிரெஞ்சு ஓபனில் இருந்து விலகியிருந்தார். சுமார் 6 மாத கால ஓய்விற்குப் பின் களத்துக்கு திரும்பிய பெடரர், கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபனில் பட்டம் வென்றார்.

இந்நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் ஜூன் 11 ஆம் திகதி வரை களிமண் தரை ஆடுகளத்தில் நடைபெற உள்ள கிராண்ட் ஸ்லாம் போட்டியான பிரெஞ்சு ஓபனில் இருந்தும் விலகுவதற்கு பெடரர் தீர்மானித்துள்ளார். நீண்ட காலம் விளையாடும் நோக்கில் இந்த சீசனில் களிமண் தரை ஆடுகள போட்டியைத் தவிர்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரோஜர் பெடரர் தனது முகநூலில், ''கடந்த ஒரு மாதமாக களத்திலும், களத்துக்கு வெளியேயும் கடினமாக உழைத்து வருகிறேன். இந்த ஆண்டின் தொடக்கம் எனக்கு வியக்கத்தக்க வகையில் அமைந்தது. ஆனால் எனது போட்டிகளை நீண்ட காலத்துக்கு திட்டமிட்டு முன்னெடுத்து செல்வதில் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளேன். களிமண் தரை ஆடுகளத்தில் நடைபெறும் ஒரே ஒரு தொடரில் பங்கேற்பது எனது டென்னிஸ் எதிர்காலத்துக்கும், இந்த சீசனின் எஞ்சிய போட்டிகளுக்கு தயாராகுவதற்கும் பலன் தராது'' எனப் பதிவிட்டுள்ளார்.

# நீதான் என் உலகம்

## அன்னையர் தினத்தில் சச்சின் உருக்கம்



உலக அன்னையர் தினத்தையொட்டி சச்சின் டெண் டுல்கர் தனது அம்மாவுக்கு வாழ்த்துக் கூறி உருக்கமான பதி வொன்றை டுவிட்டரில் இட்டுள்ளார். உலக அன்னையர் தினம் மே மாதம் 14ம் திகதி உலகம் முழுவதும் கொண் டாடப்பட்டது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தனது டுவிட்டர் பக்கத்தில் தனது தாய்க்கு அன்னையர் தின வாழ்த்துக்களை தெரிவித்துள் ளார். அம்மாவுடன் தான் இருக்கும் புகைப்படத்தை பகிர்ந்த சச்சின், இந்த உலகத்தைப் பொறுத்தவரை நான் உன் மகன். என்னைப் பொறுத்தவரை நீதான் என் உலகம் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

# றொனால்டோவின் புதிய சாதனை




செவிலா அணிக்கு எதிராக இரண்டு கோல்கள் அடித்ததன் மூலம் கிறிஸ்டியானோ றொனால்டோ ரியல் மெட்ரிட் அணிக்காக 400 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார். மான்செஸ்டர் அணிக்காக விளையாடி வந்த றொனால்டோ, 2009 ஆம் ஆண்டு 94 மில்லியன் யூரோவிற்கு ரியல் மெட்ரிட் அணிக்கு மாறினார். தொடர்ந்து ரியல் மெட்ரிட் அணிக்காக அபாரமான ஆட் டத்தை வெளிப்படுத்தி வரும் றொனால்டோ, அந்த அணியின் நட்சத்திர வீரராகவும் விளங்கி வருகிறார்.

தற்போது நடைபெற்று வரும் லா லிகா தொடரில் ரியல் மெட்ரிட் அணி செவிலா அணியை எதிர்கொண்டது. இதில் ரியல் மெட்ரிட் 4-1 என வெற்றி பெற்றது. இதில் றொனால்டோ இரண்டு கோல்கள் அடித்தார். றொனால்டோ முதல் கோலை அடிக்கும் போது ரியல் மெட்ரிட் அணிக் காக 400 கோல்கள் அடித்த சாதனையாக அது அமைந்தது.

றொனால்டோ ரியல் மெட்ரிட் அணியில் இணைந்த பின்னர் லா லிகா தொடரில் 282 கோல் களும், சாம்பியன்ஸ் லீக் தொடரில் 88 கோல்களும், கோபா டெல் ரெய் தொடரில் 22 கோல்களும், கிளப் உலகக் கோப்பைப் போட்டி களில் நான்கு கோல்களும், ஸ்பெய்ன் சுப்பர் கிண்ணத் தொட ரில் மூன்று கோல்களும் அடித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.



2016 க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் விழா மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.எம்.எம். ரிஷாத் தலைமையில் நடைபெற்றது. இதில் அதிதிகளாக மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எம்.எம்.ஏ. கபூர் அவர்களும் தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் டபிள்யு.எம். ஜெயந்த விக்ரமநாயக்க மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.
(ஏற்பாடு: SDC, OBA, Welfare)



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம் அதனுடைய தற்போதைய தலைவர் கலாநிதி பீ.எம். பாரூக் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, என் [illegible] ரான குழுக் கலந்துரையாடல் ஒன்றும் நிகழ்த்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.